ஓம் பரப்ரஹ்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலாவிலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-5.	சென்னை: பிரமோதூதஸு ஆவணிமீ 1உ	இதழ்-53.
Vol. 5.	1930-ம்ஸு ஆகஸ்டுமீ 16உ	No. 53.



தீட்டுவோ னின்றியாமோ சித்திரந் திகழ்பொற்பாவை
யாட்டுவோ னின்றித்தானே யாடுமோ ததிவலியாழின்
மீட்டுவோ னின்றிக்கீதம் விளையுமோ சராசரங்க
ளூட்டுவோ னொருவனின்றி நன்கமைந் தொழுகுங்கொல்லோ?

[சித்திரம் எழுதுகிறவனில்லாமல் சித்திர முண்டாகுமோ? பிரகாசம் பொருந்திய பொற்பாவையானாலும் ஆட்டுகிறவனில்லாமல் அவைகள் தானே ஆடுமோ? வீணையில் மீட்டுகிறவனில்லாமல் நாத முண்டாகுமோ? அவ்விதமாக, சரம்-அசரமாகிய எல்லாவற்றையும் உண்டாக்கி நடத்துகிற ஒருவனில்லாமல் அவைகள் நன்றாக ஒழுங்குபட்டு நடக்குமோ? நடவாவென்க.]

ஃ

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?" அன்பே சிவம். அன்பு இல்லாதார் வெறும் எலும்பு தோல் போர்த்த உடம்பேயாவார். அன்னோர்க்கு இவ்வுலகுமில்லை, அவ்வுலகுமில்லை, எங்கும் இன்பமு மில்லை. அன்பு அற்றவர் அய்யன் திருவடி நீழல் காணார். அன்பற்ற தன்மைக்கு எங்கும் குற்றங்களே எதிர்படும். அன்பு ஒழிந்த நயனங்கட்கு மகநூல்களில் தவறுதல்களே தோன்

கணவன் வீட்டிலிருக்கும் வரையில் அவனுடன் குலாவி வாயாறப் பேசி அவனைக் களிக்கச் செய்பவளே உண்மையான மனைவியாவாள். கணவனுடன் பேச நெஞ்சிலே ஆசை யில்லாதவள் வஞ்சகக் கள்ளி. ஒரு குடும்பச் சனி.

தும்; குணத்தைக் கிரகித்து மகிழும் உத்தமசிந்தை உண்டாவதரிது. ஜகத்தில் ஸகல பிராணிகளும் எதனால் உஜ்ஜீவிக்கின்றனவெனில் அன்பினாலென்போம். அன்பு என்னும் மழை யில்லையேல் உலகமாகிய பயிர் ஒருபோதும் விளையாது. சூரியனைக் கண்டால் தாமரை மலருகிறது. தாயைக் கண்டால் சேய் ஓடிவந்து காலைக் கட்டுகிறது; மடியில் ஏறுகிறது; முகத்தை வளைத்து முத்தமிடுகிறது; மழலைச்சொற்களை வசனிக்கிறது. இவ்விதமே தாய் சேயைக் கண்டால் எத்தனையோ ஆசையோடும் வாரியெடுத்து உச்சிமோந்து உள்ளம் குளிருகிறாள். இத்தகைய பாந்தவ்யம் பரஸ்பர அன்பினால் விர்த்தியாகிற தென்பதை யார்தான் அறியார்? பரஸ்பர சத்ருத்வம் பாராட்டக்கூடிய இரண்டு மிருகங்கள் கூட ஒரே யிடத்தில் வஸிக்க நேரின் ஒன்றுக்கொன்று விசுவாஸமாகிவிடுகின்றன. ஸகலவித ஆபத்துகளிலிருந்தும் மனிதன் தப்ப வேண்டுமாயின் யாவரிடத்தும் அன்பு பாராட்டவேண்டிய தவசியம். இரும்பைக் காந்தமிழுப்பதுபோல் மனிதர்கள் ஒருவர்மீதொருவர் ஸ்வபாவத்தில் அன்பு பாராட்டத் தக்கவர்களே. ஆயினும், துஷ்ட ஸகவாஸத்தாலும், தன் னயத்தை அளவுக்கு மிஞ்சிக் கருதுவதாலும், பொறாமை - பேராசை முதலிய துர்க்குணங்களாலும், அவிவேகத்தாலும் அன்பை யுணர்த்தும் தன்மையைக் கைசோர விடுகின்றனர். இவ்வுலகில் ஜனித்தபோதே மாதாவின் ஒப்பற்ற அன்பை நமக்குப் பகவான் உணர்த்துகின்றார். பின்னர் ஸகோதரம், மனைவி, மக்கள் முதலிய பலவாற்றானும் நமக்கு அன்பு பாராட்டும் வகையைக் கடவுள் கற்பிக்கின்றார். இவ்வழியில் அன்பின் சுவையை இனிதுணர்ந்து அவ்வன்பை மாந்தர்கள் தம்மிடத்துக்கொண்டு உய்யவேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம். அத்திருவுளக்குறிப்பினை நன்கு தெரிந்துகொண்டு நாம் அவரிடத்து அன்பு செலுத்தலாகிய பக்தியைப் புரிந்து பாகவதோத்தமர்களாகக்கடவோம்.

ஃ

"பகுத்தறிவு என்றா லென்ன?" ஒரு வஸ்து உபயோகப்படுவது-ஒரு வஸ்து உபயோகப்படாதது, இது புண்யம்-இது பாபம், இது நித்யம்-இது அநித்யம் என்னும் வித்யாஸங்களை ஆராய்வதற்கு ஆதாரமாயுள்ளது. நியாயாந் யாயங்களை அறிந்துகொள்வதற்கும் பகுத்தறிவு அவசியம். மனிதர்களில் மகா மூடனாயுள்ளவன்கூட இயற்கையாக நியாயத்துக்குக் கட்டுப்பட்டே யிருக்கிறான். நியாயம் தவறி நடப்பதற்குக் கடின ஹிருதயமும், துஷ்ட ஸகவாஸமும் பொறாமை முதலிய துர்க்குணங்களுமே காரணம். ஒன்றை அபகரிக்க நினைக்கும் ஆரம்பத்திலேயே அவனது மனசாக்ஷி அதனால் பாபம் ஸம்பவிக்குமென்று தடுக்கின்றது. இவனும் தன் செய்கை தவறு என்று உணரத் தொடங்குகிறான். பிறகு துராசை யெனும் பேய் தோன்றி "அடே மூடா! நீ என்ன தைரியமில்லாதவனா யிருக்கிறாய்? இப்படிப் பயந்து காலம் கழித்தால் உன் காரியம் ஆகுமா? நாலு பேர்களைப்போல் நீயும் பணக்காரனாக வேண்டாமா? ஒரு காரியத்தைச் செய்ய எத்தனித்துப் பின்னடைவது கோழைத்தன மல்லமா?" என்று கூறுகிறது. விவேகமில்லாத மனிதன் துராசையின் தூண்டுதலுக்கு உட்பட்டுத் தவறு செய்யவும், பிறர்பொருளை

குழந்தைகள் அதிகம் பிறப்பதைத் தடுப்பதை மாத்திரம் ஒரு காரணமாக வைத்துக்கொண்டு மனைவியைத் திருப்தி செய்யாதது கிரம மாகாது. குழந்தைகளது பயத்திற்காக மனைவியின் இச்சைக்கு இணங்க மறுப்பது கோழைத்தனமாகும். கர்ப்பத்தடைக் கருவியுங்கூட வழக்கமாகிவருகிறது,

யபகரிக்கவும் முயலுகிறான். இவ்விதமாக, முன்செய்த தீவினைகளுக்கேற்ப துரெண்ணங்களும், துஷ்ட ஸகவாஸமும், பேராசையும் ஏற்பட்டு மனுஷ்ய னது பிடரியைப் பிடித்து நெட்டித் துன்மார்க்கத்தில் தள்ளுகிறது. ஆயினும், கருணாநிதியாகிய பகவான் மேற்கண்ட மனிதன் திருந்தி நல்வழியில் நடக் கட்டுமென்று அவனுக்காகப் பற்பல நீதிமார்க்கங்களை ஏற்படுத்தியிருக்கிறார். வேதசாஸ்திர ஆராய்ச்சியாலும், ஸத்ஸகவாஸத்தாலும், தோஷமற்ற காரியங் களைச் செய்வதாலும் துன்மார்க்கத்தில் மனதைச் செல்லவிடாமல் ஒவ்வொரு வனும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளட்டு மென்பது கடவுளின் கருத்து. இதை யறிந்து நடப்பதற்கே பகுத்தறிவு என்பது.

ஃ

"சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது" அதிக உழைப்பால் நமது தேகம் சோர்ந்து ஒருபக்கத்திற் கிடந்தாலும் மனது சும்மா இருக்கின்றதா? நமது அநுமதியின்றியே ஸத்விஷயமாயும், அஸத்விஷயமாயும் நமக்கு ஸம்பந்தப்படாத சங்கதிகளைப்பற்றி யோசித்து நம்மை அவஸ்தைக் குள்ளாக்குகிறது. திடீரென்று நமக்கு ஸ்வயஞாபகம் வந்தவுடன் நாம் மனதின் செயலை வெறுத்து, அந்தமாதிரி இடம் கொடுக்காமல் திருப்ப எத்தனிக்கிறோம். ஆயினும் என்ன? சிறிது நேரத்திற்கெல்லாம் அதேமாதிரி மனம் பலவித யோசனைகட்கு ஆரம்பித்துவிடுகிறது. இவ்விதம் சஞ்சலிக்கும் மனத்தை நாம் நம்முடைய ஆளுகைக்குள் கொண்டுவராமல் அதன் போக்குப் படி விட்டால் நம்மை முற்றிலும் நாசம் செய்துவிடும். மனம் நல்வழிப்படுவ தற்கும், தீய வழியை நாடுவதற்கும் நமது ஆகாராதிகள்கூட ஒரு காரண மாகிறது. நாம் உண்ணும் அன்னம் மூன்று வகைகளாகப் பிரிகின்றன. இதில் முதற்றரமானது மனதைப் போஷிப்பதற்கும், இரண்டாந்தரமாயுள் ளது தேகத்தைப் போஷிப்பதற்கும் உபயோகப்படுகின்றன. பயனற்ற மூன் றாவது பாகமானது தேகத்தைவிட்டு வெளியே நீங்குகின்றது. தான் உட் கொண்ட ஆகாரத்துக்குத் தக்கபடி மனதும் சஞ்சலிக்கத் தொடங்குவதால், உண்ணும் வஸ்துக்களிலும் இன்னது விலக்கத்தக்கது, இன்னது கொள்ளத் தக்கது என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். விரதாதி காலங்களில் மனத்தை ஒரு நிலையில் நிறுத்துதற்காகவே ஆகாராதிகளையும் குறைத்து உபவா ஸம் இருக்கும்படி விதித்துள்ளார். எவ்வளவோ ஸந்தோஷ சித்தர்களாய் பகவா னைத் தரிசிக்க ஆலயத்திற்குச் செல்லுகிறோம். சென்று நாம் செய்வதென்ன? பகவானிடத்தில் நமது சிந்தையைப் பதியவைப்பது ஒரு நிமிஷமாத்திரம் கூட இல்லை. மனதைக் கண்டபடி அலையவிட்டு நாம் வந்த காரியத்தை மறந்துவிடுகிறோம். இதுவரை மறந்தது போதும். இனியேனும் மனத்தை யடக்கும் மாண்புறு காரியத்தில் நாம் ஏமாறாதிருக்கக் கடவோம்.

ஃ

"ஐக்கிய சுகம்" ஐக்கியத்தை மனிதர்கள் விரும்புவதற்காகவே ஸ்திரீ புருஷ சேர்க்கையில் எல்லாம் வல்ல இறைவன் ஓர் அரிய இன்ப ஸுகாநு பவத்தை யுண்டாக்கியிருக்கின்றார். சரீரத்திலுள்ள பஞ்சபூதங்களும் பிரிந்து

பெண்கள் மற்ற பெண்களை வசப்படுத்தித் தங்களுக்கு வேண்டியது கேட் டுப் பெற்றுக்கொண்டு அப்பெண்களின் புருஷர்கட்கு இவை எட்டாமலே செய்துவிடுகிறார்கள். இதனால் குடும்பத்திற்கு நேரும் நஷ்டங்கள் அதிகம்.

போனால் என்ன நேரும்? தேகம் அழியும். அடுப்பு, அரிசி, பாத்திரம், நெருப்பு, நீர், சமைப்பவன் ஆகிய இவர்கள் பிரிந்துபோனால் அன்னம் சூன்ணமே. ஜகத்தில் ஸர்வ பிராணிகளிலும் ஸ்திரீ—புருஷர்கள் என்ற இரண்டு வகுப்புகளுண்டல்லோ? இவ்விரு வகுப்பினரும் பிரிந்துபோனால் சில வருஷங்களுக்குள் ஜனன மென்பதின்றி உலகமே அழிந்துபோம். அரசனும் பிரஜைகளும் ஐக்கியமின்றி ஒருவரையொருவர் விரோதித்தால் தேசம் க்ஷேம மடையாது. ஹைட்ரோஜன் (Hydrogen) ஆக்ஸிஜின் (Oxygen) ஆகிய இரண்டு வாய்வுகளும் சேர்ந்தால் ஜலமாகும்; பிரிந்தால் ஜலமில்லை, தாகம் தீராது, பிராணன் நில்லாது. உலகத்தில் எவ்விதமான ஸம்பவமும் ஐக்கியத் தினாலும் பிரிவினாலும் உண்டாகின்றது. ஆகவே, ஐக்கியம், சங்கம், சேர்க்கை ஆகிய இப்பதங்கள் அதிமுக்கியமானவை. ஐக்கியத்தாலுள்ள சுகத்தைக் கஷ்டப்பட்டே அடையவேண்டும். தன் கர்ப்பத்திலுள்ள சிசுவைத் தாய் பிரஸவவேதனை யடைந்தே அதன் முகத்தைக் கண்டு இன்புறவேண்டும். மனைவியும் கணவனுமாவதற்கு விவாக சிரமங்களை ஏற்றாலன்றி முடியாது. இவ்விதமே, மனுஷ்யர்களும் பகவானைச் சேர்ந்து நித்தியானந்த மெய்துதற்கு ஐம்புலன்களை யடக்கித் தியானம் முதலியவற்றைச் செய்தல் ஆவசியகம். உலகிலுள்ள ஐக்கிய சுகங்கள் யாவற்றிலும் பகவானைச் சேருவதே பேரின்ப மாம். ஏனைய ஐக்கிய சுகங்களில் அதிருப்தியும் குறைவு மிருக்கும். இறைவனது திருவடிநீழலின் இன்பமோ வாக்காற் சொல்ல இயலாதது; சிந்திக்கவும் முடியாதது; உண்ண உண்ணத் தெவிட்டாதது; தேனூறு பாய்வது.

ஃ

"ஸ்ரீராமஜெயம்" என்று சொல்லாதவ ரில்லை. பிரபுவாகிய நாராயணன் தசாவதாரங்களை யெடுத்தார். எதற்காகவெனின், ஸர்வ ஜனங்களையும் இரக்ஷிப்பதற்காக என்போம். அவற்றில் ராமசரித்திரம் உத்கிருஷ்டமானது. மனிதர்கள் நடக்கவேண்டிய முறைமைகளைப்பற்றி ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டுமாயின், அவன் இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டு இதிகாஸங்களைப் படித்தாற் போதுமானது. ஸ்ரீராமன் நாராயணனாயிருந்தும் மனுஷ்யாவதாரம் எடுத்ததால் தாய்தந்தையரின் சொற்படி வனவாஸம் சென்று ரென்றும், மகா அழகு வாய்ந்தவரா யிருந்தும் பிற மாதர்களின் வலையிற் சிக்காமல் ஏகபத்தினி விரதனாயிருந்து காலம் கழித்தா ரென்றும், தன் பத்தினியை எடுத்துச்சென்ற இராவணனை ஸம்ஹரிப்பதற்காகத் தன்னைப் போலக் கஷ்டமடைந்த சுக்ரீவனோடு நட்பு கொண்டா ரென்றும், கஷ்ட காலம் வந்துற்றபோதும் ஸகோதரனை இலக்ஷ்மணனைக் கூட அழைத்துச் சென்று ரென்றும், விபீஷணருக்கு அருளிய வாக்கை நிறைவேற்றி மகதைசுவரியங்கள் நிறைந்த இலங்காபுரியை அவருக்கே ஈந்தாரென்றும், கடைசியில் சீதையின் கற்பைப்பற்றித் தாம் நன்று யறிந்தவராயிருந்தும், உலகத்தாரின் ஸம்மதத்தைப் பெறவேண்டி அவ்வணங்கையை அக்கினியில் மூழ்கிவரும்படி ஆக்ஞாபித்தாரென்றும், பின்னர் பட்டாபிஷேகமாகி மகோன்னத பதவியை யடைந்தவுடன் முன் உதவிசெய்த வானரங்களை மறவாது அவரவர்கட்குத் தக்கபடி பரிசளித்தா ரென்றும், பிரியனான குகனைக் கேவலம் வேடனென்று

பிறர் கோபிக்கும்பொழுதெல்லாம் சிரித்து நின்று, கோப அக்கினியில் குளிர்ந்த ஜலத்தை ஊற்றிவிடும் சாமர்த்தியம் சிலருக்கு இயற்கையில் உளது.

அலக்ஷியம் செய்யாமல் எக்காலத்திலும் அவனை உற்ற நண்பனாகக் கொண்டாரென்றும், ராமாயணத்தில் படித்த ஒருவன் ஸத்குணங்களையடைய வேறொரு சாஸ்திரம் கற்கவேண்டுமோ ? புண்யமென்றால் கையும் காலும் முளைத்ததல்ல. எது மனதுக்கு ஸந்துஷ்டியைக் கொடுத்து, நல்லவனென்று கொண்டாடப்படும்படி செய்கிறதோ அதுவே புண்யமாகும். படிப்பதுடன்கூட பகவத்பக்தியும் அத்துடன் சேர்ந்து மனதில் உதயமாவதற்கு இராமாயணம் திவ்யமான நூல். எந்த மதஸ்தராயினும் தத்தம் மதஸிராந்தங்களில் மகிமை யில்லையென்பரேல், அவர்களை நாஸ்திகரென்று சொல்லத் தடையென்ன ?

ஃ

“ சிவஸ்மரணையே சிறந்த ஸ்மரணை ” பரமசிவன் தம்மை ஸ்மரிப்பவனது பாபங்களைப் பரிகரித்து சிறந்த முக்தியை யளிக்கிறார். சிவ என்று சொல்லும்போதே பக்தர்களின் மனம் பரமானந்த மடையும். பரமசிவனை ஸம்ஹார கர்த்தாவென்று புராணங்கள் கூறுகின்றன. அப்பெருமானை நினைக்கும்போது அடியிற்கண்ட விஷயங்கள் நமது ஹிருதயத்தி லுதயமாகின்றன. முதலாவது மகாதேவனது ஜடாமகுடத்தில் விளங்கும் சந்திரன் ; பின்னர் கங்கையம்மன் , அதன்பிறகு லலாடத்திலிருக்கும் விபூதி ; பிறகு நீலகண்டம்; அதன்பின் ருத்ராக்ஷமாலை, மான், ஆநந்தார்த்தனமாடும் கால், அரவிந்தம் போன்ற பாதம் முதலியவைகள். சந்திரன் ஜில்லென்றிருப்பதால் மனதுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை விளைக்கிறான். கங்கை மகா பாபியைக்கூட புண்யவானாக்கும் சக்தி பெற்றது. விபூதி ஸகல பீடைகளையும் நெருங்கவொட்டாமல் துரத்தும். நீலகண்டம் விஷத்தைப்போக்கி எப்போதும் ஈசுவரன் இரக்ஷிப்பாரென்ற நம்பிக்கையை நிலைநாட்டும். ருத்திராக்ஷம் ஈசுவரனுடைய கிருபையை நம்மிடம் இழுக்கும். அவருடைய குஞ்சிதபாதம் எல்லையில்லாத இன்பத்தை யீந்து ஜீவன்முக்தியைக் கொடுக்கும். ஆகவே, இத்தனை மங்களங்களையும் அளிக்கவல்ல சிவமூர்த்தியை ஸதா தியானிக்கக்கடவோம்.

ஃ

“ போதநாயகனை யுன்னாப் புந்தி ” ஞான நாயகனாகிய கடவுளை நினையாத உள்ளமானது கொடிய நெருப்புக்குச் சமானமாம். அக்கடவுளின் மலர்ந்த புஷ்பங்களுக்குச் சமானமாகிய பாதங்களை வணங்காத தலையானது கெட்டுப்போன கல்லுக்கு ஒப்பாம். பூமியில் சிறப்புப் பொருந்திய அக்கடவுளைத் துதிக்காத வாயானது பரிசுத்தமானதல்ல. அக்கடவுளை நினைந்து அன்போடும் ஆநந்தபாஷ்பம் சொரியாத கண்கள் புண்களா மென்க. இக்கருத்தைப் பின் வரும் பாடலிற் காண்க :—

போதநா யகனையுன்னாப் புந்தியே வேந்தீயோப்பாந்
தாதல ரடிவணங்காத் தலைகுலை சிலையாஞ்சீர்சான்
மாதலத் தவனைவாழ்த்தா வாயது தூயதன்று
காதலன் போடுநீர்தூவாக் கண்களே புண்களாமால்.

எல்லாச் செல்வங்களும் உள்ள லக்ஷ்மி “ எனக்கென்ன? என் தாய்வீடு இருக்கிறது” என்று கணவனைப் பார்த்து ஒருபோதும் கர்வித்துச் சொல்லாள். தாய்வீடு தரித்திர வீடாயுள்ள தருணிகள்தான் தாய்வீட்டைப் பிரமாதமாகப் பேசிக் கணவனைவிட்டுப் போய்விடுவதாகச் சொல்லிப் பயப்புவார்கள்.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஸு ஆவணிமீ 1உ

கடவுள் கொடுத்த கர்வம், அல்லது கம்பீரம்.

ஆழ்ந்து நினைத்துப் பார்ப்பவர்கட்கே அதனதன் சுவை அடுக்கடுக்காகத் தோற்றும். நினைக்க நினைக்கத் தெவிட்டாத சிந்தனைகளின் சீரிய ஊற்று நீடித்துப் பாயும். அவ்வூற்றுகளின் வழியே நாமும் சென்று கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) எத்துணை மேன்பாடு படைத்துள்ள தென்பதைக் கண்டுவருவோம். தானே கொள்ளும் கர்வம் தன்னை மறந்த நிலையில் அகங்காரத்தின் வசப்பட்டுத் தோன்றுவதாகும். கடவுள் கொடுத்த கர்வமோ (கம்பீரம்) அவரது பரமகருணையால் மனமுவந்து அருளிய ஒப்பிலாத ஓர் நன்கொடை. அது ஏனைய இழிந்த மாந்தர் கொள்ளும் கர்வத்தைப் போன்றதன்று. மானுஷ்யரது கர்வங்களில் மாசு படிந்து இருள் கவ்வியிருக்க, இத்தெய்வீக கர்வத்திலோ பரிசுத்தமான உள்ளத்தின் பரிமளம் நிறைந்து திவ்யதரமான ஜோதி சூழ்ந்துள்ளது. இத்தூய்மையான கர்வத்தைக் கொண்டவன் முன்னிலும் அதிக பக்குவவியாய், கடவுளினிடத்தும், அவரது ஸமஸ்த படைப்புகளினிடத்தும் அளப்பரிய அன்பு மிக்கோனாகி அடியார்க்கு அடியனாகின்றான். வெறுப்பு, சினம், அலக்ஷியம், மமதை அவனிடத்து இல்லவேயில்லை. அவன் உருவே ஒருவித கர்வத்தின் (கம்பீரத்தின்) சாயை படிந்து எவ்வரையும் அவனுக்குள் அடங்கி நடக்கத் தூண்டிவிடுகின்றது. இவ்வித கர்வி கபட உலகினரின் முன்னிலையிலோ—அன்னோரிலும் மேன்பட்ட தன்மையினனாய், அவர்களை லக்ஷியம் செய்யாதவனாய், தன் தலையை நிமிர உயர்த்தி, அவர்களது துர்ப்பாவங்கட்கு இரங்குபவனாக விளங்குகின்றான். தங்களை ஒரு பொருட்டாக மதியாதது கண்ட கபட உலகினர் அதற்காக அவனை இகழ்ந்து நகைத்துக் கேவலம்

போயவிட்டது நன்றுமாருத்ததாக எண்ணம். கையிலிருப்பதோ உசக் கோரம். இனி வரப்போவது ஒன்றுண்டானால் அங்கு அவலற்ற வாஞ்சை.

செய்ய, உண்மை தெளிந்தோரும் அன்பு ததும்பினேரும் அவன் இருக்குமிடம் தேடிவந்து கட்டியணைத்து ஆநந்தக் கண்ணீர் பெருகு கின்றனர். கபடநெஞ்சு எதைக் "கர்வம்" என்று நினைக்கின்றதோ, அதையே அன்பு நெஞ்சு "கம்பீரம்" என்று கொண்டாடுகின்றது. அவனது கர்வம் (கம்பீரம்) அவனுக்குத் தகும் தகும் என்று பாராட்டி அன்பினுள்ளம் அவனை வாழ்த்துகின்றது. கபடநெஞ்சோ அவனது கம்பீரத்தைக் கர்வம் எனப் பேதமாய்த் தாழ்வாய்ப் பொருள் படுத்திக்கொண்டு, அதைக் காண மனந்தாளாது, எவ்வாறேனும் சிறு மைப்படுத்தச் சிக்கலான முயற்சி நாடிக் குலைக்கின்றது. கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) இந்தக் குலைக்கும் ஓசையை நோக்கிப் புன்னகை மிகுகின்றது. சூரியனின் ஒளியைக் கண்டு நாய் குலைப்ப தனுல் சூரியனுக்கு ஏதாகிலும் நஷ்ட முண்டா?

ஃ

கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) எத்துணை வறுமையின் போதும், எவ்வளவு கஷ்டத்தின்போதுங்கூட மற்றவனிடத்துத் தலை வணங்கேன் என்கிறது. கூழுக்கு இட வீட்டில் உப்புக்குக் கதி யில்லாதபோதுங்கூடச் சிரம் குனிவதே யில்லை. உப்பற்ற பருக்கை யை யுண்டுவிட்டுத் தன் வீரத்தில் சோர்வின்றி நிற்கின்றது. ஒரு சிறு தவறுதலைப் பிறரிடத்துக் கண்டபோதுங்கூட அந்தக் கர்வம் அவரை வெறுக்கின்றது. அவருக்கு அது அஞ்சுவதே யில்லை. அவரது பிழைபாட்டை நேருக்குநேரே எடுத்துக்காட்டியும் விடு கின்றது. தானும் தவறு வழியிற் செல்லச் சம்மதிப்பதில்லை; பிறரை யும் தவறுமார்க்கத்தில் செல்ல விடுவதில்லை; செல்வோரைக் கண்டும் அது சகிப்பதில்லை. தன்னை சத்தியவந்தனுய் யதார்த்தநிலையில் வைத்துக்கொள்கிறது. எவரும் தன்னைப்போலவே பரிசுத்தமாய் அன்புமயமாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறது. ஸன்மார்க்க மும் ஸத் ஸகவாசமுமே அதற்குப் பிரியம். மற்றவரும் அப்படியே இருக்கவேண்டுமென்பது அதன் அபீஷ்டம். அவ்விதம் இராதவர்க ளுடன் அடுத்த நிமிஷமே அது பிரிந்துகொள்கின்றது; தூர விலகிப்போய்விடுகின்றது. என் இப்படி? கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) பால் போன்றும் பரிசுத்தத் தன்மை வாய்ந்தது. பாலில் சற்று தோஷம் நேரிடினும் பால் உடனே உடைந்துவிடும்; கெட்டுப் போகும். அதாவது, பாலானது தோஷத்தைப் பொறுக்காது. அவ்விதமே, கடவுள் கொடுத்த கர்வமும் (கம்பீரமும்) தன்னிடத்

வீட்டுக்கூரையில் நெருப்புப்பற்றி யெரிகிறதென்று சொன்னல், உள்ளே யிருப்பவன் நான் பார்க்கவில்லை, நெருப்பு இங்கே வரவில்லையென்று மூட ஸமாதானம் செய்துகொண்டு இடத்தைவிட்டு அசையாமலிருப்பதுபோல், தோஷ காரியங்களைச் செய்து, உடனே அதனுடைய பலன் கிட்டவில்லை யென்று ஸந்தோஷப்படுகின்றனர் சிலர். இவர்களின் அறியாமை என்னே!

துள்ள பிழையையும் சகிக்காது; பிறரிடத்துக் காணும் குற்றத்தையும் பொறுக்காது. இது அதன் ஜன்ம இயற்கை.

ஃ

கடவுள் கொடுத்த கர்வத்தைப் பெற்றோன் உண்மையே ஓர் உருவாய்த் திரண்டவன். அவன் மனத்தில் களங்கமே யில்லை. அவன் தனக்குக் கோபம் வரின் அதையும் வெளியிற் கொட்டுவான். வருத்துவதுண்டாகில் அதையும் சொல்லிவிடுவான். ஆத்திரப் படுவானாகில் அதையும் தெரிவித்துவிடுவான். அவன் எதையும் தன் மனத்துள் மறைப்பதில்லை. அவனது யதார்த்த சுபாவம் தெரிந்தவர்கள் அவனது கோபதாப வருத்த ஆத்திரங்களை ஓர் குற்றமெனக்கொள்ளாது, அவனுக்குச் சமாதானம்கூறிச் சாந்தப் படுத்தவே முயல்வர். ஏனெனில், கள்ளங்கபடற்ற அவனது உள்ளத்தைத் தெரிந்தோர் அவனது கோப ஆத்திரங்களுக்கு நியாயமுண்டென்றும், தங்களின் தவறுதலான செய்கையே அதற்குக் காரணமென்றும் உணர்ந்து, தங்கள் பிசகைத் திருத்திக்கொண்டு அவனது மனது குளிரும்படி நடக்கத் தொடங்குவார்கள். அவ்விதம் தாங்கள் நடப்பதை ஒரு ஸந்தோஷமாகவும் கொள்வார்கள். அந்தக் கர்வ (கம்பீர) குண ஸம்பன்னனை உயர்வாகவும் கருதிப் பாராட்டுவார்கள். கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) கொண்டவன் தன் எஜமானனிடத்துப் பரிசுத்த ஹிருதயத்தோடும் இருந்து கடவுள் அறிய மனஸ்பூர்வமாக உழைப்பான். தனது எஜமானனிடத்து ஏதேனும் பிழை காணில், அவரது நலமே நாடி அச்சமற்று அதைக் கண்டிப்பான். எஜமானனும் அதை ஒப்பி ஏற்றுக்கொள்ளவே வரும் தான் ஊழியம் செய்யுமிடத்திலும் கர்வமே (கம்பீரமே) பற்றி நிற்பான். அந்தக் கர்வமும (கம்பீரமும்) அவனுக்குத் தகுமெனறே அங்குள்ளோரால் மனதொப்பிச் சொல்லக்கூடியதாகவே இருக்கும். உள்ளொன்று வைத்து வெளியிலொன்று பேசும் கபடக் களஞ்சியமான ஒரு குமாஸ்தாவைவிட, கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) கொண்ட பரிசுத்த மனத்தினனான குமாஸ்தா எத்துணையோ மேலன்றோ? அவனது தெய்வீக கர்வம் பிறருக்கு நல்லது செய்வதன்றி எக்காலத்தும் தீயது புரிவதில்லை.

ஃ

கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) கொண்டவனிடத்துச் சிநேகம் கொள்ளுதல் வெகு கஷ்டமாக இருக்கும். அனபற்றவர் அவனை நாடி நட்பு கொள்ளுதல் கனத்த பிரயாசை. அந்தக் கர்வி

கிழக்கு ஒளியுடைத்து; மேற்கு பணமுடைத்து. தவமும் கடவுளுணர்ச்சியும் இங்கு பெருமை பெறுவன; வாணிபமும், பொருட் குவியலும் அங்கு பெருமை பெறுவன. இங்கு விட்டாலே பேரின்ப வீடு; அங்கு விளைத்தலே இன்ப விருப்பு. இங்கு யோகம், அங்கு போகம்.

சுலபத்தில் ஏமாறுதவன். பிறர் மனத்தை ஊடுருவிப் பார்த்து அங்கு அன்பின் பசை ஏதேனும் உளதா, அல்லது வஞ்சக ஊற்று தானா என்று மிகமிக ஆராய்பவன். ஒரு சிறு செய்கையிலிருந்தே முழுக் குணத்தையும் அறிந்துவிட வல்லவன். சுயநலமே உருக் கொண்டு சுயகாரிய நோக்கமாகவே பொய்யன்பு உணர்த்திப் பேச வருவாரைச் சட்டெனத் தெரிந்து, சுருக்கமான பேச்சுகளில் ஸம்பாஷணையை முடித்துவிட்டு, சீக்கிரமே அவர்களை அனுப்பிவிடக்கூடியவன். உண்மையன்பு மிகுந்தாரிடத்தோ அடிமைத் தொண்டு புரிந்து இரவுபகல் பேதமற்று ஓயாது பேசி அவர்களின் ஊழியனுவான். இந்தக் கர்வியிடத்தில் சாமான்யர் நெருங்குவதில்லை. எவ்வளவு சொந்த உறவினராயினும் எட்டிநின்று சில வார்த்தைகளே பேசிச் சென்றுவிடுவர். இத்தகையோரிடத்து இந்தக் கர்வியும் வாய்பேசி ஸல்லாபிப்பது வெகு சுருக்கமாகவே இருக்கும்; வார்த்தைகளும் அதிகம் வெளியில் வராது. மௌனமாய்ப் புன்னகை மிகுந்து அவ்வளவில் உபசரித்து அத்துடன் நின்றுவிடுவான். ஆனால், தனக்குத் தகுந்தவரென்றும், மேலோரென்றும் தோன்றுமிடங்களிலோ வலிய வலியப் பேசிப் பெரிய உபன்யாசங்கள் செய்வான். அன்னோரைக் காணும்போதே அவனுக்கு ஒரு தனி பரவச முண்டாகிவிடும்.

ஃ

கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) தாங்கினேன் கடவுளின் ஆசி பெற்றவனன்றோ? கடவுளின் ஆசி என்ன செய்யும்? உலக கஷ்டங்களையே வெகுவாய் அனுபவிக்க வைக்கும். இன்பம் நுகரும் காலம் மிகச் சிறியதாகவே இருக்கும். சோதனைகளே மேன்மேலும் பெருகும். சிறுமையும் வறுமையும் பெரிதும் வாட்டும். இவ்விதம் நொந்துபடுங் காலந்தன்னிலும் அந்தக் கர்வம் (கம்பீரம்) கீழ் நோக்காது மேல்நோக்கியே நிற்கும். ஒருசமயம் கீழ்நோக்க நேர்ந்து விடினே, கடவுள் அதற்குச் சற்றும் மனம் ஒப்பார். உடனே அவனுக்கு உதவியளித்தும் உயர்வுகொடுத்தும் அவன் கீழே விழாதவாறு கைதூக்கிவிடுவார். அவன் பக்கத்திலேயே என்றும் துணையாக இருப்பார். அவனை எதிர்ப்போரையும், துன்புறுத்துவோரையும், வஞ்சிக்கும் பதர்களையும் கண்டித்துத் தண்டித்து அடக்கி, அவனது நொந்த வுள்ளம் தேறி ஆறுமாறு செய்வார். தமது அருள்கொண்ட கர்வி பிறருக்குச் சிரம் குனிந்து தாழ்ந்திட இறைவன் சம்மதிப்பதே யில்லை. அவன் தன் வாழ்நாள் முற்றிலும் கர்வ (கம்பீர) குணம் படைத்தவனுகவே விளங்கிடச் செய்திடுகிறார். ஒரு ஜீவனம் தவறிடினும் மற்றொன்றில் பிழைக்கும் வழியுணர்த்தி, இவ்விதமே

கணவனை—வீட்டுத்தலைவனைப் புஷ்டியான உணவு தந்து கொழுக்க வைப்பது எதற்காக? ஆட்டைக் கொழுக்கவைப்பது எதற்காக? இரண்டும் சொந்த நலத்திற்கே. வீட்டுத் தலைவன் போனதும் தரித்திரம் சூழ்கின்றது.

நெடுக அநுகூலங்கள் புரிந்து என்றும் துணையாகிக் காத்திடுவார். இது இறைவனது எண்ணிலாத் திருவிளையாடல்களில் ஒன்றாகும்.

ஃ

அரிச்சந்திரனது சத்திய கர்வம் (கம்பீரம்) எத்தகையது? அந்தக் கர்வத்திற்குக் கிடைத்த கடவுளின் ஆசி எத்துணை உயர் நலஞ் சார்ந்தது? அந்த சத்திய கம்பீரம் விஸ்வாமித்திரனது அகங்கார புத்திக்கு ஒரு கர்வமாகவே தோற்றியது. 'இந்த அரிச்சந்திரன் சத்திய வாக்கிய பரிபாலகனென்று கர்வித்துப் போயிருக்கிறான்; இவன் கர்வத்தை ஒரு நொடியில் அடக்குகிறேன்' என்று கூறி விஸ்வாமித்திரன் ஆக்கிரகத்துடன் எழுந்தான். அது மனுஷ்ய கர்வமாய்ச் சாமான்யமாக இருந்தால் ஒரு நிமிஷத்தில் அடக்கிவிடலாம். அதுவோ அரிச்சந்திரனுக்குக் கடவுள் கொடுத்த சர்வம். அந்தக் கர்வத்தைச் சிதைக்க முடியுமோ?—விஸ்வாமித்திரனால் முடிந்ததோ? "பதி யிழந்தனம், பாலனை யிழந்தனம், படைத்த நிதி யிழந்தனம், இனி நமக்குளதென நினைக்கும் கதியிழக்கினும் கற்றவரை யிழக்கிலோம்'' என்று திடமனதோடும் அரிச்சந்திரன் கூறியபோதுதான், அவன் கொண்டது கர்வமல்ல, கம்பீரம், சத்திய கம்பீரம் என்று விஸ்வாமித்திரன் உணர்வதானான். இறைவனது அருள் பெற்ற அரிச்சந்திர பூபாலன் பட்ட பாடுகட்கு எல்லை யுண்டோ? தெய்வம் தமது அடியார்களையே அதிகமாகச் சோதிப்பது வழக்கம். எனினும், பரமனது கருணை வெள்ளமும் மற்றோர் புறத்துத் தொடர்ந்து நெருங்கி வந்துகொண்டிருக்கு மென்பது உறுதி.

ஃ

நளனுடைய கர்வத்தை (கம்பீரத்தை) யடக்குகிறேனென்று துணிந்தான் சனீஸ்வரன். அவனது சிறு புத்திக்கு நளனுடைய கம்பீரம், கர்வம்போலவே தோற்றியது. முடிவில் வெற்றி எவருக்கு? கடவுள் கொடுத்த கர்வத்தை (கம்பீரத்தை) சனீஸ்வரனால் அழிக்க முடிந்ததோ? 'மானே யகல்கின்றேன், மாதரசே போகின்றேன்' என்று கூறித் தன் காதன் மனையாளை விட்டுப் பிரிந்தானன்றி மாமனின் இல்லத்திற்குச் சென்றானோ? அக்காலத்திலும் தலைநிமிர்ந்த கம்பீர நாயகமாகவே நின்றான். இது தெய்வீக கர்வத்தின் சக்தியன்றோ?

ஃ

ஓ! தான சூர கர்ணா! சற்றே இங்கு வந்து நில். உனக்குக் கடவுள் கொடுத்த கர்வத்தை (கம்பீரத்தை)ப்பற்றி உலகுக்குச் சொல். மரணாவஸ்தையுடன் தேர்த்தட்டில் கிடந்தபோதுங்கூட,

---

படிக்காத தங்கையோடு படித்த அண்ணன் என்னபேசி ஸந்தோஷப் படக் கூடுமோ? இவ்விதமே கல்லா மனைவியுடன் கல்விமானொருவன் என்ன இன்பம் பெற இயலும்? அவா விரோதத்தில் மனைவி துணையாவதும் ஏது?

உன்னிடம் தானம் கேட்டவருக்கு, "ஆவியோ நிலையிற் கலங்கியது; யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன்; பாவியேன் வேண்டும் பொருளெல்லாம் நல்கும் பக்குவந்தனில் வந்திலையால்" என்று உரைத்து, உன்னிடத்துள்ள தானபலன்களை யெல்லாம் தாரை வார்த்து ஈந்தாய் மாணத்தருவாயிலுங்கூட அந்த தான—கர்வம் (கம்பீரம்) உன்னைவிட்டு விலகவேயில்லை. இவ்விதம் கடவுளின் ஆசி கொண்ட கர்னன் களித்திருந்த நாள் உண்டா? தன்னைப் பெற்றவர் இன்னாரென்று அறியாத விசார மனத்தினனாகவே காலந்தள்ளத் தலைவிதி நேர்ந்தது கண்டீர்.

ஃ

தன் தந்தையை எதிர்த்துக்கொண்ட பிரகலாதனின் கர்வம் (கம்பீரம்) எத்தகையது? அதை யவன் தந்தை 'கம்பீரம்' என்று பாராட்டாது 'கர்வம்' என்றல்லவோ கருதினான். எவ்விதத்திலும் இறைவனைக் காண்பேனென்று துணிந்து சென்ற துருவனின் கர்வம் (கம்பீரம்) எத்தகையது? மன்னவன் தர்மராஜனது பொறுமையின் கர்வம் (கம்பீரம்) எத்தகையது? தன் மானஸம்ரக்ஷணார்த்தம் இறைவனை நம்பிக் கைகூப்பிய பாஞ்சாலியின் கர்வம் (கம்பீரம்) எத்தகையது? அர்ச்சுனனின் கர்வம் (கம்பீரம்) எத்தகையது? கோபிகா ரமணிகளின் காதல் கர்வம் (கம்பீரம்) எத்தகையது? எத்தனை உதாரணங்கள் தரினும், அத்தனையிலும் கடவுள் கொடுத்த கர்வம் (கம்பீரம்) உயரிய நிலையிலேயே ஓங்கி ஒளிவீசி நின்றதைக் காணலாம். இங்ஙனம் தமது அருள் பெற்றாரைக் கடவுள் இடையிடையே சோதித்ததும், அன்னாரைக் குணக்குன்றாய் உலகினரின் முன்பு உயர்த்தக் கருதியே யென்க. ஒருபுறம் தாம் சோதித்து வாட்டினும், மற்றோர் புறம் தக்கோரைச் சமய உதவிக்குச் சேர்த்துக் கொடுத்து, எவ்வகை இடுக்கண்களையும் விலக்கி, எக்காலத்தும் சிரம் தாழ்த்தாது தலைநிமிர்ந்தே வாழுமாறு ஒரு மேன்மையான நிலையிலேயே வைத்து அநுக்கிரகித்திடும் கடவுளின் ஒப்பற்ற கருணையும் அருளும் வியக்கற்பாலதன்றோ? கடவுள் கொடுத்த கர்வத்தின் (கம்பீரத்தின்) காட்சியே காட்சி! அதன் மாட்சியே மாட்சி!! அதனைப் பெற்றவர்களின் பாக்கியமே பாக்கியம்!!! அத்தகையோரை நாம் எஞ்ஞான்றும் வணங்கிப் பாராட்டிக் கௌரவிக்கக் கடவோம். அன்னாரின் சிறுமையையும், எளிமையையும் எண்ணி அலக்ஷியம் செய்யாமலும் இருக்கக்கடவோம். அதுவே கடவுளுக்குப் பிரீதி.

எந்தக் கேஸ் முடிந்தாலும், யார் ஓடினாலும், நீ பிடித்தாலும், சண்டையிட்டாலும், கொலை நடந்தாலும், விசேஷமான ஸம்பவங்களுண்டானாலும் அவ்விஷயங்களை எழுதி அச்சிட்டுப் புஸ்தக ரூபமாய்க் காலணா அரையணா வென்று வெளிப்படுத்துவது சென்னையிலுள்ள ஒரு விநோத வழக்கமாம்.

பணத்தால் வரும் பழி.

பொன்னாசையால் ஜேஷ்டன் கனிஷ்டனைக் கொன்று விடுகிறான். அந்த வழக்கை விசாரிக்கும் செஷன்ஸ் ஜட்ஜி அவனுக்கு மரணதண்டனை விதிக்கிறார். ஆத்திரத்துடன் கொன்றவனே அதன்பின் உலகில் வாழாமல் சிக்ஷையுற்று எமனுலகடைகிறான். உலகத்தில் ஆஸ்திக்காக மனிதர்கள் அக்கிரமத்தில் பிரவேசித்துத் தங்களின் விவேகத்தை நாஸ்தி செய்துகொள்ளுகிறார்கள். தமயன் சொத்தை முற்றிலும் அபகரிக்க நினைத்துத் தம்பி வழக்காடத் தொடங்குகிறான். தமயன் மனைவியும் தன் கணவனது சொத்துக்களை விற்றுத்தொலைத்து எதிர்வியாஜ்ஜியமாடுகிறாள். கடைசியில் தமயனின் மனைவிபக்கம் தீர்ப்பாகிறது. ஆகியும், பயனில்லாமல் குடும்ப சொத்துக்கள் வியாஜ்ஜியச் செலவில் கரைந்து தீர்ந்துவிட அவள் ஏழையாகிறாள். தனக்குக் காலமுற்றும் நலமே புரிந்த தமயனின் குடும்பத்துக்குத் துரோகம் நினைத்த புத்தியால் தம்பி நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து தரித்திரத்தின் வசப்பட்டு யாவற்றையும் விற்றுத் தீர்த்து அவனும் பரமஏழையாகிறான். இப்பொழுது தம்பி தனது தமயன் மனைவியிடம் வெகு விஸ்வாசம் வைக்கத் தொடங்குகிறான். இந்த விஸ்வாசம் ஆரம்பகாலத்திலேயே இருப்பின் இருவரும் ஸர்வ சொத்துக்களுடன் ஸுகிகளாய் க்ஷேமவாழ்வில் இருக்கலாமன்றோ? செல்வம் கூடியிருந்த காலத்தில் கர்வத்தின் கொழுப்பு கண்ணை மறைத்தது. இப்பொழுது தரித்திராதேவி வந்தவுடன் உத்தம ஞானம் உதயமாகிவிடுகிறதுபோலும்!

ஃ

தசையும், எலும்பும், சீழும், ரத்தமும், அசுத்தநீரும், அஜீரண பதார்த்தமும் நிறைந்த தேகமாகிய மலபாண்டத்தை சாசுவதமென்று மலைத்துக் கொலைக்குற்றம் செய்யும் அவிவேகிகளின் காரியத்தை யார்தான் ஸஹிப்பர்? தானே வாழ நினைத்து ஸகோதரனின் குடும்பத்துக்குத் துரோகம் செய்ய முற்படுபவனை எவர் விரும்புவர்? பின்னால் தனக்கு நேரும் கதியை முன்னால் நினைத்துப் பார்த்தால் யாரையும் வருத்தவேண்டிய எண்ணம் ஜனிக்காது. இன்று ஒருவர் மேல் நாம் கல்லைப்போட்டால் நாளைய தினம் நமது தலையில் பகவான் இடியைப் போடுவார் என்ற எண்ணம் ஒவ்வொருவர் மனதிலும் உறுதியாகவிருந்தால் பாபதோஷங்கள் அவர்களை யணுகா. எல்லோரும் மனசாந்தியுடன் காலங் கழிப்பர்; கருணையின்மையை யொழிப்பர்; பொறாமையை இழப்பர்; பொருளாசையை யழிப்பர்.

வயோதிகபருவம் நெருங்கும்வேளையில் ஒவ்வொருசக்தியும் "சோர்வு" கொள்வதைத் தனது அநுபவமாய்க் காண்கையில் நெஞ்சு திடுக்கிடும் பயங்கர அவஸ்தையைவிட, வயோதிகத்துக்கு முன் சோர்வு அற்ற சரீரத்துடனே மரணமாதல் நலமென்று எண்கிறது. ஆனால், இறக்க மனம் வருவதில்லை.

ஸஹோதர வாஞ்சை


மைசூர் தேசத்தில் 280-வருஷங்களுக்கு முன்பு இராஜ உடையார் என்னும் அரசன் அரசாக்ஷி செய்துவந்தான். அவ்வரசனுக்கு சாமராஜனென்ற ஒரு ஸகோதரனுண்டு. இந்த சாமராஜன் அண்ணனுடைய பிராபல்யத்தைக் கண்டு ஸஹியாதவனாய் அவனைக் கொன்றுவிட அநேக பிரயத்தனங்களைச் செய்துவந்தான். ஒருநாள் திரளான ஸைந்யங்களோடு தமயனைக் கொல்ல வருகையில், இராஜஉடையார் உபாயமாய்த் தம்பியைப் பிடித்துவரச் செய்து தம்பியென்ற பிரேமையால் அவனை அதிக அன்போடு ஆலிங்கனம் செய்துகொள்கையில், சாமராஜன் துரெண்ணத்துடன் அண்ணனோடு மல்லயுத்தம் செய்யத்தொடங்கினான். அதற்குள் அங்கிருந்தவர்கள் அவனைப் பிடித்து வெளியே விடாமல் அரண்மனைக்குள் கொண்டுபோய்ச் சிறையில் வைத்தார்கள். இதையறிந்த மற்றொரு அரசன், இராஜஉடையாருக்குத் தம்பியின்மேல் அதிக த்வேஷம் இருக்கிறது; ஆகையால், அவன் கண்களை நான் பிடுங்கிவிடுவேனாகில் என் காரியத்துக்கு அதிக ஸந்தோஷப்படுவாரென்று நினைத்து அவன் கண்களைப் பிடுங்கிவிட்டான்.

ஒருநாள் இன்னொரு ராஜ்யத்தை ஜெயிக்கச் சென்றிருந்த இராஜ உடையார் இந்தச் சங்கதியைக் கேட்டு, உடனே அவ்வரசனையும் அவன் ஸகோதரனையும் வரவழைத்து, "அடே! உன் தம்பியின் கண்களை இந்த க்ஷணமே பிடுங்கிவிடு" என்று கர்ஜிக்க, அவ்வரசன் கடகடவென்று நடுங்கி, "மகாஸ்வாமி! இப்பேர்ப்பட்ட சிக்ஷை விதிப்பதற்கு அவன் உங்களுக்கென்ன அபராதம் செய்தான்" என்று கண்ணீர்விட் டழுதான். அதற்கு "அடே சண்டாளா! நீ என் தம்பியின் கண்களைப் பிடுங்குவதற்கு அவன் உனக்கென்ன அபராதம் செய்தான்? இனி இவ்வித துர்நடத்தை செய்வாயாகில் உன்னைச் சுண்ணாம்புக் காளவாயில் போடுவேன்" என்று கூறி, இக்காரியத்திற்கு உட்பட்ட ஜனங்களை சிக்ஷித்து, தம்பிக்கு வேண்டிய இராஜ்ஜியங்களையும் தனராசிகளையும் கொடுத்து ஸுகமாய்க் காலம் தள்ளும்படி புத்தி போதித்து அனுப்பினான். தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லலாமென்று சாஸ்திரம் இடம் கொடுத்தாலும், ஸஹோதர வாஞ்சையானது மைசூர் அரசனைக் குற்றம் செய்த தம்பியிடம் பிரீதி பாராட்டும்படி தூண்டியது. இதுவன்றோ உண்மையான பிரீதி!

பிராமணத்துவேஷம் இந்த நாளில் எங்கும் பரவியிருத்தலால், பிராமணர்களிற் சிலர் தங்களின் ஜாதிப்பட்டப்பெயரை முற்றிலும் விட்டுவிட்டுத் தங்களின் பெயரைமட்டும் சொல்லிக்கொள்ள நேர்ந்துள்ளதும் ஒரு விநோதமே.

ஜாதிப்பெயர் கடைசியில் வாராமல் வெறும் பெயரைமட்டும் கையொப்பமாக இட்டிருப்பின் அவர் பிராமணரோ என்று ஐயப்படவும் காலமகிமை செய்துள்ளது. மற்றவர் தம் ஜாதிப்பெயரிடப் பெருமை கொள்கின்றனர்,

பிசாசு, முனி, மந்திரவாதி.



பிசாசுகளில்லையென்றும், மனப்பேயைத் தவிர வேறு பேய் கிடையாதென்றும் கூறும் கனவான்கள் அடியிற் கண்ட விஷயத்தைக் கவனிக்கக்கடவர். சந்திரநாகூரில் ஹூக்ளி யோரமாய் ஒரு வெளிச்சம் தெரிகிறது. அதன் ஸமீபமாகச் சென்றால் ஒரு ஆளும் கண்ணுக்குத் தென்படுவதில்லையாம். இதைப்பற்றி அநேக கதைகள் சொல்லுகிறார்கள். அவற்றில் ஒன்று பின்வருமாறு:—அங்கு ரயில் போட்ட போது ஒரு கார்டு இறந்துபோனதாயும், அவனுடைய சவச்சாயை அடிக்கடி தோன்றி விளக்கைப் பிடித்துக் கொண்டிருப்பதுபோல் காணப்படுவதாயும் கூறுகிறார்கள். இருபது கஜ தூரத்திற்கு அப்பாலிருந்தால் பிசாசைப் பார்க்கலாமாம். ஸமீபத்தில் சென்றால் மறைந்துபோகிறது.

ஃ

ஸ்ரீரங்கத்தில் ராய கோபுரத்துடன் சேர்ந்ததாய் ஒரு முனீஸ்வரன் கோயில் உண்டு. அந்த முனி பல பெண்களைப் பிடித்துக்கொண்டு சேஷ்டை செய்வதாய்ச் சில மந்திரவாதிகளால் சொல்லப்படுகிறது. அந்த முனியை லக்ஷ்யம் செய்யாதவர்களையும், வணங்காதவர்களையும், அதுவும் லக்ஷ்யம் செய்வதில்லை யென்பதும் உண்மை. இச்சிறு தேவதைகள் தன்னைப் பிரார்த்திப்பவரிடம் தான் தங்களின் சேஷ்டைகளைக் காட்டுகின்றன. தன்னை மதியாதவர்களிடம் அவைகளும் தூர விலகி ஓடுகின்றன.

ஃ

பிசாசு, முனி, சிறுதேவதை இவைகளின் சேஷ்டைகளைவிட மந்திரவாதிகளின் சேஷ்டைகள்தான் உலகப்பிரசித்தம். இவர்கள் பெரும்பாலும் சாஸ்திர ஆராய்ச்சியோ, விசேஷித்த கல்வியோ கண்டிராத மௌடிகர்களேயாவர். இவர்கள் மந்திரிக்குங் காலையில் எவரும் அருகில் இருக்கக் கூடாதென்பது இவர்களுடைய மாமூல் வசனம். அவ்விதம் அவர்கள் சொல்லுகையில், எவரும் அசற்கு உட்படாமல் மறுத்துவிடவேண்டும். ஏனெனில் மந்திரிப்பதுபோல் மாயம் விளைத்து பெண்மணிகளின் கற்பைப் பாழ்செய்த பாவிகளும் உண்டு. இவர்கள் தங்களுக்கு என்னவோ ஞான ஒளி திறந்துவிட்டதுபோல் வேஷம் போடுவர். வயிற்றுப் பிழைப்புக்குப் புரோகிதர்கள் அலைவதுபோல இந்த மந்திரவாதிகளும் உலகினரை வஞ்சிப்பர். மற்றபடி இவர்களிடத்தில் ஒரு மகிமையு மில்லை, மண்ணு மில்லை. யானைப்பாகன் ஒரு மந்திரவாதியாம்! அவன் அவ்வளவு பெரிய யானையை மந்திரத்தால்தான் வசப்படுத்தி நடத்துவதாய்ப் பேதைஜனங்கள் மயங்குவர். இந்த யானைப்பாகனைவிட புலி, சிங்கம் முதலிய எத்தனையோ துஷ்ட ஜந்துக்களை ஸர்க்கஸில் தன் இஷ்டப்படி ஆடவிடுவோனைப் பெரிய மந்திரவாதி, சாமர்த்தியவாதி எனலாம்.

பெண்களுக்கு வரும் யௌவனம் உலக செல்வத்தின் நிலையைக் குறிக்கிறது. அந்த யௌவனம் எவ்வளவு சீக்கிரம் வந்ததோ அதேபோல் மனிதர்களுக்குச் செல்வமும் வந்து, அந்த யௌவனம் எவ்வளவு சீக்கிரம் தொலைந்து போகிறதோ அவ்விதமே செல்வமும் மிகு விரைவில் பறந்துவிடுகிறது.

சந்தையிற் கூட்டமோ!

அவரவர் தமது காரியம் நாடியே வருவார்.
அவ்வுறவு இவ்வுறவு ஆதிநேசம் என்பார்.
உருக்கமாக இருந்து விருந்துண்ணுவார்.
உண்ணும் வரை இளித்துப் பசப்புவார்.
காரியம் ஆனதுமே கம்பி நீட்டிவிடுவார்..
நம் உதவி நினையார்; பின் எட்டியே பாரார்.
'அவன் என்ன செய்தான்' என பின் ஏசுவார்.
நம்மைப் பகைத்து இனி விரோதமுமாவார்.

வருவோரிற் பலரும் வேகிற வீட்டில் பிடுங்கும் பாசாங்கினரே. நமது அவசரத்திற்கும், க்ஷேமத்திற்கும் உதவுபவர் எங்கோ ஒருவர். அவரை நீ அறிந்து வை.

தந்தை தாயின் வகையினரென்று நுழைவார்.
மனைவியின் தாய்வீட்டினரென்றே வருவார்.
முன்பு பழக்கமானவரென்று குந்திவிடுவார்.
ஒப்பாரி உறவிலும் புகுபவர் பலராவார்.
நலம் காட்டும் நண்பரென்று நண்ணுவார்.
காணவேவந்தோமென்று அருகில் அமர்வார்.
தம்மவரிடம் சண்டையிட்டு இங்கு தங்குவார்.
நூல்-நகை-கடன்-இரவல் பெறவே சூழ்வார்.
மிட்டாயுடன் வந்து நெடுநாள் தங்குவார்.
வலியவலிய வந்து உழைப்பதாய் உட்காருவார்.
இத்தனைபேரில் உத்தமர் எவரோ ஈசா!

எவ்வளவு செலவு-பாடு? பயனென்னவோ?
தேடிய பணம் போகும் வழி இதுவேயோ?
கடை(சி)நாளில் இவர் துணை ஆவரோ?
நம்பிபின் ஏமாறிநின்றவர் எத்தனைபேரோ?
என்றும் உனை எண்ணுபவர் எவரென அறி.
சந்தையிற் கூட்ட மிதிலோ சந்தேக மில்லை.



பந்நா தேவி

(249-ம் பக்கத் தொடர்ச்சி.)

உமேத்சிங்கு தன்னை அடுத்து நின்றவரை நோக்கி, "நண்பனே! எனக்கு இப்போது காட்டில் வாழும் கரடி புலிகளிலும் மேலான வேட்டை யொன்று கிடைத்தது. எதிரிகள் கொட்வாரை முற்றுகை போட்டுள்ளாராம். என் தங்கை பந்நாதேவி என்னை உதவி செய்யவேண்டுகிறாள். நான் தாமதிக்கலாகாது. சண்டைக்குப் போகவேண்டும். உனக்கு வந்தனம்" என்றான்.

ஃ

மற்றவன், "தோழா! எனக்கு வந்தனமேன்? பந்நாதேவி உனக்குத் தங்கையெனின் சலீம்சிங்கு உன் தம்பியாவான். என் ஐந்நூறு போர் வீரருடன் கொட்வாரில் உன் கொடியின் கீழ் சண்டை செய்வேன்" என்றான்.

ஃ

உமேத்சிங்கு களிகூர்ந்து தன் சேனாவீரரை யழைத்துச் சண்டைக்குத் தயார் செய்தான். இவ்வளவும் ஒரு யுவதியின் தூண்டுதலால் விளைந்தவை.

ஃ

அன்றிரவு இராம்சிங்கு தங்கச் சரிகையில் முத்துக்கள் கோத்த கஞ்சுகமொன்றைக் கொண்டுவந்து உமேத்சிங்கு கொடுத்ததாகச் சொல்லி பந்நாதேவியிடம் கொடுத்தான். உமேத்சிங்கு துணை வருவதறிந்து மன்சிங்குக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று

V

பெரோஜிஷா சும்மா விருப்பதிற் பயனில்லை யென்றறிந்து போர்புரிய ஆரம்பித்தான். இராம்சிங்கு அரிகந்தத்திற்குப் புறப்பட்ட நாளே அவனும் அவன் சேனையும் அதிகாலையிலெழுந்து கோட்டை மதிலேற முயன்றார்கள். அவ்வூராெருவன் பணத்தாசையால் திருட்டுத்தனமாய் பெரோஜிஷாவிடம் வந்து தான் அந்தரங்க வழியாய் மலைமீதேறி மதிலிற் குதித்து, அம்மதிலினின்று ஓர் நூலேணி வழியாக ஒவ்வொருவராய்க்

கெம்பீரத்துடன் நின்று உலகை நோக்கி லக்ஷியம் செய்யாதிருந்ததும் ஒருகாலம். இப்பொழுது நாணி வணங்கிப் பூமியை நோக்குவதும் ஒருகாலம்,

கோட்டைக்குள் இறங்கலாமென்றும் சொல்ல அவர்கள் இசைந்தார்கள்.

ஃ

நெடுநேரம் பொறுத்து ஓர் கயிறு கீழே தொங்கிற்று. எதிரிகளும் தம் எண்ணம் பலித்ததென்று இறுமாப்புற்றார்கள். அவர்க்குள் ஒருவன் அந்நூலேணியின் அடிப்படியில் தன் அடி வைக்க, கயிறு தொப்பென்று விழுந்தது. உடனே ஓர் உருண்டைப் பொருள் விழ, அதனைச் சோதிக்கையில் மலைமீதேறிச் சென்ற மனிதன் தலையெனக் கண்டார்கள். அவன் மதில்மீது கயிற்றைப் பிணைத்துக் கொண்டிருக்கையில் காவலாளர் கண்டு அவன் தலையை வெட்டி எறிந்தார்கள்.

ஃ

மறுநாள் பெரோஜிஷா கூர்சாத்திலிருந்து தன் படைகளுக்காக எதிர்பார்த்தான். பீரங்கிகள் வருமாயின் மதிலை யுடைத்து உள்ளே புகலாகு மென்பது அவன் எண்ணம்.

ஃ

உமேத் சிங்கும் சலிம் சிங்கும் தாம் சேனையுடன் வந்துகொண்டிருக்கையில் எவ்வாறு சண்டை யாரம்பிப்பதென்பதை யோசிக்கலாயினர். அவர்களுக்கு இருப்பது ஐயாயிரம் குதிரைவீரர். எதிரிகளோ பதினையாயிரவர். ஆகவே, ஆய்ந்தோய்ந்து பாராமல் பகைவரை எதிர்ப்பது ஆகாதென்றும், மன்சிங்கும் எதிரிகளும் சண்டை செய்கையில் தாங்கள் மறைந்திருந்து மன்சிங்குக்குத் துணைபோவதென்றும் முடிவு செய்தார்கள். கூர்சாத்திலிருந்து போக்கு வரவைத் தடுத்தால், எதிரிகளுக்கு உணவு கிடைப்பது இன்றுபோகு மென்பதையும் எண்ணினார்கள். ஆகவே, அவர்கள் கொட்வாரின் தென்மேற்குத் திசை சென்று கூர்சாத்திலிருந்து வருபவரைத் தடுப்பதற்கு வசதியான ஓர் மேட்டில் தங்கினார்கள்.

ஃ

சிறிது நேரத்தில் ஓர் குதிரை வீரன் ஓடிவந்து எதிரிகளின் பீரங்கிப்படை வருவதாய்ச் சொல்ல, உமேத்சிங்கு அப்போதே இரண்டாயிரம் குதிரை வீரரை அழைத்துப் போய், பீரங்கிகள் வரும்வழியில் குறுகிய இடம்தேடி, அதன் இருமருங்கும் ஆயிரவராகப் பிரிந்து மறைந்திருக்கச் செய்தான். முன்னே சில குதிரை வீரர்கள் தோன்றினர். பின்னே பீரங்கிப் படைகள் வந்துகொண்டிருந்தன. முன் வந்த குதிரைவீரர் குறுகிய இடத்தைக் கடந்து சென்றார்கள். பீரங்கிகள் அங்கு வருமளவும் சும்மாவிருந்து பிறகு அப்படைகளை எதிர்க்க உமேத்சிங்கு உத்தரவு செய்தான். உடனே அவன் சேனைகள் குண்டுகளையும் அம்புகளையும் மழை போலும் மாறாது சொழிந்தனர். பீரங்கிப்படை எதிரிகள் இருக்குமிடம் காணாது இங்குமங்கும் திரிந்தனர். பீரங்கி வண்டியிற் கட்டிய மாடுகள் வெறண்டு அறுத்துக் கொண்டு நாலா மூலையும் ஓடின. இச்சண்டை ஒருவரும் எதிர்பாராது திடீரென்று நடந்ததாலும் எதிரிகள் மிகவும் சிலரேயாதலாலும் அவர்களில் அநேகர் மடிந்தார்கள். மடிந்தவர் போக மற்றவர் அடிமைகளாயினர். பீரங்கிகளைப் பிரயோகிக்கப் போதுமான மனிதர் இல்லாததால் உமேத்சிங்கு அவற்றை ஓர் பகுதியி லெறிந்தான்.

(மற்றவை மற்றதில்)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

காலணா கார்டு இருந்த காலத்துச் சங்கதிகள் நல்லதா? அரையணா கார்டு இருக்கிற காலத்துச் சங்கதிகள் நல்லதா?

ஒரு ‘பி-ஏ’ பட்டதாரியின் தவிப்பு

1

“ஊண் மறந்தேன் துயில் ஒழிந்தேன்
ஒழிவின்றிப் பலநாளும் ஓதலானேன்,
மாண்புடைய மெய்ஞ்ஞானம்
மதித்துமிலேன் திருக்கோயில் வணங்கினேனோ ?
விண்பொழுதாய்ப் பலபொழுதும்
மேவினவே ? நூற்பூச்சாய் விளங்கினேனே !
ஆண்மையிலேன், பிறர் தயவை
ஆர்வமோடும் பெற அலைவேன், அந்தோ ! அந்தோ !!

2

எந்தையார் யான்படிக்க எண்ணில்முறை
பணமனுப்ப ஏற்ற துன்பம்
மைந்தன் யான் நினைந்திடிலோ
மனம் பதைக்கும் : எவ்வகையான் வகுத்துரைப்பேன் ?
சொந்தமாம் பலபொருளும் சுருங்கினவே,
கடன் சிறிதும் சூழ்ந்த தந்தோ !
எந்தவா(று) எந்தைதனக்(கு)
இன்பூட்டி நன்றி செலுத்திடுவல் யானே!

3

ஒருவரிடம் வேலைசெய ஒருப்படவோ,
மருத்துவனாய் உயர்ந்திடற்கோ,
பெருமை பெறும் வக்கீலாய்ப்
பிறங்குதற்கோ, பிற எதற்கோ ‘பீ-ஏ’ கற்றேன் ?
உருத மனத்துட னெழுதி
உவந்தனுப்பி யிருந்தமனு ஒன்றிரண்டோ !
பெருதமவை அனைத்துக்கும்
பெற்ற பதில்:—“காலியிலை பேணும் வேலை”.

4

கைத்தொழிலுள் ஏதேனும்
கல்லாமற் போனேனே ; கண்யமோடு
எத்தகைய வாணிபத்தும்
ஈடுபடா தொழிந்தேனே ; இன்றென் செய்வேன் ?

பத்தினியோ பலநகையும்
பகட்டுடையும் கேட்கின்றாள் ; பாலர் மூவர்
இத்தகி இங்கழுகின்றார் ; இனும் வேலை
கிடைக்கவிலை ; என் செய்கேனே ?

5

புத்தகப் பூச்சாய்ப் பொழுது
போக்கினேன் இதுகாறும் : போனநாட்கள்
வித்தகனும் இறை அருளை
விழைந்திலனாய்க் கழித்தனனே வீணிலந்தோ !
சித்தமதில் ஆண்மை இலை ;
திறமை இலை ; அனுபவமும் தேர்ந்திலேனே,
எத்திறம் என் வாழ்வு நலம்
எய்துவ(து ?) இங்கினிச் செய்வ(து) என்கோல் யானே !

ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை.

பணக்காரர்கள் தரும் வட்டி.

பணக்காரர்களிடம் பெரிய சிறிய தொகைகளை வட்டிக்குத் தந்து விட்டுவைக்கிறார்கள். அந்தத் தொகைகளை அப்பொழுதே பணக்காரர்கள் செலவிட்டு அழித்துவிடுகிறார்கள். கடனுக்குக் கொடுத்த தொகைபோல் ஆகிவிடுகிறது. வட்டிமட்டும் மாதாமாதம் பணக்காரர்கள் கொடுத்து விடுகின்றனர். வட்டிக்கு விட்டோரும் வட்டியைப் பெற்றுக்கொண்டு 'அவர்கள் எப்போதுமே பணக்காரர்களாயிருந்து வட்டி தந்துவருவார்கள்' என்று மதியீனமாய் எண்ணிவிடுகிறார்கள். பணக்காரர் வாழ்வு சதமா ? நேற்று பாஷா இன்று பக்கிரி. வரவுக்கு மீறிய பல செலவில் பெரிய கடனாளிகளாகித் திடீரென்று குடிசைவீட்டுக்கு வந்துவிடவே அவர்களிடம் வட்டிக்கு விட்டவர்கள் லபோ ! லபோ ! என்று அலறுகிறார்கள். வட்டியும் போய், முதலும் போய் வாயில் மண்விழுகிறது. இன்ஸால்மெண்ட் கடுக்கா காண்பிக்கும் பெரிய வாளுகளும் உண்டு. ஆகவே, உஷார்!

முதலியார், பிள்ளை, நாயுடு இன்னும் பல வகுப்பினரும் தங்களின் ஜாதிப்பட்டப்பெயரை வெகு பிரியமாய்ச் சொல்லிக்கொள்கிறார்கள்.

பிரபஞ்ச தரிசனம்

பர்மா தேசமானது ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டது முதல் காலக்கிரமத்தில் இந்திய நாட்டு ஜனங்களால் குடியேறப் பட்டுத் தற்காலத்தில் பெரும்பான்மையான இடங்களில் திரளான இந்தியர்களால் நிறைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்கள் பர்மாவில் வனாந்தரமாய்க் கிடந்த பூமிகளையும், வெறும் பொட்டலாய்க்கிடந்த தரைகளையும் தேடிக் கண்டு, பெரிய மரங்களினால் இருளடர்ந்த காடுகளையெல்லாம் வெட்டியெறிந்து நஞ்சை சாகுபடி செய்து, அதனால் தாங்கள் விசேஷலாபங்களையடைந்ததோடு கவர்ன்மெண்டாருக்கும் தக்க வருமானங்களைப் பூமியிலிருந்து உண்டாகும்படிச் செய்திருக்கிறார்கள். இந்தியாவில் கொலைசெய்துவிட்டு ஓடியொளித்தவர்களும், திருடிவிட்டு மறைந்தவர்களும், கடனுக்கு மறைந்தோடினவர்களும், திருட்டுத்தனமாய் ஸ்திரீகளை யழைத்துக் கொண்டோடினவர்களும், பரபுருஷர்களை யிச்சித்து வெளிப்பட்டு வந்த பெண்களும், தாய் தந்தையரோடு கோபித்துக்கொண்டு வெளியேறினவர்களும், சோற்றுக்கின்றித் திரிந்தவர்களுமே சுமார் 70-வருஷங்களுக்குமுன் முதலில் பர்மாவில் குடியேறத் தலைப்பட்டார்கள். இவ்விதநிலையிலுள்ள இந்திய நாட்டு ஜனங்கள் முதல்முதல் பர்மாவில் குடியேறும் போது பர்மாவுக்கு வருவது கஷ்டசாத்தியம். பாய்க்கப்பல் ஏறிப் பிரயாணம் செய்யவேண்டும். அந்தக் கப்பலில் இரண்டு மூன்று மாதங்கள்போல் தங்கியே பர்மாவுக்கு வரவேண்டும்.

ஃ

ஆதியில் பர்மாவுக்கு வந்து செல்வவான்களாய் சுதேசம் திரும்பிய இந்தியர்களைக் கண்டதும், அங்குள்ளவர்களும் பர்மாவுக்குச் செல்ல ஆசைகொண்டு தாங்களும் கப்பலேற ஆரம்பித்தார்கள். படித்துவிட்டுப் பிழைப்பின்றி யிருந்த இந்தியர்களும் கப்பலேறிவந்து உயர்ந்த உத்தியோகங்களில் அமருவாராயினர். ஒரு பைசாவுக்கும் வழியின்றி நித்திய தரித்திரர்களாயிருந்தவர்கள் வந்து விசேஷதிரவியங்களைச் சம்பாதித்துக் கொண்டு போவதைக் கண்ட அயல் அண்டை ஜனங்களும் நாமும் போய்ப் பொருள் சம்பாதிப்போமென்று எண்ணினார்கள். இதுவே இந்தியர்கள் பர்மாவில் குடியேறவந்த பூர்வ வரலாறு. இந்த ஸ்திரீகளைப் பார்க்கிலும் பர்மியஸ்திரீகள் அழகில்விசேஷித்தவர்களாதலால் அவர்களை மனைவியாக்கிக் கொள்ளும் எண்ணம் இந்தியர்களுக்கு உண்டானது. இந்தியர்கள் அன்னியர்களாயிருக்கிறார்களே யென்ற எண்ணமின்றிப் பிரியமாய்ப் பர்மாவிலுள்ள ஆடவர்களும் மாதர்களும் கூடி நேசிப்பது பர்மியர்களின் குணவிசேஷங்களில் முக்கியமானதெனச் சொல்லலாம்.

ஃ

'நம்பீ' யென்பது பர்மியஜனங்கள் உண்ணும் மாமிச உணவு. 'நம்பீ'

செய்யும் விதமாவது:— பெரிய மட்சால்களில் மீன்களையும் இடையிடையே உப்பையும் கொட்டிச் சால்களை நிறைத்துப் பூமியில் குழி வெட்டிப் புதைத்துவிட்டு மூன்று மாதம் சென்று எடுத்தல் வேண்டும். அப்படி எடுக்கும்போது அம் மாமிசங்களெல்லாம் நிறையப் புழுக்கள் சூழ்ந்து கிடக்கும். அப்படியே எடுத்து உரலில் இடித்து அதில் ஊறிய தண்ணீரை வேறாக்கி, இரண்டையும் வைத்துக் கொள்வதுதான் 'நம்பி' செய்யும் விதமாகும். இதிலிருந்து உண்டான தண்ணீரை எவ்விதமான கறிகளிலும் சிறிது உபயோகப்படுத்திக் கொள்வது பர்மியர் வழக்கம். நமக்கு உப்பில்லாத கறிகள் எவ்விதம் இன்சுவை யில்லாமல் வெறுக்கப்படுமோ அவ்விதம் போலவே 'நம்பித்தண்ணீர்' சேராத கறிகளும் பர்மியருக்கு வெறுப்பை யுண்டாக்கும். நம்பியிலிருந்து ஊறிய நீருக்கு 'நம்பியாயி' யென்று பெயர். 'நம்பி' என்னும் மாமிசத்தை எந்த பர்மியஜனங்களும் பிரியமாய்ப் பக்குவம் செய்து உண்பார்கள். நம்நாட்டில் உப்பிட்டுக் காய்ந்த மச்ச வகைகளை யுண்போரை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஆயினும், மாமிச விருப்பில் பர்மிய ஜனங்களைப்போல் எவரையும் கண்டுங் கேட்டுமிரோம். எந்த மாமிசங்களையும் வர்ஜிக்காமல் பர்மியர்கள் உண்பார்கள். பாம்பைக்கண்டால் உடனே தலையைத் துண்டித்துவிட்டுக் கறி சமைத்துவிடுவார்கள். பூமியிலிருக்கும் எல்லாவகை ஜந்துக்களையும் பர்மிய ஜனங்கள் உண்பார்கள். ஜாதி வித்தியாச மென்பது பர்மியர்களுக்கு இல்லை. பௌத்தமதம்தான் இவர்கள் மதம். இவர்கள் உபாசிக்கும் தெய்வம் கௌதமரேயாம். ௸

மண்ணெண்ணெய்க்குப் பர்மிய பாஷையில் 'ஈனுஞ்சி' என்று பெயர். ஈனுஞ்சான் என்னும் ஊர் பர்மாவில் மக்குவை யென்னும் ஜில்லாவில் உள்ளது. இங்கு மண்ணெண்ணெய் பூமியிலிருந்து உற்பத்தியாகின்றது. ஈனுஞ்சியூறும் பூமியானது சாதாரண பூமிக்குமேல் ஒரு தென்னமர உயரம் உயர்ந்திருக்கும். நமது ஊரில் ஜலம் எடுக்கும் கிணறுகளைப் போலவே மண்ணெண்ணெய் ஊறும் கிணறுகளும் இருக்கின்றன. இக்கிணறுகள் ஈனுஞ்சானில் மூவாயிரத்திற்கு மேல் இருக்கலாம். கிணற்றிலிருந்து ஜலம் எடுப்பதுபோலவே இக்கிணறுகளினின்றும் மண்ணெண்ணையை மொண்டு எடுக்கிறார்கள், இக்கிணறுகளின் ஆழம் கால் மைலுக்குமேல் அரை மைல் வரை யிருக்கலாம். யந்திரங்கள் மூலமாயும் எண்ணெய் எடுக்கப்படுகிறது. கிணற்றிலிருந்து எடுத்தபடியே மண்எண்ணெயானது உபயோகப்படுத்தப்படவில்லை. யந்திரத்தினால் அதனின்றும் சேறுவேறாய்எண்ணெய் வேறுமாய்ப் பிரிக்கப்பட்ட பின்னரே உபயோகப் படுத்துகிறார்கள். காய்ச்சாத பச்சை எண்ணெயும் எரிக்கலாம். அதில் புகை மெத்த அதிகம். காய்ச்சின எண்ணெய் மூன்று தினுசு. முதலிலுள்ளது அசிங்கமில்லை. இதுதான் முதல்தரமான எண்ணெய். இதில் புகையிராது. காய்ச்சாத பச்சையெண்ணெய் மரங்களுக்கும் படவுகளுக்கும் பூசுகிறதுண்டு. இதனால் அவை பளபளப்பாயும், கறையான் பிடியாமலும் இருக்கும். ஈனுஞ்சானில் எடுக்கும் மண்ணெண்ணெய் இரங்கோனுக்குக் கொண்டுபோய் அங்கு யந்திரத்தினால் காய்ச்சப்படுகிறது. இவ்விசேஷங்களை யறிவது ருசிகரமன்றோ?

படித்தவன் உத்தியோகத்துக்கு ஏங்க, வியாபார பூசுமுள்ளவனோ சுகமாய்க் காலக்ஷேபம் செய்கிறான், உத்தியோகமற்றவனுக்கே வியாபாரமாம்.

கவிதா  விலாஸம்

ஏகநாதன்

VII

முன் குறிப்பு:— தன்னைப் பிராமணர்கள் மிக்க கோபத்துடன் தூற்றுவதைக் கண்ட ஏகநாதன், "பெரியோர்களே! நான் என்ன பிழை செய்தேன்? ஏதோ என் மனதிற்கு நியாயந்தான் என்று பட்டதைப் புரிந்தேன். என் செயலைப் பைத்தியமென்று உலகமெல்லாம் நகைத்திடினும் நகைத்திடுக. என்னை உதறித்தள்ளினும் சரியே. புத்தியீனனெனக் கூறினும் சம்மதமே. இவ்வுலகமே என்னிடத்துச் சீறிவரினுங்கூட நான் கொண்டதே கொள்கை" யென்கிறான். அதைக் கேட்ட அந்தணப் பெரியோர்கள் ஏகநாதனை மனம் வந்தவாறு தூஷித்துவிட்டுக் கடுஞ்சினத்துடன் வெளியேறுகின்றனர்.

இதுவரையுள்ள விஷயங்களைப் பாக்களில் காண்க. இனி, அடுத்த ஸஞ்சிகையில் இது பூர்த்திபெறும்.

ஏகநாதன் :— என்ன நான் செய்தேன்? அந்தணப்
பெரியீர்! ஏதோ அறிவிலா எனக்குச்
சரியெனப் பட்டதை பைத்தியத்தொழிலென
உலகெலாம் நகைத்தே உதறித் தள்ளினும்
பலமாய்ச் செய்யவோர் பதமிலாப் புத்தி
கூறிய ததனைக் கொண்டனன் யானும்
சீறியே குவலயம் சிதறுமா றென்றலை
செய்யினுஞ் செய்ய...

முதல் பார்ப்பனன் :— ஐயோ! இவனும்
பைத்திய னாகிறான்!

2-ம் பார்ப்பனன் :— சித்தச் சுழற்சி
மெத்தவும் உண்டு...

3-ம் பார்ப்பனன் :— மெத்தவும் என்ன?
உருவே அதுவாம்! தெருவழி யலையும்
தீயவள் முகமே திகழ்வ திவனிடம்
காணீர்!

வயோதிகர்களைப் பழிக்கிறார்கள். பழிக்கிறவர்கள் வயோதிகர்களாகும் போதுதான் அவர்களின் சோர்வும் ஏக்கமும் தவிப்பும் ஏமாற்றமும் தெரியும்.

முதல் பார்ப்பனன் :— காண்பதா? (ஏகநாதனை நோக்கி) கடவுளை [நிகர்த்த
முன்னவர் சாபம் உன்றலை வெடித்தே
பலதிரள் பாம்பென பலதிசை யோழிக்க!

2-ம் பார்ப்பனன் :— பேயும் பிசாசும் நாயும் நரியும்
சுத்தித் திரியும் அத்தியே நிறைந்த
பிணவெடி நாறும் பிணஞ்சுடு காடா
ஆவதா உன்னிடம்

3-ம் பார்ப்பனன் :— நோவதா இவனை
பாவியால் யாமும் பஞ்சமர் ஆனேம்
நீசனே! உனக்கினி தேசுடைப் பெரியார்
தோந்தமும் அவர்தம் பந்தமும் அடியோடு
ஒழிந்தன—அன்னோர் விழுமிய நிலை பல்
சங்கிலித் தொடர்போல் வங்கிசம் வங்கிசம்
வந்ததும் போயின : வந்தனை நீயொரு
குலத்தைக் கெடுக்குமோர் கோடாரிக்காம்பா
நலத்தை அழித்தாய் நலமிலாப் பேதாய்
அறிவை இழந்தே நெறியிலாக் காரியம்
செய்தவோர் முறையால் செய்ய தாமரை
மலரேன இருக்கும் மலராம் இருதய
வீட்டில் என்றும்வீற்றுள ஆன்மா
தனுரிமை யிழந்தே அணுவும் பயனிலா
தொழியுமா ருக்கினை அழிந்த நடையாய்
விழுந்தனை கழிந்ததுன் மரபும்!
பாபி உன்முகத்தைப் பார்ப்பதும் பழியே!

[பார்ப்பனர் மூவரும் வெகு கோபமாக வெளி ஏகுதல்.]

மு. துரைப் பிள்ளை.

ஆண்குழந்தையைப் பெறுகிற சங்கதியில் அவன் எக்கேடு கெட்டாலும் சமாளித்துக்கொள்வானென்று ஒரு தைரியம் ஏற்பட்டு மனது சமாதான மாகிறது. ஆனால், பெண்ணைப்பெற்ற சங்கதியிலோ 'அவள் காலமுற்றும் கண் கலங்காதிருக்க வேண்டுமே' என்று மஹா பெரிய கவலை, தீராத விசாரம்.

"அந்த லேகியத்தில் இந்த செந்தூரத்தை வைத்து உண்டு, அந்தத் தைலத்தைத் தேய்த்து முழுகி, இந்தப் பல் பொடியால் பல் துலக்கி வந்தால் குணமாகும்" என்று தங்களுடைய எல்லா மருந்துகளையும் வெகு சுளுவில் விற்பனை செய்து பணம் திரட்டுவதற்குத் தக்கபடி கேட்லாக் தயாரிக்கிறார்கள்!

ஆங்கில தமிழ்க்கடிதங்கள்

(166-ம் பக்கத் தொடர்ச்சி)

Letter XXV.

My worthy guardian, M. Melvill, is now at his seat in Devonshire, and his conduct to me has been so much like that of a parent, that I don't choose to take one step in an affair of such importance, without both his consent and approbation. There is an appearance of sincerity runs through your letter; but there is one particular to which I have a very strong objection, that is this: you say that you live along with your mother, yet you don't say you have either communicated your sentiments to her, or your other relations. I must freely and honestly tell you, that as I would not disoblige my own relations, so neither would I, on any consideration, admit of any addresses contrary to the inclinations of yours. If you can clear up this to my satisfaction, I shall send you a more explicit answer, and am, Sir,

Your most obedient
humble servant

Rose.

25-வது கடிதம்.

எனக்கு விசாரணைக் கர்த்தராகிய யோக்கியரான மெல்வில் துரை இந்நேரம் டிவோன்ஷயர் மாகாணத்திலே தன் வீடுதியில் இருக்கிறார். அவர் என்னைத் தகப்பன்போல் நடப்பிக்கிறபடியால் அவரது அனுமதியும் சம்மதியும இல்லாமல் இப்படிப்பட்ட பெரிய காலத்தில் ஒன்றும் செய்ய எனக்கு இஷ்டமிராது. உம்முடைய காகிதத்தில் உண்மையான மனமே விளங்கினாலும் ஒரு காரியம் எனக்குப் பரிச்சேதம் சமாதானமாயிருக்கவில்லை. அது என்னெனில், நீர் உமது தாயாருடன் இருக்கிறதாகச் சொல்லுகிறீரே; அவரோடாகிலும், மற்றப் பந்துக்களோடாகிலும் உமது கருத்தை அறிவித்ததாகச் சொல்லவில்லையே. என் பந்துக்களுக்குத் தெரிவியாதிருக்க எனக்கு மனம இல்லாததுபோல் உமது பந்துக்களின் இஷ்டத்துக்கு விரோதமாக நீர் ஒரு வார்த்தை சொல்வது எனக்கு இஷ்டமில்லை. ஆகையால், எனக்குச் சமாதானமாக இதைத் தெரிவிப்பீரானால், அதிக விவரமான உத்தரம் உமக்கு அனுப்புவேன்.

இப்படிக்கு,

மேற்படிதனும் வணக்கமுள்ள
உமது ஊழியக்காரியாகிய

ரோஸ்.

வாய்க்குள் பக்ஷணம் சென்றதும் வாய் மூடப்படுகிறது. வாய்க்குள் பக்ஷணம் மெல்லப்படுவதைக் காண வெகு ஆபாசம் தரும். அந்த ஆபாசம் நிகழ்ந்தால்தான் ருசியும் தெரிகிறது, வயிற்றில் பக்ஷணமும் சென்று வயிறும் நிறையும்.

பிளாஸிடஸ்

[ஞான ஜோதி கண்ட பெரியாரின் முடிவு.]

(முன்பக்கம் 242-லிருந்து.)



இவர்கள் பேசிக் கொண்டிருந்த அறையினது சாளரத்தின் பக்கவில் உட்கார்ந்து இவற்றையெல்லாம் கேட்டிருந்த அவ்வீட்டுக்காரியான மாது உடனே எழுந்து பாசறைக்குச் சென்று அங்கு காவலிருந்தவர்களிடம் தான் சேனாதிபதியைப் பார்க்கவேண்டுமென்று கூறினாள். உள்ளே போவதற்கு உத்தரம் பெற்றவுடன் இவள் அறையுட் புகுந்து சேனாதிபதியின் முன்பு நின்று வணங்கி, "பிரபு! நான் ஒரு அன்னிய தேசத்தாள்; என் தேசத்திற்குப் போகும்படி உத்தரவளித்தல் வேண்டும். பிறந்த நாட்டை நான், இறப்பதன் முன் பார்க்க வேண்டுமெனும் அவாவை மிகுதியும் உடையவளா யிருக்கிறேன்" எனக் கூவினாள்.

ஃ

ஆனால், இன்னும் ஏதோ சொல்லப்போனவள் நாசகுளறியதால் நிறுத்திவிட்டாள். இவள் பேசியபடியே சேனாதிபதியின் முகத்தை உற்று நோக்கினவளாய் இருந்தாள். இவன் இவளது வேண்டுகோளிற்கு விடை பகருவதன் முன்னர் இம்மாது நல்லாள் அடியற்ற மரம்போல் அவன் பாதங்களில் திடீரென விழுந்து, "ஆ! என் பிரபு! நீவிர் 'ப்ளாஸிடஸ்' எனும் பெயரை ஒரு சமயம் பூண்டிருந்தீரல்லவா? கிறிஸ்துவ மதத்தைத் தழுவியதால் யூஸ்டேஸியஸ் என்ற பெயரைப் பின்பு அணிந்துகொண்ட அந்த பிளாஸிடஸ் என்பவரின் மனைவிதான் நான். என்னை அடிமையாக்க எண்ணியிருந்த அப்பாதகனான கப்பல் தலைவனிடமிருந்து நான் தப்பி வறுமைப் பிணியால் பிடிக்கப்பட்டு இவ்விடத்தில் அநேக நாட்களாக வசித்துவருகிறேன்" என்று சொல்லிப் புலம்பினாள்.

ஃ

அதனைக் கேட்டதில் உண்டான சந்தோஷத்தின பூரிப்பால் நாவெழாத யூஸ்டேஷியஸ், அவளே தன் பத்தினி என்றறிந்து அவளை ஆலிங்கனம் செய்துகொண்டான்.

சற்று நேரத்திற்குப்பின், "நாதா! நமது அருந்தவக் குமாரர்கள் எங்கே?" என்று கேட்டாள்.

"ஐயோ! அவர்கள் பலவருடங்களுக்கு முன்னரே இறந்துவிட்டனர்" என்று சொல்லி, அவர்கள் எவ்விதம் இறந்தார்கள் என்பதையும் விவரித்துக் கூறினான்.

ஃ

உலகத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு தம்பிரமாக நடந்துகொள்கிறார்கள் எவ்வளவு பட்டும் படாமலும் ஒட்டாமலும் ஒதுங்கித் தூர நிற்கிறார்கள். உலகத்தில் பழகுவதற்கே ஒரு தனியான சாமாத்தியம் வேண்டும்போலும்!

"எல்லாம் வல்ல இறைவனை நம்பியுள்ள நமக்குக் கெடுதலும் வருமோ? அவ்விதம் நேரினும் கடவுள் அந்த அபாயத்திலிருந்தும் உபாய மாய்க் காத்து ரக்ஷிப்பா ரன்றோ? அவ்விதமே ஆண்டவன் அருளால் நமது குழந்தைகள் சௌக்கியமா யிருக்கிறார்கள்" என்று சொன்னது மன்றி இவ்வாலிபர்கள் ஸம்பாஷித் திருந்த விஷயத்தையும் உரைத்தனள். அவ்விரு வாலிபர்களையும் அழைத்து வரும்படி உத்தரவு கொடுங்கள்; பின் நான் சொல்வதின் உண்மை விளங்கி நம் செல்வச் சிறுவர்களையும் அடைவோம்" என்றனள். கடவுள் அவ் விரு சிறுவர்களையும் தாயின் வீட்டிலேயே குடி யிருக்கும்படி வைத்தது என்ன விசித்திரம்! கொடிய பிராணிகளின் வாய்பட்ட மக்களையும், கப்பற்றலைவனிடம் சிக்கிய பெண்மணியையும் காப்பாற்றிக் கருணை பாலித்தவர் கடவுளன்றோ!

ஃ

இவ்விதமாக வெகு காலம் பிரிக்கப்பட்டிருந்த குடும்பம் இறைவனருளால் மறுபடியும் ஒன்றாய்ச் சேர்ந்தது. இராணுவ வீரர்க ளெல்லாரும் இதனைக் கேட்டுச் சந்தோஷம் கொண்டாடினர். இவைகள் ஒரு பக்கம் நிகழ, மற்றொரு பக்கம் யுத்தமும் வெற்றியாகி பகையரசர் முதுகிட்டு ஓடினர். ரோமாபுரியில் மறுபடியும் வெற்றிக் கொடி நாட்டப் பெற்றது. இதனால் சக்கரவர்த்தி மனமகிழ்ந்தவராய்ச் சேனாதிபதிக்குக் கௌரவமான பட்டங்கள் பல சூட்டினது மன்றிப் புகழ் மாலையும் பூட்டினர். பின் சிறிது காலம் யூஸ்டேவியஸ் இவ்வுலகம் அளிக்கவல்ல இன்பங்களை யெல்லாம் அனுபவித்தனன்.

ஃ

இவனும் இவனது குமாரர்களும் நிகழ்ந்த யுத்தத்தில் தங்கள் தேசத்திற்காக உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தனர். அவர்களுடைய வீரச் செயல்க ளெல்லாம் புகழத்தக்கனவாயிருந்தன. யுத்தம் முடிந்தபின் யூஸ்டேவியஸ் தன் குடும்பத்துடன் நகருக்குத் திரும்பி வந்தபொழுது சக்ரவர்த்தி பல விமரிசைகளுடன் இவனை எதிர் கொண்டழைத்தான்.

ஃ

டிரோஜன் சக்ரவர்த்தி பின்பு இறந்தனனாக, வேறொருவன் சிங்காதன மேறினன். சிறிது நாட்கள்வரை புதிய சக்ரவர்த்தியும் சேனாதிபதியும் ஒத்திருந்தனர். கடந்த யுத்தத்தில் வெற்றியடைந்ததற்காக யூதர்களின் தெய்வங்களை (Heathen Gods) சந்தோஷிக்கச் செய்யுமாறு பலியிடும்படி உத்தரவளித்து, அதனைச் சரிவா முடிப்பதற்கு யூஸ்டேவியஸைப் புதிய சக்ரவர்த்தி நியமித்தான்.

சேனாதிபதி இதற்கு மனமில்லாதவனாய், "அரசே! நான் கிறிஸ்தவர்களின் தெய்வத்தை வணங்குபவன்; அவருக்குத்தான் நான் ஊழியஞ் செய்வேன்" என்று மறுமொழி கூறினன்.

ஃ

இதனால் சக்ரவர்த்தி மிகவும் கோபமடைந்தவனாய்த் தான் அளித்துள்ள உத்தரவை வற்புறுத்துவானாயினன். ஆனால், சேனாதிபதி மறுப்பதில் உறுதியா யிருப்பது கண்டு, அவனை அவன் குடும்பத்துடன் சின்ன

தாயினிடம் குமாரத்தி தன் அந்தரங்கங்களை வெளியிடுவதுபோல் பிதாவினிடம் புத்திரன் வெளியிடுவதில்லை. அக்கா—தங்கைக்குள் மனம் திறக்கப் பட்டிருப்பதுபோல் தம்பி—தமயனுக்குள் இல்லை. அது என் அப்படி?

பின்னமாக்கிக்கொன்று தின்பதற்காக ஒரு சிங்கத்தை விடும்படி சக்ரவர்த்தி கட்டளையிட்டான். இக்கோரமான காட்சியைக் காணும்பொருட்டு அங்கு வந்திருந்தவர் ஆச்சரியப்படுமாறு, சிங்கம் இவர்களைக் கொல்ல மறுத்ததுமன்றி இவர்கள் முன் வணக்கமாகவும் நின்றது. நன்றியென்பது ஒரு சிறிது மில்லாத அந்தப் புதிய சக்ரவர்த்தி தன் தேசத்திற்கு உண்டாயிருந்த பெரும் ஆபத்தை நீக்கியுள்ள அக் குடும்பத்தை நாசமுறச் செய்வதற்கான மற்றொருகொடூரமான மார்க்கத்தைத் தேடினான். அதாவது, ஒரு பெரிய அக்கினிக்குழியில் அவர்களைத் தள்ளினான் என்பதேயாம். நெருப்பை யணைத்துப் பார்த்த பொழுது யூஸ்டேஷியஸ், அவன் மனைவி, அவனது இரு வீரக் குமாரர்கள் ஆகிய இந்நால்வரும் இறந்தார்களேனும், அவர்களுடைய சரீரங்களுக்கு ஒரு பின்னமும் ஏற்படாமல் நித்திரை செய்வது போன்றிருந்த காட்சியினால், நெருப்பு அவர்களின் சரீரத்தைத் தீண்டவில்லை யென்பது காதலாமலகம்போல் விளங்கிற்று. இவ்வாறாக, யூஸ்டேஷியஸ் இப்பூவுலகில் தன் வெற்றிக் கொடியை நாட்டி, அனுபவிக்க வேண்டியிருந்த இன்ப துன்பங்களையும், அனுபவித்துப் பின் மூக்தியையும் அடைந்தனன். கடவுளைத் துணைகொண்டோரிற் பெரும்பாலார் பல விதத்திலும் கஷ்டமே கண்டனரென்பதும் அநுபவமே யன்றோ!

முற்றிற்று.

> கசாப்புக் கடைக்காரன் கூட அவன் கொன்ற ஆட்டின் மாமிசத்திற்கு எவ்வளவோ பாத்தியதை பாராட்டுகிறான். அந்தப் பாத்தியதையைக் கூட அப்படியே உயிருடன் ஒரு பெண்ணைத் தங்கட்குத் தூக்கித் தந்த பெண்வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார் காட்டுவதேயில்லை. பாடுபட்டு வளர்த்து ஊருக்கு அழுதுவிட்டுப் புண்ணாகிற பெண்ணைப் பெற்ற வயிறு பாவி வயிறுதான். பெண்ணைப் பிரிகிறபோது மனம் படும்பாடு கொஞ்சமா? என் செய்வது?

தன்னிலும் வயதிற் சிறிய தங்கையானாலும் பெரிய பெண்களின் கூட்டத்தில் அவளும் கலந்துகொண்டு பலபல அந்தரங்கங்கள் பேசத் தகுதியுடையவளாய்விடுகிறாள். இந்த உன்னதம் ஆடவர் கூட்டத்திற்கில்லையே!

"தமிழில் என்ன இருக்கிறது?" என்று பழிக்கும் பிரபுக்கள் தமிழ்ச் சுவை அறியாக் கபோதிகள். தன் குமாரன் தமிழில் எழுதுங் கடிதத்தைவிட ஆங்கிலத்தில் எழுதும் கடிதத்திற்குத் தந்தை அதிகமாய்ப் பல்லிளிக்கிறார்!

"பெண் புஷ்பவதியானாள்" என்றால் தனக்குச் சொந்தமான குமாரத்தி தன்னைவிட்டுப் பிரிந்துசெல்லும் காலம் சமீபித்துவிட்டதுபோலும் என்று பெற்ற நெஞ்சு ஒரு பக்கம் திடுக்கிடாமலில்லை. பெண்ணைப் பெற்றவன் பாவி.



கையில் ஒருரோஜாப் பூவுடன் தாண்டவக்கோன் நமது கடைக்கு வந்து அந்தப் புஷ்பத்தைப் பார்த்தபடியே பேசத் தொடங்கினர். "ஓ இனிய மலரே! அழகின் சாயலை நீ உலகுக்கு நன்கு உணர்த்துகின்றாய். நின் தாயாம் செடிக்கு நின்னால் எத்துணையோ பெருமை. நீயே அதற்கு அலங்காரமும் ஒப்பற்ற பூஷணமுமாகின்றனை. உன் சிறு பருவம் நீங்கி, புஷ்பித்து யௌவன மணம் மிகுந்த பின்பு நின்னைக் கொள்ளத் தகுந்தவர்க்கு ஏற்ற பக்குவமி யாகின்றனை. நின்னை அண்டிவரும் யாசகர்களாகிய தேனீக்களுக்கு அவற்றின் பசி தீர இனிய தேனை நின்னிடத்திருந்து உதவுகின்றனை. உலகுக்கும் நின்னை விரும்பியடையும் மாந்தர்க்கும் உனது ஸுவாஸனையை வீசி ஆனந்த பரவசம் கொள்ள வைக்கின்றனை. உன்னை மணந்து உன் மணத்தைச் சுகிப்போர்க்கும் உன்னதம் தந்து, நீயும் அச்சமயம் ஒரு மாட்சிமையான நிலையில் உயர்கின்றனை. ஒருவர் சூட்டிய மலரை மற்றவர் சூடுவது கூடாதென்ற கொள்கை உன் பதிவிரதா தர்மத்தை யுணர்த்துகின்றது. நீ ஒருவரை விரும்பி யடைந்தபின்பு அவரிடத்திலேயே அவரால் சுகிக்கப் பெற்று, அவரிடமே வாடி உன் வாழ்க்கையைப் பூர்த்தி செய்வதன்றி, மற்றவரை நீ நாடுவதில்லை. இது உன் அழகிய கற்பின்மேன்மையை விளக்குகின்றது. நின் வமிசம் பெருகுவதற்கும் நன்கு முற்றிய வித்துக்களையும் நின்பால் உற்பத்தி செய்துகொள்கின்றனை. உன் தாயாம் செடியுடன் இருக்கும்வரை உனக்கு எவ்வளவோ உன்னதம். அச்செடியைப் பிரிந்தபிறகோ மறுதினமே மேனிகுலைந்து வாடிவிடுகின்றாய். அழகாய்த் தோன்றிய நீ அதன்பின் வாடுவதும் உலக இயற்கையே. ஆயினும், உன் தாயாம் செடியிலிருந்தபடியே நீ வாடுவதைவிட, நீ மற்றோரிடம் சென்று பிறரால் அனுபவிக்கப்பெற்று அதன்பின் வாடுவதில் உனக்கு அதிக உன்னதப் பிரதாபம் ஏற்படுகின்றது. அனுபவிக்கப்படாத மலருக்கும், பெண்ணுக்கும், பூஷணங்கட்கும் பெருமையில்லை. பிறரால் அனுபவிக்கப்படும்பொழுதுதான் நீ ஒரு புதிய அழகினையும், அழகின் மாட்சிமையான உன்னத ஸ்தானத்தையும் பெறுகின்றாய். நீ அழகிய மலராயினும் உனது அதிர்ஷ்டம் எவ்வாறிருக்கின்றதோ யார் கண்டார்? நீ சவத்தின் கழுத்திலும் விழுந்து அலங்கோலமாகலாம், மனுஷ்யரின் கழுத்திலும் கூந்தலிலும் அணியப்பெறலாம். பகவானை அர்ச்சிப்பதற்கும் உபயோகப்படலாம். உன் பாக்கியத்தின் சுழி எப்படியோ!

"இவ்வளவு பேதமையுள்ள தன் குமாரத்தி கணவன் வீட்டிற்குச் சென்று எல்லோருக்கும் சரியாக எப்படி நடக்கப்போகிறாள்?" என்று கவலைப்படுகிறார் தந்தை. அந்தந்தக் காலத்தில் அந்தந்த புத்தியும் தானே கூடிச்சேரும்.

நீ இன்னொரு கற்பனையையும் உலகுக்குத் தெரிவிக்கின்றாய் உன் நிலையிடமான செடியினின்றும் நீ பிரிந்தவுடனே வெகு சீக்கிரத்தில் வாடிப் போய்க் குப்பையிற் கொட்டப்படுவது உலகுக்கு நல்ல புத்திமதியாக உதவும். தமது குடும்ப நிலையினின்றும் பெயர்ந்த மங்கையர் உன்னைப் போலவே குப்பையிற் கொட்டும்வண்ணம் இழிந்த ஸ்திதியை யடைவர். தம் நற்குண நிலையிலேயே நிற்கும் ஆடவரும் அரிவையரும் தாமும் மேன்மையுற்று, தமது உத்தம குணச் செயல்களால் உலகத்தையும் மகிழ்வித்து உபகாரிக ளாகின்றனர். தம்மிடத்திலேயே நிலைத்திருக்கும் போதுள்ள மேன்மை, நிலை தளர்ந்திட்டபோது இல்லையென்பதை ஓ இனிய மலரே! நினது மற்றொரு படிப்பினையாக நின்னையே காட்டிக் கொண்டு உலகுக்குத் தெரிவிக்கின்றாய். உன்னிடமிருந்து நான் பெறும் இந்தப் படிப்பினைகள் என் வாழ்நாளில் என்றும் எனக்குத் துணையாகுக" என்றார். ஃ

கடலைச் செட்டியார் அதன்பின் எழுந்து, "ஓ! கடலே! எத்தனையோ வேகத்தோடும் நின் அலைகளுடன் சிறிது கனத்த இரைச்சலுடன் கரையை உடைத்தெறிய ஓடி வருகின்றனை. ஆயினும் என்ன? கரைக்கு அருகில் வருவதற்குள் உனது பலத்தின் பல பகுதியை இழந்துபோகிறாய். கரையை உடைக்க நினைத்த தீய நினைவு நிறைவேறுவதற்குள் உன் அலைகளின் சக்தி ஓய்ந்துபோக, நீயும் பின்னடைந்து திரும்பிப் போகும் படியாய்விடுகிறது. நீ கரையை எதிர்க்க வரும் ஒவ்வொரு தடவையும் தோல்வியே கிடைக்கின்றது. உன்னால் கரையை உடைத்தெறியக் கூடவில்லை. ஆயினும், ஆரம்பத்தில் நின் அலைகளின் சீறுதலும், அவை உயர எழுதலின் ஆரவாரமும் பெரிது பெரிதே. முடிவோ தோல்வியுடன் வெட்கித் திரும்புதலே. உலக மாந்தர் தாம் தாம் பிறருக்குத் துன்பம் விளைக்க முயலுங்காலையில் கொள்ளும் உற்சாகமும் ஜம்பமும் முடிவில் பெறுகிறதில்லை. முதலில்வெற்றி போல் தோன்றினாலும், கடைசியில் தோல்வியையே காண்கின்றன வென்பதை ஓ! கடலே! நினது சோர்ந்து தளர்ந்த அலைகளைக் கொண்டு உலகுக்குப் போதிக்கின்றாய்" என்றார்.

ஃ

"உன் வேலைக்கு உதவியாக ஒருவனை நீ எதிர்பார்க்கையில், அவனோ சற்றுப் பிகுவுடன் நீ அழைத்த பிறகே போகலாமென்றும், தான் இல்லாமல் வேலை முடியாதென்றும் கர்வித்து ஒதுங்கியிருக்க நினைக்கிறான். அந்த சமயம் நீ செய்யவேண்டியதென்ன? அவன் உதவியில்லாமலே நீ அந்தக் காரியத்தை எவ்விதமேனும் முடித்துக்கொள்ளப்பார்த்து,—அவன் இல்லாமலே நீ எதையும் சாதிக்க முடியுமென்று—அவன் உணரும்படி செய்துவிட வேண்டும். மற்றவர்களைக் கூவிக்கு அமர்த்திக்கொண்டாவது உன் வேலையை அவன் சகாயமின்றி முடித்துவிட வேண்டும். அதுதான் புருஷத்துவமாகும். அவ்விதம் நீ திடமான மனதுடன் ஒரு உறுதி கொள்ளும்போது கடவுளும் உனக்குத் துணைநின்று அதை முடித்துக் கொடுப்பார். அவ்விதம் முடித்துக் கொண்டு இறைவனை மனதாரத் துதித்தபடியே, வெளியில் உன் சக்தியைக் காண்பித்தவாறே உன்

"மூத்தமனைவி வைத்த ரசம் நன்றாயில்லை" என்று இளையாள் வீட்டிற்குச் சென்றானாம். அவளோ கழுதையின் சிறுநீரைப் பிடித்து அதில் உப்பிட்டு ரசம் என்று ஊற்ற வெகு ருசியாயிருக்கிறதென்று ஆவலாய்ச் சாப்பிட்டானாம்!

மீசையை முறுக்கியபடி கர்வத்தோடு நில். தான் இல்லாது வேலை முடியாதென்றெண்ணிப் பிகுவு செய்தவனோ உன்முகம் காண நாணி மறைவான்" என்று ஆவடைப் பண்டாரம் பகர்ந்தார்.

ஃ

" அவர் நமக்கு எழுதும் கடிதம் வெகு தித்திப்பு தான். பலபல செய்திகளையும் அக்கடிதத்தில் கண்டிருக்கிறார். ஆனால், நமக்கு வேண்டிய முக்கியமான விஷயத்தைமட்டும் எங்கேயோ காற்றில் பறக்கவிட்டு அதை மட்டும் கடிதத்தில் குறிப்பிடாமல் விட்டுவிட்டு, தமது மற்ற வேலைகளைச் செய்தனுப்பும்படி வேண்டிக் கொள்ளுகிறார். நாமும் அவரது விநோதமான போக்கை அவரிடமிருந்து கற்றுக்கொண்டு, அதை அவருக்கே உபயோகிக்க நினைத்துவிடுகிறோம். " ஆகா! உங்களின் காரியத்தை நாளைக்கே செய்து முடித்து அனுப்புகிறோம்; அது எங்களுக்கு மகாபாக்கியமாகும்" என்று உபசார வசனங்களுடன் ஒரு கடிதத்தை எழுதி முடித்து அனுப்பிவிடுகிறோம். அத்துடன் நமது கடமையும் தீர்ந்துவிடுகிறது. கடிதத்தில் நாம் எழுதியபடி அவரது வேலையை முடித்தனுப்புவதேயில்லை; மௌனமாக இருந்துவிடுகிறோம். நமது முக்கிய காரியத்தில் மெதுவாக ஒதுங்கிக்கொண்டு சாடையாய் மௌனமாய் இருந்துவிட்ட அவர், தம்மைப்போலவே நாமும் அவர் காரியத்தில் ஒதுங்கி மௌனமாக இருந்துவிட்டதைக்கண்டு மூக்கின்மீது விரலை வைத்து ஆச்சரியப்படுகிறார். தமது ஒதுங்கி நின்ற தந்திரத்திற்கு நாமும் இளைத்தவர்களல்லவென்று உணர்ந்துகொண்டு மௌனமாகிறார். வெறுங்கைக்கு வெறுங்கை உபசாரமாக இது முடிகிறது. நண்பர்களின் உலகம் தற்போது இப்படித்தான் தந்திரமான போக்கில் இருக்கிறது" என்று தோந்தி செட்டியார் கூறினார். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

இரவில் தூக்கமயக்கம். மூளையில் கலக்கம். ஏதோ ஒரு பளுவு வந்து அழுத்தும் பான்மை. அதிகாலை நேரமோ மூளைக்குத் தெளிவு தர, அறிவும் அழுக்கற்றிருக்க, தன்னை அறியாமலே எழுதுகோல் ஓட, எல்லா வேலையும் தாங்கச் சக்தியும் உண்டாகிறது. ஆகாய—பூமி சம்பந்தம் மானிடரையும் பாதிக்கின்றதென்பதற்கு இது ஒரு உதாரணம். இவ்விதமே நக்ஷத்திரம், திதி, இவற்றின் பலனும் மக்களின் ஜாதகத்தைப் பாதிக்கிறது.

ஒருவனைக் குறித்து வருத்தமாய்க் கடிதம் எழுதி எவரிடமேனும் தந்து அனுப்ப நினைக்கையில், அவனே நேரில் வந்து அதைப் பெற்றுக்கொள்கிறான். கடிதத்தை வாங்குவதற்குமுன் இருந்த முகம் பிறகு அவனுக்கு இல்லை.

பையன் மிட்டாய்க்காக அழ, மாற்றாந்தாயோ அவன் தன்னுடன் கடைக்கு வாவேண்டுமென்று அழுகிறான் என்று தன் கணவனிடம் அதை மாற்றிச் சொல்லுகிறாள். அந்த மூடக் கணவனும் அதை நம்பிவிடுகிறான்.

பழமொழிக் குறிப்புகள்

2—அற்ப குணம்.

(முன்பக்கம் 233-லிருந்து.)

192. குருணிமைதானிட்டாலும் குருடு குருடே.

என்னதான் மேலுக்கு மினுக்கினாலும் உள்ளே இயற்கையாக அமைந்து விட்ட ஜென்ம குணமான அல்ப புத்தி என்றைக்கும் போகாது; அந்த அல்பத் தன்மையின் அவலக்ஷணமும் வெளிக்குத் தெரியாமலிராது என்பது இந்தப் பழமொழியின் கருத்து. அந்த அல்பத்தைத் திருத்த எவ்வளவுதான் முயற்சி எடுத்துக்கொள்ளட்டுமே; அது ஒருபோதுமே திருந்தாது. படிப்பு கூடை கூடையாகப் படித்தவர்களாகவே யிருக்கட்டும்; அவர்களுக்கு அல்பகுணமே இயற்கையானால் அதை எந்தச் சமயத்திலும் காண்பித்துக்கொள்வார்கள். சிலர் எந்த உறவிலும் நேசத்திலும் பணத்தின்மீதே கருத்துடையவர்களாய், அதை எவ்விதமாகவெல்லாம் பிறரிடமிருந்து எந்தெந்த வேளையில் கறந்துகொள்ள முடியுமோ அந்தந்த சமயத்தை யெல்லாம் இழுத்துப்பிடித்து உபயோகப் படுத்திக்கொள்வார்கள். ஒருவனைக் கொடுக்கும்படியாக நன்றாக நெருக்கிப் பிசைந்துவிட்டு, அதன்மேல் அவன் தன் வீட்டில் அரிசிக்குக்கூட வழியற்று நிற்பதையும் கவனியாமல் எவ்விதமோ பணம் சேர்த்துக்கொடுக்க வருகிற போது, என்னத்துக்கு இது வேண்டாமே; நீயே வைத்துக்கொள்கிறது தானே; நான் அப்படிப் பணமே பணமே என்று அலைகிறவனல்ல; பணமே நோக்கமாகக் கொண்டவனல்ல; எனக்கு அந்தப் பணம் வேண்டவே வேண்டாம்; ஆனாலும் நீயே மனம் வைத்துக் கொடுக்க வருகிறதை நான் வேண்டாமென்று சொல்லக்கூடாதானதால் வாங்கிக்கொள்கிறேன்; இதைப்பற்றி வித்தியாசம் எண்ணவேண்டாம்; நான் அப்படிப் பேதம் நினைக்கிறவனல்ல; உன் சக்திக்குத் தகுந்தபடி என்ன கொடுத்தாலும் நான் வாங்கிக்கொள்ள வேண்டியதுதானே என்று வெகு அன்பும் ஒப்பாரி உபசாரமுமாகப் பசப்பி அந்தப் பணத்தை மெதுவாகப் பெற்றுக்கொண்டுவிடுவார்கள். இது பெற்றுக்கொள்ளுகிறவரையில் பேசுகிற புளுகு புராணம்! அப்பால் பெற்றுக் கொண்டபிறகோ, இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடவே நினைக்கிறேன், ஆனாலும் உன் பொன்னான மனம் நோகுமே யென்றுதான் அவ்விதம் திருப்பிக் கொடுக்கவில்லை யென்று இன்னும் என்னென்னவோவெல்லாம் உபசாரப்பேச்சுக்களை அளந்துகொட்டித் தாங்கள் மிக்க கருணையும் உறவும்

தன்னையும் உலகையும் யாவற்றையும் மறந்தநிலை ஒவ்வொருவருக்கும் பிரதிதினமும் உண்டாகிறது. விழித்துக்கொண்டால் அதற்கு நித்திரை என்று பெயர். விழிக்காவிடிலோ மரணம் என்று பெயர்.

நேசமும் அன்பும் உள்ளவர்களாகக் காட்டிப் பேசுவார்கள். இந்தக் கூத்துகளெல்லாம் உள்ளே ஊறிப்போய் இருக்கிற அல்ப குணத்திலிருந்து ஊறி வெளியேவருகிற ஊற்றுகள் தான். சிலர் நாலணா பெற்றுப் போவார்கள். அவர்கள் அதைக் கடனாக வாங்குகிற சமயமோ வெகு அவசரமுள்ளதாகக் காட்டுவார்கள்; அடுத்த நிமிஷமே கொண்டுவந்து கொடுத்துவிடக்கூடியவர்கள்போல் நடிப்பார்கள். கடைசியிலோ ஜென்ம ஜென்மத்துக்கும் திருப்பித் தரார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய்ப் பல குட்டிகளைப் பெற்றுப் பெரியபேர் எடுத்தவர்களாகவே காணப்படுவார்கள். ஆயினும், என்ன பெரியபேர் இருந்தாலும் அவர்களுடைய ஜென்மத்தில் ஏற்பட்டுவிட்ட அல்ப குணத்தை அவர்கள் எந்நாளும் விடவேமாட்டார்கள். இப்படிப்பட்ட குருட்டுக்கண்களுக்கு மையிட்டுப் பெரிய பேர் அந்தஸ்து வைத்து அழகுபடுத்தினாலுங்கூட, அது ஜென்மத்தில் ஏற்பட்ட குருடாகத்தான் இருக்குமென்பது இதன் தாத்பரியம்.

193. நடுவூரில் நச்சுமரம் பழுத்தென்ன?

எவ்விதப் பயனுமே உண்டாகமாட்டாது. அத்துடன் போவதில்லை. அந்த நச்சுமரத்தின் கனியால் கெடுதலும் நேரக்கூடும். அல்பனுடைய சங்கதியும் இவ்விதமே. அவனுக்கு ஏராளமான செல்வம் சேர்ந்துவிட்டிருக்கலாம். அதனால் யாருக்கென்ன பிரயோஜனம்? வந்த செல்வத்திமிரால் மற்றவர்களுக்கு அவன் கெடுதி செய்யக்கூடியவனாகவே முடிந்துவிடலாம். இப்படியே அருகில் ஒரு சிறந்த வைத்திய ரிருக்கலாம். என்ன பணம் கொடுத்தாலும் இன்னும் பணம் பிடுங்குகிற நோக்கமாகவே இருந்துகொண்டு வியாதியை விருத்தியடையச்செய்து அதிக பணம் பெறுவதில் கருத்தாய் நல்ல மருந்தை முதலில்தானே தராத அல்பதன்மை கொண்டிருப்பாரானால், அந்த நச்சுமரத்தாலும், அதன் கனியாலும் என்ன பிரயோஜனம்? இவ்விதமே அல்ப குணமுள்ள நண்பர்களாலும் என்ன லாபம்? ஒருபயனுமில்லை யென்றபடி.

194. நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும்.

நரி வெகு தந்திரமுள்ள ஜந்து. அந்தத் தந்திரத்தை எப்பொழுதும் அல்பத்தன்மையிலேயே அது உபயோகப்படுத்துவது வழக்கம். ஆகவே, ஒருவனை அவன் பக்கா நரி யென்றால், பலே சுயகாரியப் புலியென்பது அதன் பொருள். சுயகாரியமே நோக்காக உள்ளவன் எவ்வளவு பெரிய ஸ்தானத்தில் வீற்றிருந்தாலும், அவனது நாட்டம் சுயநலமே ஆகி, அதற்குத் தகுந்தபடி அல்ப குணமும் பொருந்திக்கொண்டு, பிறனுக்குக் கிடைக்கிற லாபத்திலும் பொறாமைக்கண்களை யுடையவனாய், அதிலும் தனக்கு ஏதாவது பங்கு கிடைக்கும்படி வழி தேடிக்கொள்வான். தனது அல்பகுணத்திற் கேற்ப

அடங்கிக் கிடக்கிறதென்று எதையும் எண்ணிவிடாதே. அதற்குரிய வேளை வந்தால் அதுவும் தன் வேலையில் ஒருபெரிய போர்வீரனாய் விடும்.

நடுஇரவில் தன்னை எவரோ தொட்டதாய் நினைத்து "யார் அது?" என்றால் எவரையும் காணோம். பிறகு தன் பேனா மேஜையிலிருந்து உருண்டு மடியில் விழ, அது எவரோ தொட்டதுபோ லிருந்ததென்று உணருகிறார்.

தனது அதிகாரத்தை எப்பொழுதும் நியாயத்துக்கும் இரக்கத்துக்கும் விரோதமாகவே செலுத்தி கெடுதியையே அதிகமாகச் செய்வான். பிறனுக்கு உண்டாகக்கூடிய அனுகூலத்தையும் தடுத்து அவனையும் பழிப்பான். இத்தகையோரைப் பார்த்து வயிறு எரிந்தவர்கள் "நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும்" என்று ஒரு பழிப்பாக இந்தப் பழமொழியை எடுத்துச் சொல்வார்கள்.

195. நரி கொழுத்தென்ன, காஞ்சிரம் பழுத்தென்ன?

யாருக்கு என்ன லாபம்? நமக்கு வேண்டியவர்கள் பெரிய ஸ்தானத்தில் உயர்ந்துவிட்டார்களென்று சந்தோஷப் பட்டாலும், அவர்கள் அல்பகுணமுடையவர்களாய், நம்மையே ஒரு பொருட்டாக லக்ஷியம் செய்யாதவர்களாய் இருந்தால், அவர்கள் உயர்ந்தென்ன, உயராமற் போயென்ன? பல லக்ஷம் ரூபாய்களை அவர்கள் சம்பாதித்திருந்தென்ன, சம்பாதிக்காமற் போயென்ன? இரண்டும் ஒன்றுதான். நமக்குத் தெரிந்தவர்கள்—நம்மைச் சேர்ந்தவர்கள் இன்னின்ன பதவியில் அகங்காரப் பொம்மைகளாய் இன்னின்ன செல்வாக்குடன் சொத்துகளுடன் இருப்பதாக நாம் நம்மைப் பெருமைப் படுத்திக்கொள்ளலாம். அதில் நமக்கு வரும் பயன் என்னவோ? நரி கொழுத்து எவருக்கென்னலாபம்? இத்தகையோரை நம்பியோ, எதிர்பார்த்தோ, காலம் போக்குவதைவிட, நாமே நமது முயற்சியையும் உழைப்பையும் நம்பிக் கொள்வது மேலாக இருக்கும். (தொடரும்.)

மாமியோ

அதிகவாய். அவளை விட மருமகள் மிகப் பெரிய பிரஸங்கி. இவ்விரண்டு பேச்சுக்காரிகளும் தங்கள் பேச்சில் ஒருவரை யொருவர் மிஞ்சப் பார்ப்பதில் வெற்றி யாருக்கோ?

இரண்டு! இரண்டு!! இரண்டு!!!

1. வந்தாற் போகாதவை இரண்டு.
   கீர்த்தியும் அபகீர்த்தியும்.
2. போனால் வராதவை இரண்டு.
   மானமும் பிராணனும்.
3. வந்துபோய்க் கொண்டிருப்பவை இரண்டு.
   சுகமும் துக்கமும்.



நமது கதாப் பிரஸங்கி.

மாய வாத்தியம்

(உண்மையாக நடந்த ஒரு சம்பவம்.)

அமெரிக்காவின் மலைநாடுகளிலே பெர்சிலி என்ற ஒருகிராமத்திலே பண்டைக்காலத்தில் காட்வெல் என்ற ஒரு வாத்தியக்காரன் வசித்துவந்தான். அவனுக்குச் சங்கீதத்தில் விசேஷப்பயிற்சி உண்டு; பலபல வாத்தியங்கள் செய்வதிலும் பழக்கம் உண்டு; மேலும், தெய்வீக சக்தி ஒன்று அவனிடம் இருந்ததை யாவரும் கண்டு வியப்புற்று வந்தனர். அவன் யாருடனும் அதிகமாக நெருங்கிப் பழகாமல் பத்து வருஷகாலம் துறவிபோல வாழ்ந்துவந்தான். நாள் முழுவதும் ஏதோ ஒரு வாத்தியத்தைச் செய்வதிலேயே அவன் கண்ணும் கருத்துமாயிருந்தான். கடைசியில் ஒரு ஞாயிற்றுக்கிழமை யன்று மாதாகோயிலில் அவ்வூரார் அனைவரும் பிரார்த்தனைக்குக் கூடியிருந்த பொழுது அவன் 'ஹார்மோனியம்' போன்ற ஒரு வாத்தியத்தைத் தலையில் வைத்துக்கொண்டு அங்குவந்து சேர்ந்தான். பிரார்த்தனை முடிந்ததும் அவன் ஊராரை நோக்கி, 'நான் வெகுகாலம் சிரமப்பட்டு தெய்வானுக்கிரகத்தால் இந்த வாத்தியத்தைச் செய்து முடித்தேன். இதை இந்தக் கோயிலில் வைத்துவிடப்போகிறேன். இதன் மகத்துவம் யாதெனில், விவாகம் செய்துகொள்ளும் வதூவரர்கள் இங்கு வந்து நமது குருவினது அனுக்கிரகத்தைப் பெறும் சமயத்திலெல்லாம், அந்த விவாகம் கடவுளுக்குச் சம்மதமான உத்தம விவாகமானால் இந்த வாத்தியம் தானே வாசித்து இனிய கீதங்களைப் பாடும்; அவ்வாறின்றி பெற்றோருடைய வற்புறுத்தலுக்கு இணங்கியோ, அல்லது அசுத்தமான மனதுடனோ, அல்லது வஞ்சக எண்ணத்துடனோ நடக்கின்ற விவாக காலங்களிலெல்லாம் அது மௌனமாக இருந்துவிடும்' என்று கூறினான்.

ஃ

அது முதற்கொண்டு அவ்வூரில் பரிசுத்த மனத்துடனும் உண்மைக் காதலுடனும் விவாகம் செய்துகொள்வோர் மட்டுமே அக்கோயிலுக்குத் தைரியமாகச் சென்றனர். அவ்விதமின்றி விவாகத்தின்மூலம் திரவியம் சம்பாதிக்க முயற்சிப்போரும், அன்பு இல்லாதவரும், மற்ற எவ்விதத்திலேனும் அநியாயமான முறையைப் பின்பற்றுவோரும் அங்குச் செல்லத் தயங்கினார்கள். நாளுக்குநாள் இந்த அபூர்வ வாத்தியக்காரனது புகழ் நாடெங்கும் பரவிற்று.

ஃ

பெரிய நரகவாதனையாகத் தோன்றித் துயர்விளைத்த இன்றையபொழுது எப்படியோ போயிற்று. நாளைப்பொழுது கலகமில்லாது விடியவேண்டுமே!

கால்ட்வெல்லுக்கு அப்பொழுதும் விவாகமாகாமல் இருந்தது. அவனுடைய திறமையையும், இளமையையும், அழகையும் கண்டு மயங்கிப் பல மாதர் அவனை மணக்க இணங்கினர். கடைசியில் அவன் அவர்களுக்குள் உத்தமமான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து, விவாகதினத்தை நிச்சயித்தான். நாடெங்கும் இதே பேச்சாக இருந்தது. பெர்க்லி என்ற சிறு ஊரில் மிகவும் இடமின்றி ஜனங்கள் நிறைந்துவிட்டனர்.

ஃ

இதையெல்லாம் கண்ட கால்ட்வெல்லுக்குத் தன் மகத்துவத்தைப்பற்றிய பெருமை கட்டுக்கடங்காமல் தோன்றிவிட்டது. 'நான் கடவுளுக்குச் செய்திருக்கும் உதவிதான் என்னே! அவருடைய கோயிலுக்கு அத்தகைய அரிய வாத்தியத்தை அளித்திருக்கிறேனே! எனது விவாகம் நடைபெறும்பொழுது அந்த வாத்தியம் ஆனந்தத்தினால் பொங்குவது போலப் பாட்டுக்களை அள்ளிக் கொட்டும்!' என்றெல்லாம் அவன் மனோராஜ்ஜியம் செய்தான்.

ஃ

விவாகதினம் வந்தது. மண ஊர்வலம் தொடங்கி மாதாகோயிலையடைந்தது. எங்கும் ஒரே குதூஹலமாய் இருந்தது. மணப்பெண்ணோ தெய்வலோக ஸ்திரீபோல் விளங்கினள்; அவளைக் கண்டவர் எவரும் மனதார வாழ்த்தினர். கேவலம் மனித ஸ்திரீகளிடையே இல்லாத ஒரு ஒளி அவளிடம் திகழ்ந்தது. ஆனால், அவளது கையைப் பிடித்திருக்க பவுண்ணனே பார்வைக்குக் கம்பீரமாகவே தோன்றினலும், உள்ளே தற்பெருமை நிறைந்தவனயிருந்தான். முகூர்த்த காலம் சமீபித்துவிட்டது; யாவரும் வாத்தியத்தையே நோக்கி நின்றனர். அதுவோ வளர்த்த கடா மார்பில் பாய்வதையொத்து வாயைத் திறக்கவேயில்லை. குருவோ மந்திரங்களைச் சொல்ல ஆரம்பித்துவிட்டார். மாயவாத்தியம் மாயமௌனம் சாதித்துவிட்டது.

ஃ

கால்ட்வெல்லுக்குக் கோபம் பொங்கிற்று. தான் அன்புடன் காதலித்த பெண் தன்னை வஞ்சித்துவிட்டாளெனவும், அவளும் தன்னை முழு மனதுடனும் விரும்பாததாலேயே கடவுளுக்கு அம் மணம் சம்மதப்படவில்லையெனவும், ஏதோ தன் புகழைக் கண்டுமட்டும் அவன் தன்னை மணக்க இச்சித்தாள் எனவும் அவன் நம்பித் தன் மனைவியைத் திட்டலானன். அவ்வுத்தமியோ தான் மனப்பூர்வமாக அவனையே காதலித்ததாக உறுதி கூறினள். கூறி என்ன பயன்? சட்ட பூர்வமாக விவாகம் நடந்தேறிவிட்டாலும் கால்ட்வெல் அவளைத் திரஸ்கரித்துவிட்டு வேறு தேசம் சென்றுவிட்டான்.

ஒருவேளை தான் அவ்வுத்தமிக்கேற்ற கணவன் ஆகாததனலேயே கடவுளுக்கு அவ்விவாகம் சம்மதப்படாமல் போயிற்றோ என்ற ஐயம் அவனுக்குத் தோன்றவே இல்லை! குடும்பத்தில் ஏற்படும் இடையூறுகளுக்கெல்லாம் பெண்டிரையே காரணமாகச் செய்வது யாவருக்கும் இயற்கையே யல்லவா? மணவாழ்வென்பது கணவன், மனைவி என்ற இரு பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டதே யாதலின், அதில்

இரண்டு பத்திராதிபர்களும் அதிக உறவுதான். ஆனால், தங்கள் பத்திரிகையினுடைய சந்தாதார்களின் ஜாபிதாவை ஒருவருக்கொருவர் காண்பித்துக் கொள்ளமாட்டார்கள். அது போக மற்ற விருந்து உபசாரமெல்லாம் உண்டு.

தவறு ஏற்பட்டால் அந்தத் தோஷம் இருவர்மீதும் இருக்கக்கூடும் என்பதை அறிவோர் எத்தனை பேர்!

ஃ

நாட்கள் சென்றன. வருஷங்கள் பல ஆயின. கால்ட்வெல் கண்ட தேசங்களிலெல்லாம் சுற்றியலைந்து திழவனுனன். நாளாக ஆக மனைவியின் ஞாபகம் அவனுக்கு உண்டாயிற்று. தான் செய்த அநீதியைக் குறித்து வருந்தினுன். ஒரு அபலை ஸ்திரீயை அநாதையாக விட்டுவந்த கொடுமையைநினைத்துத்துக்கித்தான். கடையில் மீண்டும் ஊர் சென்று அவளை யடையலாம் என்று நிச்சயித்தான்.

தன் சொந்த ஊரைக் கண்டதும் அவனுக்கு எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று. ஆனுல் அங்கு அவனை சுலபமாக எவரும் அறிந்து கொள்ளவில்லை; அவன் அவ்வளவு உருமாறி இருந்தான். கொஞ்சதூரம் சென்றதும் ஒரு நீண்ட ஊர்வலம் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தது. ஒரு பெட்டியில் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு சிலர்வர, அதன்பின்னுல் பல புருஷர்கள் பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து வந்தனர். இருபுறங்களிலும் மாதர்கள் மலர்களை வாரி அர்ச்சித்தனர். கொஞ்சமேனும் சத்தமில்லாமல் சென்ற அந்த ஊர்வலம் யாவர் மனதையும் உருக்கிவிடும் காக்ஷியாயிருந்தது.

கால்ட்வெல் அண்டையிலிருந்த ஒரு மனிதனை நோக்கி 'இறந்தவர் பெரிய மகான்போ லிருக்கிறதே! இது யார்?' என்று வினவினுன். 'இவ்வூரில் மாயவாத்தியக்காரன் ஒருவன் இருந்தான். அவனை மணந்த உத்தம ஸ்திரீதான் இன்று இறந்துவிட்டாள். அவள் ஆயுள் முழுவதும் சந்நியாசினியாக வாழ்ந்து எங்கள் ஊரின் தருமதேவதைபோல இருந்து வந்ததால், இக்கடைசி மரியாதையை அவளுக்குச் செய்கிருேம்' என்று பதில் கிடைத்தது.

கால்ட்வெல் ஓவெனக் கதறியழுதான். அவ்வூரார் அவனை அடையாளம் தெரியாமல் 'தருமதேவதை (அதுவே சந்நியாசினிக்கு ஊரார் அளித்த நாமம்) யின் உதவியைப் பெற்ற கோடிக்கணக்கான ஏழைகளுள் இவனும் ஒருவன் போலும்' என்று எண்ணினர். கால்ட்வெல் அழுத கண்ணுடனேயே முன் சென்று சவப்பெட்டியைத் தூக்குவோருடன் சேர்ந்துகொண்டான்.

மாதா கோயிலில் சவப்பெட்டி இறக்கப்பட்டதும் புதிதாக வந்த மனிதன் அதன் முன்னர் முழங்காலிட்டுப் பணிவதை யாவரும் கண்டனர். அதேசமயம் பல வருஷங்களாக மௌனம் சாதித்த வாத்தியம் உயிர்பெற்று அருமையான கீதத்தை அள்ளிச் சொரிந்தது. மறுநிமிஷம் புதிதாக வந்த மனிதன் தலை சாய்ந்தான்.

சவச்சடங்கை நடத்தவந்த குரு அவன் யாரெனக் கண்டுகொண்டார். காதலரிருவரும் ஒன்ருக அடக்கம் செய்யப்பட்டனர். பரிதாபம்!

இகலோகத்தில் பிரிவுற்றவர் பரலோகத்தில் ஒன்று கூடினர்போலும்!

ஃ

பெர்க்லி நகரத்தின் மாதாகோயிலில் இன்னமும் அவ்வாத்தியத்தைக் காணலாம். ஆனுல், மேற்கூறிய சம்பவத்திற்குப்பின் அது மௌனமாகவே இருந்துவருகிறது.

R. இராமகிருஷ்ணன் M. A.



(முன்பக்கம் 112-லிருந்து)

544. I have too deeply read mankind To be amus'd with friendship; 'tis a name Invented merely to betray credulity: 'Tis intercourse of interest—not of souls. HAVARD.

நான் மானிட வர்க்கத்தை அதிகமாக ஆழ்ந்து படித்திருப்பதால் சிநேகிதத்தின் தன்மையை நோக்க எனக்குச் சிரிப்பு உண்டாகிறது. அது (மனிதனுக்குச் சுயேச்சையாகவே உள்ள) பேதமைத் தன்மையை ஏமாற்றுவதற்காகக் கண்டுபிடித்த ஒரு பெயரேயாகும். அது அவரவர்களின் விவகாரத்தை நிறைவேற்றுவதற்காக ஏற்பட்ட வழக்கமேயன்றி ஆத்ம விருத்திக்காக ஏற்பட்டதல்ல.

ஹாவர்ட்.

545. I will take your friendship up at use, And fear not that your profit shall be small; Your interest shall exceed your principal. TOURNEUR.

எனக்கு உபயோகத்திற்கு வேண்டியபோது உன்னுடைய நட்பை ஏற்றுக்கொள்ளுகிறேன். அதனல் உனக்கு ஏற்படும் லாபம் சொற்பமாக இருக்குமென்று பயப்படவேண்டாம். உனக்குக் கிடைக்கும் லாபம் உன் கஷ்டத்தைவிட கூலி கொடுக்கும்.

டோர்நியூர்.

546. When true friends meet in adverse hour, 'Tis like a sunbeam through a shower; A watery ray an instant seen, The darkly closing douds between. SIR WALTER SCOTT.

உண்மை நண்பர்கள் இடுக்கண் உற்ற காலத்தில் சந்திப்பது மழை தூற்றலில் ஊடுருவி வரும் சூரிய கிரணத்தைப் போன்றும், இருண்டு அடர்ந்த மேகத்தின் மத்தியில் ஒரு நொடியில் தோன்றி மறையும் மின்னலைப் போன்றும் இருக்கும்.

ஸர் வால்டர் ஸ்காட்.

547. Friendship is no plant of hasty growth, Tho' planted in esteem's deep fixed soil, The gradual culture of kind intercourse, Must bring it to perfection. JOHN BAILLIE.

நட்பு சீக்கிரத்தில் வளரும் செடியல்ல. அது கண்ணியம் என்னும் நிலத்தில் வேரூன்றி இருந்தபோதிலும் நெடுநாளைய அன்பும் பழக்கமும் அதைச் சம்பூரண மாக்கவேணடும்.

ஜான் பேயலி.

548. Friendship, like a noble river, Rolls its stately waters by; Tempest toss'd and troubled never, Gliding to eternity. Ms.

நட்பு ஒரு சிறந்த நதியைப் போன்று தன்னுடைய மகத்துவ

அந்தப் புஸ்தகத்தையா கேட்கிறீர்கள்? அதைக் குப்பையிலே எடுத்தெறிந்தேன். இப்போது நீங்கள் அதைக் கேட்பதால், அது நாலு ரூபாய் விலைக்கு உயர்ந்துவிட்டது. கேட்பவர் ஏற்பட்டால் எதற்கும் மதிப்புதானே.

மான வெள்ளத்தைப் புரட்டிச் செல்லுகிறது. புயல்காற்றினால் தொந்தரவு ஏற்பட்டாலும், யாதொரு கலக்கம் அடையாமல், எப்பொழுதும் விடாது நகர்ந்து போய்க்கொண்டேயிருக்கும். Ms.

549. A man should keep his friendship in constant repair.

JOHNSON

மனிதன் தன்னுடைய நட்பை அடிக்கடி சீர்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். ஜான்ஸன்.

550. I look upon everyday to be lost in which I do not make a new acquaintance.

JOHNSON.

புது சிநேகிதம் ஒன்றை அடையாத ஒவ்வொரு நாளையும் நான் இழந்ததாகக் கருதுகிறேன். ஜான்ஸன்.

551. Friendship is the cordial drop to make the bitter drink of life to go down; but if the drop is not nauseous, if it be all sweet there is no occasion for that drop. JOHNSON.

வாழ்க்கை என்னும் கசப்பான பானத்தை உள்ளே விழுங்குவதற்குச் சிநேகம் என்பது மதுரமான இன்பத் துளியாம். ஆனால், அந்தப் பானம் மதுரமாகவே இருந்துவிட்டால், அந்த இன்பத் துளியை உபயோகிக்க வேண்டியதே இல்லை. ஜான்ஸன்.

P. G. குலசேகரம்.

ஆசிரியர்களின் வாழ்க்கைத் தவறு

நூலாசிரியர்களோ பத்திராசிரியர்களோ மற்றவர்கள் விஷயத்தில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால், தம் சொந்த தேகப் பாதுகாப்பிலோ மகா கொலைக்காரர்களாவர். ஓயாது உழைத்துச் சரீர சுகத்தைக் கவனியாது தம்மையே சிறுகச் சிறுகக் கொலைசெய்துகொண்டு அநியாயச் சாவில் முடிகின்றனர். உலகத்துக்குத் தங்களால் ஏதாவது நலம் செய்யப்படவேண்டுமென்ற அதிதீவிர வாஞ்சை தங்களின் சுகத்தைப்பற்றி அலக்ஷியம் செய்யப்பண்ணி விடுகிறது. அவர்களது மக்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூட நேரமில்லை. குடும்ப க்ஷேமத்திலும் அதிக சிந்தையில்லை. அநேக ஆசிரியர்களின் குடும்பம் அவர்களுக்குப் பின் மிக்க தத்தளிப்பாகிக் கனத்த வறுமையை யனுபவித்திருக்கிறது.

தமக்கையும் தமக்கையும், தம்பியும் அண்ணனும் மிகக ப்ரியமும் உறவும் கொள்ளவேண்டியதுதான். ஆனால், அந்தப் பிரியத்திற்காக கிரம எல்லையை மீறி, ஒருத்தியின் புருஷனை மற்றொருத்தியும், ஒருவனின் மனைவியை மற்றொருவனும் இச்சித்துவிட வேண்டாம் என்கிறார் ஒருவர்.

ஆடி! ஆடி!! ஆடி!!!

II



வாருங்களப்பா! வல்லாள கண்டர்களே! வஞ்சகக் குட்டிகளே! தன் சாக்கிலிருக்கிற பழுது தெரியாமல், ஊரார் சாக்குக்கு ஒட்டை பேசும் கண்ணில்லாக் கபோதிகளே! எவ்வளவு தேடினாலும் தரித்திரத்திலேயே அழுகும் தங்கமணிகளே! உலகத்தைத் தாங்களே தாங்குவதுபோல் நினைத்துப் பெருமைப்பட்டு விம்மும் வீச்சுகளே! பணம் பணமென்று பணமே நினைவுகொண்டு பக்கத்தில் உதவிக்கு வந்தவர்களிடமும் பறிக்கும் நோக்கமாயுள்ள பருப்புகளே! தன்னைக் காணவந்தவர்களை அலக்ஷியம் செய்து தன் கர்வத்தைக் காட்டிக்கொள்ளும் கட்டைகளே! உத்தமர்களென்று ஆசை வைத்ததற்கு உள்ளம் புண்ணானதே பலனாய்ப் பாதபிக்கும் பளிங்கனைய மனத்தினர்களே! பொருமைக் கண்ணர்களே! பிறன்கடை வாழப் பார்க்காதவர்களே! இன்னும் பட்ட கடன் தீர்க்காத சிந்தாமணிகளே! கடவுளையே நம்பிய கருத்துள்ளவர்களே! குணவான்களே! கீர்த்தியும் பெயரும் தாங்குவதற்கே பிறந்த கண்ணிப் கிளிகளே! எவ்வளவு கஷ்டத்திலும் உத்ஸாகமாகவே இருந்து கொள்ளும் குஷால் தாஸர்களே! விகடன் சென்ற தடவை ஆடி ஆடி என்று ஆடிப்பாடி ஆனந்தக் கூத்தாடினேனல்லவா! அதிலுள்ள மிச்சத்தையும் மற்றதையும் இன்றுத் தொட்டுக் கொள்ளுகிறேன் நீங்களும் கிட்டிவந்து மூட்டிக்கொள்ளுங்கள்!

“திகலாடி” என்கிற வார்த்தை உங்களிடையே நடமாடியிருக்கலாமே! சிலருக்கு அது நூதனமாகவும் படலாம்! ஆனாலும், இந்த வார்த்தை உண்டுதான! சாதாரணமாய்க் கிழவர்கள் நடமாடும்போதும், நடக்கும்போது பலவீனத்தினால் திகலாடுகிறதுண்டு. இதைத் “தள்ளாடுகிற”தென்றும் சொல்லலாம். சிலர் தடி பிடித்துக்கொண்டு திகலாடி நடக்கிறதுமுண்டு சிலர் (‘தன்கைக் கோல் அம்மனைக் கோலாகிய தென்று’) என்றபடி தன் கிழமனைவியின் கையில் தடிகொடுத்து அவளும் தானும் திகலாடி நடக்கிறதுண்டு.

ஃ

தாய் கக்கூசுக்குள் இருக்கையில் குமாரத்தியும் உடசெல்லலாமாம். ஆனால், தந்தை கக்கூசுக்குள் இருக்கையில் குமாரன் உள் செல்ல நாணுகிறான்.

இவ்வளவு காலம்வரைக்கும் இவ்விருவரும் வாழ்வது பெரிய பாக்கியம் தான். ஃ

கிழத்தன்மைப் பட்டவர்கள்தான் இப்படித் திகலாடி நடக்கிறது இயல்பாஞல், ஐயையோ! இந்தக்காலத்தில் 16,17-வயதுக்குட்பட்ட சிறுமிகளும், 20-வயதுக்குட்பட்ட பையன்களெல்லாமுமே பலங் குன்றினவர்களாய் அந்தச் சிறு வயதுக்குள்ளாகவே கால் செத்து வலிமை ஓய்ந்து நடையில் திகலாடுகிருர்கள். கல்யாணம் கல்யாணம் என்றும், புருஷன் பெண் ஜாதி என்றும் சிறு வயதிலேயே கல்யாணங்களைக் கட்டிக்கொண்டு பறபறவென இன்பநலங்கண்டுகொண்டு, இரண்டொரு குட்டி குழந்தைகளை பொத்து பொத்தென்று பெற்றுவிடுவதில் உள்ள கொஞ்சநஞ்ச பலனும் செத்து விறகாகி வெகு சீக்கிரத்திலேயே திகலாட்டங் கொள்கிருர்கள்! ஆண்களின் பலத்தைப் பெண்கள் உறிஞ்சிக் கொள்ள, பெண்களின் பலத்தைத் தாய்ப்பால் பருகுகிற வழியில் பிள்ளைகள் உறிஞ்சிக்கொள்ள, இரத்தம் வற்றி வெளுத்த மூஞ்சியாகிப் பேருக்குமட்டும் மனுஷ்யர்களாய் நின்று திகலாடுகிருர்கள்! இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு அற்ப ஜுரமோ காய்ச்சலோ கண்டுவிட்டால் வந்துவிட்டது மோசம்! முழுதுமே தொடுகுத் தொடுக்கென்று விழுந்துபோய் எலும்புக் கூடுகளாய் மாறி, நடக்கவே சக்தியற்றுத் திகலாடுகிருர்கள்!

ஃ

இதில் இன்னொரு வேடிக்கை! மெத்தப் படித்துவிட்டு, தலைநரைத்துவிட்டு, முகமும் கிழட்டு லக்ஷணத்தில் வந்துவிட்டு, விவாகத்திற்கு வழியற்றுவிட்டு, கண்டவர்களைத்தொட்டுவிட்டு, அந்த வழியில் இச்சையைத் தீர்த்துவிட்டு, நாளைக்கும் கல்யாண எண்ணமில்லாமலே, அதற்குக் கதியும் விதியும் காணுமலே, பார்த்த விடத்தில் திருப்தி பட்டுக்கொண்டு நித்திய பிரம்மசாரிகளாக ஒண்டிக் கட்டைகளாய்த் திரிகிறவர்களுமுண்டு! இப்படிப்பட்ட படித்த கட்டைகள் நடைகெட்ட தன்மையால் தங்கள் சக்தி தத்துவம் யாவும் மட்டுப்பட்டுக் கையிலொரு அழகுக் கோலோடும் திகலாட முன் வந்துவிடுகிருர்கள்! இவர்கள் பேசுவது யோகம்! நடப்பதோ போகம்! எந்த நாளிலும் ஒண்டி மனிதக்கட்டையாகவே கிடந்து தங்கள் கணக்கை ஒப்புவித்து முடித்து விடுகிருர்கள்!

ஃ

இவ்வாறெல்லாம் ரத்தஞ்சுண்டி, சக்தி குறைந்து சுருங்கி திகலாடுகிற சங்கதிகளெல்லாம் விசேஷமாய்ப் பட்டணங்களிலே பிறந்து வளர்ந்து வாழுகிறவர்களிடத்திலேதாஞண்டு! நாட்டுப்புறங்களிலே நல்ல காற்று வசதியிஞலும், ஜலத் தன்மையிஞலும், ஆகார விஷயங்களிஞலும், ஆணும்பெண்ணும் உழைத்தே தேகப் பிரயாசையின்மேல் உண்பதிஞலும், அந்தப் பெண்களும் ஆண்களும் சற்றுக்குச்சற்று சத்துவமுடையவர்களாய், மேனியும் வதங்கிக் கரையாதவர்களாய், அவ்வளவாய்த் திகலாட்ட நடை கொள்வதில்லை. அவர்களின் தேகமும் பருமனும் உயரமும் எத்தனைய பாடான வேலையும தாங்கக் கூடிய வலிவு கொண்டிருப்பதில் நோய் நொடிகளும் விசேஷமாய் அவர்களைப் பற்றுவதில்லை. பாம்போ, தேளோ, வேறு எதுவோ எதிர்பட்

மருமகளைக் கொண்டுவந்து வீட்டில் சேர்த்த செலவுக்கு அவள் வீட்டு விளக்காயிருக்க சீக்கிரம் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொடுத்துவிடுகிருள்.

டாலும் அதையும் அடித்துக் கொன்று அதையும் மண்ணோடு மண்ணாய்ச் சேர்த்து வயலில் உழுதுவிடுவார்கள்! பட்டணத்துப் பெண்டுகளோ ஆண்களோ தடியெடுத்து அடிக்கவும் நடுங்கி பக்கத்திலிருப்பவர்களைக் கூப்பிடத்தான் தெரியும்! நாகரீக நகரத்து ஆண்கள் தங்களை எதிர்த்தவனைத் தாங்களே எதிர்த்துத் தீர்க்க சக்தியின்றிப் போலீஸாரைக் கூப்பிடுவார்கள்; அல்லது அடித்ததாகக் கோர்ட்டுக்குப் போவார்கள்! கிராமத்து ஆண்களோ தங்களை எதிர்த்தவனுக்கு உடனுக்குடன் சுடச்சுடக் கொடுக்கும் தென்புள்ளவர்கள்! அவ்விதமே தங்களின் கற்பை எதிர்த்துக் காத்துக்கொள்ளப் பலமும் பெண்களுக்கு உண்டு. ஃ

ஒவ்வொரு கிராமப் பெண்ணும் நாலுமைல் ஐந்துமைல் தொலைவிலிருந்து விற்பனைக்கான நாட்டுப் பொருள்களைக் கூடைபாரந் தெரியாமல் சாதாரணமாய்த் தூக்கிக்கொண்டு வந்து கம்பீரத்தோடும் அதிகாரத்தோடும் விற்றுவிட்டு அதிசீக்கிரத்திலேயே கால்நடையாக வீடுபோய்ச் சேருகிறாள்! பட்டணத்துப் பெண்களுக்கோ அந்த நடை காசி—ராமேஸ்வரத்திற்குப் பிரயாணம் போவது போல் கஷ்டமும் பயமுமாயிருக்கிறது! அவ்வளவுக்கு அவர்களைப் புருஷர்கள் போகவிடுவதும் அரிதாயிருக்கிறது! போனாலும் ஒரு கிழவியோ பையனோ துணைக்கு வேண்டியிருக்கிறது! பட்டண வாசிகளுக்கு நாட்டுப்புறத்து வாசிகளின் வளப்பம் அவ்வளவாய்க் கிடையாததினாலும், பிரஸவ வேதனையில் படுகிற தேகப்பயிற்சியைத் தவிர்த்து வேறெந்த 'சரீர முயற்சியையும் அவர்கள் பட்டு வியர்வை சொரியாததினாலும், என்று நோக்கினும் நோய்வாய்ப்பட்டவர்களாகி, வெகு சீக்கிரத்தில் தேகமும் குன்றி, பெண்களுக்கு ஔவையார் அளந்து குறிப்பிட்ட மூப்பும் புகுந்து கொண்டு, நடைசத்துவமுமற்றுத் திகலாட்டம் கொள்ளுகிறார்கள்! சாதாரணமான நடமாட்டத்தைப் பார்க்கிலும், கொஞ்சதூரம் மிஞ்சி நடப்பதில் சுவாசம் ஜாஸ்திவிட்டு வாங்கும்படி நேருவதில், அதிலும் திகலாட்டம் உண்டாகிறது! புருஷர்களும் இப்படியே பெருமூச்சு வாங்கித் திகலாட்டமாடிப் போகிறார்கள்!

ஃ

இன்னொருவித தமாஷான திகலாடிகளைக் கேட்கிறீர்களா? பெண்கள், சிறுபிள்ளைகள் தேர் திருவிழா, கோயில்விழா பார்க்கப்போகிறபோது மாத்திரம் வெகு குஷாலாகக் கொண்டானடித்து வெகு நடையாய் நடப்பார்கள்! போய்த் திரும்பி வீடுவரும் போதோ உற்சாகம் குறைந்து நடை திகலாடி அங்கங்கும் குந்திக் குந்தி நடப்பார்கள். ஃ

காற்றிலடிபட்ட தோணி முதலியதும் திகலாடுவதுண்டு! இதில் இன்னொரு விசேஷம் கேட்கிறீர்களா? வழிப்பிரயாணத்தில் காட்டுக்குள் குறுக்குவழி பிடித்து நடக்க வேண்டி வந்துவிட்டால், அங்கே 'திகைப்பூண்டு' என்ற ஒரு மூலிகையிருக்கிறதாம்! அதை மிதித்துவிட்டால் அப்படிப்பட்டவர் திக்குதிசை கெட்டு மிகவே திகலாடுகிறார்களாம்! இன்னும் நம்பியிருந்த உத்தியோக பதவிகள் போனவர்களும், பேசி முடித்த பெண் தவறிப்போனவர்களும், தாம் தவறிப்போனவர்களும், துணை—திக்குக் கெட்டுப்போனவர்க

பிறன் மனைவியை விரும்பும் வினை—தன் மனைவியை இழத்தற்கோ, வேறொருவன் இச்சித்தற்கோ வழிசெய்து வைத்துவிடும். இது பழிக்குப்பழி.

ளும், எதிர்பார்த்த பணம் கைக்குக் கிட்டி வாய்க்குக் கிட்டாதுபோனவர்களும், இப்படியே சோர்ந்துநிற்கச் சத்துவமின்றி ஏக்கம் மிஞ்சித் திகலாடுகிறார்கள்!

ஃ

இனி, "நுரையாடி"யைக் கேளுங்கள்! கேட்காமலே கொண்டு போய்விடுகிறதும், கேட்டு கொண்டு போய்விடுகிறதுமான நுரையாடிகள் பலருண்டு! எவரும் காணாத வேளையில் எடுத்துக்கொண்டு போகும்போது எதிர்பட்டுக்கொள்ளுகிறவர்களிடம், 'இது என்னத்துக்கு உதவும்? நான் கொண்டுபோகிறேன்' என்று சமாளிக்கிற நுரையாடிகளும் அநேகர்! நுரையாடியின் பக்குவமான தந்திரமென்னவென்றால், தான் நுரையாடுவதாகக் காண்பித்துக் கொள்ளாமலே நுரையாடுவது தான்!

ஃ

"உளவாடி"கள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறார்கள். இவர்கள் ஏமாந்த தாசிரிகள்போல் இருந்துகொண்டு சமயம் வந்ததும் புலிகளாய் விடுவார்கள். ஒருவனைக் கெடுக்க என்னென்ன வழிகளோ அவ்வளவும் தெரிந்து வைத்திருப்பார்கள். அவனோடும் ஒக்கக் குலாவுவார்கள். கடைசியில் தாங்களும் வாழாமல், பிறரையும் வாழவைக்காமல் கெட்டுக் குட்டிச்சுவராவார்கள். இந்தச் சங்கதி விகடனுடைய குஞ்சுகுட்டிகளுக்கு நன்கு தெரிந்ததேயானதால் இவ்வளவுடன் முடிவு கட்டிவிடுகிறேன்.

ஃ

"முறையாடி"களில் இருவிதமுண்டு. என்னென்னவோ உறவுவகைகள் பாராட்டிக்கொண்டு, பணக்கணக்கில் மட்டும் பக்குவமாயிருப்பார்கள். எதிலும் பட்டுக்கொள்ளாமலும் பகட்டுவார்கள். இன்னும் சிலர் பலவித உறவுவைத்துக்கொண்டு அந்த வழியில் கற்பை உறிஞ்சிவிட்டு அப்பாலும் நல்லவர்களாய்க் காட்டுவார்கள். இது ஒரு தினுசு. இன்னொரு முறையாடிகளின் சங்கதிதான் மெத்த விசித்திரம். இவர்கள் தங்களின் முறைகளையும் கஷ்டங்களையும் மற்றவர்களிடத்தில் முறையிட்டுக் கொள்ளுகிறவர்களாவார். இவர்களைப் பற்றி விகடன் கொஞ்சம் விவரமாகச் சொல்லவேண்டியிருக்கிறதய்யனே!

ஃ

ஒருவனை ஒருசமயம் ஒரு விஷயத்தில்—கொஞ்சநஞ்சமல்ல—முழுதுக்குமே விரோதித்துக்கொள்ளுகிறார்கள்! அப்போது தங்களுக்குப் பக்கபலமாகச் சிலரைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள்! அவர்களும் இதுதானப்பா நல்ல சமயமென்று உட்கார்ந்து கொழுக்கத் தின்னுகிறார்கள்! அந்தச் செலவுகளில் வெகு துட்டுகள் கரைகின்றன. விரோதத்திற்காளான மூஞ்சியோ ஒண்டி மனிதனாய், நொண்டியாகி நொந்துபோய்விட, மற்றவர்களெல்லாரும் வெகு நெருங்கிய கூட்டமாய்விடுகிறார்கள்! இப்படியும் சிலகாலம் செல்லுகிறதப்பா! பிறகு இந்த நெருங்கிய ஒக்கச் சேர்ந்த ஒருமித்த வகைக்குள்ளாக கடாபுடா ஆகி ஒருவருக்கொருவர் சண்டைபிடிக்க நேரிடுகிறது! இவ்விதம் சச்சரவிட்டுக்கொள்ளுகிற இவ்விருதரப்பாரும், முன்பு தாங்கள் விரோதித்துக் கொண்டவனிடம் போய்த் தங்கள் கலகத்தை விவரித்துத் தங்கள் பக்கமாய்ப் பேசும்படி முறையிடுகிறார்கள்!

ஃ

முன்பு விரோதத்திற்காளான மூஞ்சியோ, தான் நிரபராதியாயிருந்தும், தன் மனத்தை வேகவைத்துப் புண்படச்செய்த பலனை இப்போது அவர்கள் அனுபவிக்கிறார்களென்றும்,

இப்பொழுது கலகமிட்டுக்கொள்ளுகிற இவ் விருகாப்பாரும் வெகு துரிதத்தில் ஒன்றாய்விடக்கூடுமாதலால், எவர்பக்கமும் தான் சேராமல் பொதுவில் இருக்கவேண்டுமென்றும் எண்ணிக்கொண்டு இந்த மனோபாவத்துடன் இவ்விரு முறையாடிகளின் கூச்சல்களையும் செவிகொடுத்துக் கேட்கிறான்! கேட்கையில் இவ்விருவர்மீதும் குற்றம் இருப்பதை அவன் காண்கிறான்! சொன்னாலோ ஜென்மவிரோதம் வருமென்று மௌனமாகிறான்! அவன் யாருக்கு எந்த முறையாடிக்கு வாயைத் திறப்பது? இருபக்கமும் தலை யாட்டிவிட்டு, இந்தக் கலகம் இன்னும் வளர்ந்து கொடுமைப்படட்டுமென்று தனக்குள்ளே வாழ்த்தத் தொடங்கிவிடுகிறான்! ஒருவனை முதலில் விரோதித்துக்கொண்டு, பிறகு அவனிடமே தங்களின் கலகங்களைச் சொல்லி முறையாடுவது என்ன யோசனையற்ற புத்தியோ? வேளை அப்படி வந்து நேருகிறதாக்கும்!

ஃ

தினர்க்கு நன்மையே செய்துவந்திருக்கிற கோபாலனை முனியன் அடியோடும் பகைத்துத் தூற்றுகிறான். இந்த முனியனிடம் கருப்பன் வெகு நாளாக அநேகவித உபசாரங்கள் பெற்று வருகிறான். சிலகாலத்திற்குப் பிறகு கருப்பன் தனக்கு அதிகமாக முனியன் உதவி செய்யாததற்காகப் பகைத்து, தன் வீட்டுவாசல் ஏறவேண்டாமென்று திட்டி அதுமுதல் முனியனை ஜென்மப்பகையாக எண்ணுகிறான். கருப்பனுக்கு எவ்வளவோ உதவிகள் செய்தேனே; ஒரு தீங்கும் செய்யவில்லையே; என்னை வீணாகப் பகைத்துத் தூற்றுகிறானே என்று முனியன் அங்கலாய்ப்புடனே கோபாலனிடம் போய் முறையாடுகிறான்; தன் எரிச்சல்களைக் கொட்டுகிறான். இதைக் கேட்கும் கோபாலன் தான் ஒரு கெடுதியும் செய்யாமல் நன்மையே செய்துவந்தும், முன்பு முனியன் தன்னை வீணாகத் தூற்றி விரோதித்ததை மனதிற்குள் நினைத்துக்கொண்டு, அந்தப் பாவத்தையே முனியன் இப்பொழுது கருப்பனிடம் அனுபவிக்கிறான் என்று தன்னுள் எண்ணிச் சிரிக்கிறான். முன்பு பகைத்தவனிடமே மறுபடியும் நேசமாய்ச் சென்று முறையாடித் தன் எரிச்சல்களைச் சொல்லத் தலைவிதி வந்து வாய்க்கிறதும் விசித்திரமே!

ஃ

இன்னும் தங்களின் அபிவிருத்தியில் எரிச்சலும் பொறாமையும் கெடுநினைவும் உள்ள பெருச்சாளிகளிடமே சிலர் சென்று தங்கள் சங்கதிகளை முறையாடுகிறார்கள்! வீட்டுக்கு வந்தவர்களைத் தக்கபடி உபசரித்துவிட்டு, அவர்கள் கதவுக்குப் பக்கத்திலிருப்பதை யறியாமலே, உள்ளிருப்பவர்களிடம் அவர்களால் வெகு செலவாய்விட்டது, பிறகு அரிசி எல்லாம் ஆய்விட்டது என்று முறையாடுகிறார்கள்! இதைக் கதவுக்குப் பக்கத்தில் இருப்பவர்கள் கேட்டுவிடுவதில், அவ்வளவு செலவிட்டு உபசரித்த சங்கதிகளும் பிரயோஜன மற்றுப்போகிறது! இவ்விதமாக முறையாடிகளின் சங்கதி வெகு வேடிக்கைதான்! உலகத்தின் கோணல் கூத்துகளே ஒரு வேடிக்கைதானேயப்பா! விகடன் இதுவரை தொனப்பிய 'ஆடி'கள் போதுமென்று இவ்வளவுடன் முடித்து என் திருவாயை மூடிக்கொள்கிறேன். இன்னுமுள்ள ஆடிகளின் அநுபவக் குறிப்புகளை உங்களுக்குள்ளாகவே எழுப்பிக்கொண்டு ஒருமுழ நீளத்திற்குச் சிரித்துக்கொள்ளுங்கள். ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!!



நேர்த்தியான எருமைப் பால் காபி, முக்கால் பாகம் பால், ஒரு அவுன்ஸ் காபிசாம், ஒரு கரண்டி சக்கரை சேர்த்துப் புட்டியில் கை படாமல் அடைத்தது. உங்களிடம் வந்து சேரும்வரை கெட்டுப்போகாது. சேர்ந்த பிறகோ, திறக்கும்பொழுதோ கெட்டிருந்தால் அதற்கு நாம் உத்திரவாதியல்ல. ஒரு புட்டி காபி அணு 2. வி. பி. செலவு அணு 4. உடனே எழுதுக.

அணுச்சார அழுக்குவேஷ்டி ஐயர்,
எச்சில் விலாஸ ஹோட்டல்,
கசுமாலக் குப்பை போஸ்ட்.

ஃ

வீண் தொனப்பாடிகள் சங்கத்துக்குச் சில புதிய அங்கத்தினர்கள் தேவை. வேண்டுவோர் வரைக.

வேலமெனக்கிட்ட வேலு செட்டி,
முட்டிக்கொண்ட மூளிப்பட்டி,
இடித்துக்கொண்டபாளையம் வழி.

ஃ

ஐரோப்பியர்கள் ஒரு இங்கிலீஷ் அகராதி ஒரு சுதேச புஸ்தகசாலையில் 5-ரூபாய்க்கு விற்றாலும் அங்கு வாங்காமல் 8-ரூபாய் கொடுத்தாவது ஐரோப்பிய புஸ்தகசாலையிலேயே வாங்குவார்களாம். அவ்விதமான ஒற்றுமை நம்மவர்க்குண்டா வென்று விகடனை ஒருவர் கேட்க, அதற்கு விகடன், ஆஹா! உண்டு; பிராமணரல்லாதார் கடையில் காலணாவுக்கு இட்டிலி விற்றாலும் பிராமணர் அங்கு வாங்காமல், அதே இட்டிலிக்கு அரையணா தந்து பிராமண ஹோட்டலில் தான் வாங்குவார்கள் என்று சொன்னானாம்!

ஃ

பிரஸித்திபெற்ற மருந்துகள் என்பதற்கு "அதிர்ஷ்டசாலியின் மருந்துகள்" என்று அருத்தமே தவிர, குணமுள்ள உயர்ந்த மருந்துகள் என அதற்குப் பொருளல்ல என்று விகட அகராதி கூறுகிறதாம்!

ஃ

கணவன் யோக்கியமாய் வீட்டுக் கடங்கி நடக்கும் வரையில் துஷ்டையான மனைவி இருந்தமாட்டாளாம்!

ஃ

அந்தரங்கத்திலுள்ள அவதி அம்பலத்துக்கு வாதவரையில் அதது வெளிக்கு வெகு மணம்தானும்!

ஃ

இரங்கூனில் கணக்குக்கு அகப்படாத வேசிகள் உண்டாம்!

ஃ

பட்டுக் கழகு—பல வருஷ அழுக்கு
பிச்சைக் கழகு—பக்திப் பாட்டு
பேச்சுக் கழகு—சாந்தம்
பொன்னுக் கழகு—பளபளப்பு
மாலைக் கழகு—கழுத்தி லணிதல்
மிளகாய்க் கழகு—காரம்
முந்தாணிக் கழகு—பட்டுச் சரிகை
மூக்குக் கழகு—வைர மூக்குத்தி
மெத்தைக் கழகு—மல்லிகை மணம்
வண்டிக் கழகு—நொண்டி எருது
இரவலுக் கழகு—விழுங்கி விடுதல்!

ஃ

என்ன பூஜை—சாமி பூஜை
என்ன சாமி—வீரன் சாமி
என்ன வீரன்—மதுரை வீரன்
என்ன மதுரை—வட மதுரை
என்ன வடம்—தேர் வடம்
என்ன தேர்—சிங்காரத் தேர்
என்ன சிங்காரம்—பேச்சு சிங்காரம்
என்ன பேச்சு—பத்திரிகைப் பேச்சு
என்ன பத்திரிகை—போதினிப் பத்திரிகை
என்ன போதினி—குண போதினி
என்ன குணபோதினி—
அமிர்த குணபோதினி.

பத்திரிகை ஆராய்ச்சி

வைஷ்ணவ பரிபாஷை.

[துகளன் எழுதியது.]

வைஷ்ணவ பரிபாஷையாக வழங்கப்படும் சொற்றொடர்கள் பல இனிய தமிழ்ச்சொற்களாலே அமைந்துள்ளன. ஒரு பெரியவர் வந்தால் அவர்களை வரவேற்பவன் 'எழுந்தருள்க' என்று வேண்டுகின்றான். 'தாளும் தடக்கையும்கூப்பி' வணங்கி நிற்கின்றான். "அமுது செய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்கின்றான். அவருடைய வீட்டைத் 'திருமாளிகை' என்றும், தன்னுடைய வீட்டைச் 'சிறு குடில்' என்றும் பேசுகின்றான். அவரைக் குறிக்கும்போது "தேவர்" என்கின்றான். தன்னைக் குறிக்கும்போது "அடியேன்" என்கின்றான். இவ்வாறாக இவன் கூறுவனவெல்லாம் பரமனடியார்களைக் கௌரவிக்கும் இவனுடைய மனோநிலையைக் குறிப்பன. இவ்வாறு வழங்கப்படும் சொற்கள் பலவும் திவ்வியப் பிரபந்தங்களிலே காணப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

1. "அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்றுய்ந்தது" என்னும் சொற்றொடர் திருப்பல்லாண்டிலே காணப்படுகின்றது.

2. "ஆடி அமுதுசெய்; அப்பனும் உண்டிலன்; உன்னோடு உடன் உண்பான்" என்பது பெரியாழ்வார் திருமொழியி லுள்ளது. (3,3,3)

3. "கண்ணன் காலிக்குப் பின்னே எழுந்தருளக்கண்டு" என்பதும் பெரியாழ்வார் திருமொழியிலுள்ளது. (3,4,10)

[இவ்விதம் 14-குறிப்புகள் மிக்க ஸ்வாரஸ்யமாய்க் கொடுத்துள்ளார்.—ப-ர். அ. கு. போதினி.]

இவ்வாறெல்லாம் திவ்வியப் பிரபந்தங்களிலே காணப்படும் சொற்றொடர்கள் பலவும் அவ்வக்காலங்களிலே வழங்கிய இன் தமிழ்ச்சொற்கள் என்பதுவும், அவற்றை ஆழ்வாராதிகள் வழங்கிய பெருமை கொண்டே ஸ்ரீவைஷ்ணவர்கள் இன்னும் அவ்வாறான சொற்களை வழங்குகின்றனர். என்பதுவும் குறிப்பிடத் தக்கன. (சு-மீ.)

அனுபவக் கைத்தொழில் முறை.

சோடாப் பொடி

(A) ஒரு அவுன்ஸ் சிட்ரிக் ஆஸிட்டை 16-பங்காகப் பங்கிட்டு 16-பொட்டலங்கள் செய்து கொள்ளவும்.

(B) இரண்டு அவுன்ஸ் பைகார்பநேட்-ஆப் சோடாவை 16-பங்காகப் பங்கிட்டு 16-பொட்டலங்கள் செய்து கொள்ளவும்.

சோடா தேவைப்படும் 1-மணி நேரத்துக்குக் குறையாத நேரத்திற்கு முன் சுத்தப்படுத்திய சிறிய சோடா

படிக்காதவர்கள் ஒரு கூட்டம் போட்டால் அங்குப் பேச்சு அதிகம். படித்தவர்கள் கூடினும் பேச்சு அதிகமே. ஆனால், ஒரு புத்திமானும் ஒரு மூடனும் கூடினலோ சீக்கிரம் அவர்களின் பேச்சு சட்புட் என்று முடிந்துவிடுகின்றது.

சீசா (போத்தல்) வில் சுத்த ஜலம் கழுத்தளவில் நிறப்பி, முதலாவது (A) பொடியைப்போட்டு இரண்டாவ தாக (B) பொடியைப் போடவும். இரண்டாவது பொடி போட்டதும் பொங்கிவரும். பொங்கி வருவதில் சீசாவிலிருக்கும் தண்ணீர் வெளியாகி விடாதபடி சீக்கிரம் சீசாவின் வாய்ப் புறத்தைக் கையால் மூடிக் குப்புறக் கவிழ்த்து மூடியபடியே 3-4-முறை குலுக்கினால் சீசாவினுள்ளிருக்கும் குண்டு இயந்திரச் சோடா சீசாக் களில் மேலேறி யடைத்துக்கொள் வதுபோல் விசையாய் அடைத்துக் கொள்ளும். அப்படி அடைத்துக் கொண்ட சோடா சீசாவைத் தண்ணீர் நிறைந்த தொட்டியில் போட்டு வைத்து ஒருமணி நேரத்திற்குப் பின் எடுத்து இயந்திரத்தாற் செய்து விற் கப்படும் சோடாவைக் குடிப்பது போலவே குடிக்கலாம். இயந்திரச் சோடாவால் கிடைக்கும் அனுகூலங்க ளனைத்தும் ருசியும் இதில் குறை யாது. இந்தப் பொடியைக்கொண்டு நூற்றுக்கணக்கில் பொட்டலங்கள் தயாரித்து லேபில் ஒட்டி விற்கலாம். விலையடக்கமும் மிகக் குறைவே யாகும். சொந்த உபயோகத்துக்கும் அவரவர்கள் குடும்பத் தேவைபோல் செய்து வைத்துக்கொள்ளலாம்.

"இந்திய மித்திரன்"

[தற்காலம் கடைகளில் விற்கப் படும் சோடாபானத்தில் பிரதான மான சோடா உப்பு சேர்க்கப்படா மலே பெரும்பாலும் தயார் செய்யப் படுகின்றன. சோடா பானத்தில் கலந்துள்ள காற்றிலேயே ஒருவித உப்புச் சத்து இருப்பதால் சோடா உப்பு சேர்க்காமலே சோடா என்று விற்றுவருகின்றனர். இது பெரிய ஏமாற்றம். ஆதலின், மேற்கண்ட முறைப்படி செய்து கொள்வது நலம்.—ப-ர். அ. கு. போதினி.]

கெஞ்சிக் கேட்கும் விஷயம்.

சாதாரணமாய் நடத்திக்கொடுத்துவிடக்கூடிய ஒரு விஷயத்தை ஒருவர் மிகவும் கெஞ்சிக்கேட்டுச் செய்து கொடுக்கும்படி வேண்டிக்கொள்கிறார். அப்படி அவர் கெஞ்சும்போதுதான் அந்தச் சிறு விஷயத்திற்குத் தடைகள் உண்டாகி அதைச் செய்ய முடிகிறதில்லை அதனால் அச்சிறு சங்கதியை ஒரு பெரிய விஷயம்போற் கருதி மறுபடியும் கெஞ்சிக்கேட்கிறார். மறுபடியும் தடை ஏற்பட, அவர் இன்னொருதரமும் கெஞ்சுகிறார். விஷயம் அல்பம். அதி சுலபம். நமக்கும் செய்துகொடுக்கவே மனம். எப்படியோ நாளாகிவிடுகிறது. தடைகளும் பல குறுக்கிட்டன. அவர் கெஞ்சிக் கேட்காது அலக்ஷியமாய் இருந்திருந்தால் நாமும் அதை உடனே நடத்திக் கொடுத்திருப்போமென்றும், எவ் வித தடைகளும் இடையேவந்திராதென்றும் தோன்றுகிறது.



ஹாஸ்ய சஞ்சீவினி



ஜான் :—அடே வில்ஸன், என் சகோதரியை நீ முத்தமிட்டாயல்லவா? இரு, என் தகப்பனாரிடம் சொல்லுகிறேன்.

வில்ஸன் :—ஓ; இல்லவே யில்லை. அவள் கன்னத்தில் தூசி பட்டிருந்ததை ஊதி விலக்கினேன். அதைத் தள்ளு. இந்த நாலணாவை வைத்துக்கொள். எங்கும் சொல்லாதே.

ஜான் :—அவ்வளவு சேவலமா? ஒரு ரூபாய்க்குக் குறைந்து ஒப்பமுடியாது.

தாய் :—நான் துணி யெடுக்க அறைக்குள் வந்தேன். நீ எவனோடோ சாய்ந்துகொண்டிருப்பதைக் கண்டு நடுங்கி வந்துவிட்டேன். இதென்ன அக்கிரமமடி ?

குமாரத்தி :—சரிதான், வெந்நீர் வைக்கப் போ அம்மா! உங்கள் மருமகன் ஊரிலிருந்து இப்போதுதான் வந்தார். நான் அந்தச் சமயம் உள்ளே இருந்தேன் நீங்கள் வந்து பார்த்தது அவரைத்தான்.

அவன் :—நான் கற்கண்டைப் பார்க்கிலும் இன்பம்.

அவள் :—நான் தேனைப் பார்க்கிலும் அதிக ருசி.

வேறு மனிதன்:—வீண் வார்த்தைகளா லென்ன பயன்? கற்கண்டும் தேனும் கலந்தா லன்றோ காணக்கூடாத பரமானந்த முண்டாகும்.

தாசி :—நீங்கள் மூன்றுபேர் வந்திருப்பது 100-பேர் வந்ததற்குச் சமம்.

குப்பனும் சுப்பனும் :—நாங்கள் மூவர் எப்படி நூறு பேருக்குச் சமமாவோம்?

தாசி :—நீங்கள் இருவரும் வெட்டி வார்த்தைகளைப் பேசுகிறீர்கள். உங்களுடன் வந்தவரோ மௌனமாய் காரியத்தில் கவனமா யிருக்கிறார். அவர் நூற்றில் (100) முதலிலே நிற்கும் ஒன்று போல்வார். நீங்கள் இருவரும் அந்த ஒன்றை யடுத்திருக்கும் இரண்டு ஸைபர்கள் (00) ஆவீர்கள்.

கந்தன் :—என் மனைவி என்னை யல்லாமல் வேறு சாமர்த்தியவான் உலகில் இல்லை யென்று நினைத்திருக்கிறாள்.

காமாக்ஷி :—இல்லை; இல்லை. அவள் ஒருபோதும் அவ்வாறு உன்னை உயர்வாக நினைத்திருக்கவில்லை. ஆனால், அவள் அவ்வாறு நினைத்திருக்கிறதாக நீ நம்பும்படி அத்தனை சாதுர்யமாய்ப் பசப்புகிறாள். ஸ்திரீகளிடத்தில் புருஷர் வெகு எளிதாய் ஏமாந்துவிடுகிறார்கள். பாவம்!

சோமு :—உன் பழைய நண்பரென்று அவரைப் பார்க்கப் போனாயே? அவர் இப்போது எப்படி யிருக்கிறார்?

கோபு :—அவர் எதிலும் பட்டுக்கொள்ளாத பச்சடியா யிருக்கிறார். ஆனால், வெகு பிரியமாக மட்டும் பேசுகிறார். என் காரியத்தைப் பேச ஆரம்பித்தால் உடனே அவர் வேறுபேச்சை எடுத்துக்கொண்டு அவ்வழியில் தந்திரமாய் என்னைத் திருப்பிவிடுகிறார்.

ஹரி சிங்கு :—உன் மூஞ்சியில் மயிர் நிறைந்திருப்பதால் காடி மூஞ்சி போலிருக்கிறது. என்னைப் போல வழவழவென்று கன்னத்தை வைத்துக்கொள்கிறதுதானே.

சிவ சிங்கு :—உன் மூஞ்சியைப் போலவே மொழுக்கட்டையாக எனக்குச் சிலு காலத்திற்கு முன்னிருந்தது. அது எனக்கு விகாரமா யிருந்ததால் தாடி மீசைகளை வைத்துக் கொண்டேன்.

மனைவி :—நாதா! சாப்பாடு மட்டும் போட்டால் போதுமா? புது நகை ஏதாவது எனக்கு வேண்டாமா?

கணவன் :—இதோ உன்னிடம் பால் குடித்துக்கொண்டிருக்கிற கைக்குழந்தை உனக்குப் புது நகையல்லவா? அது நானே செய்து போட்டதல்லவா ?

கருப்பாயி :—என்னை வீணாக நிர்ப்பந்திக்காதே. உன்னை விவாகம் செய்துகொள்ள முடியாது. நீ ஒரு தரித்திரக் கட்டை.

சிவப்பு ராஜா :—இந்தக் கருப்பு மூஞ்சிக்குச் சிவப்பு ராஜா வருவதற்குப் பாக்கிய மில்லையாக்கும். நான் புசித்துவிட்டு எறிந்த எச்சிலைதானே நீ.

கருப்பாயி :—புசித்துவிட்டு எறிந்த எச்சிலையா நான்? உன் நாக்கை இரண்டு துண்டாக்கிவிடுவேன். பத்திரம். நிதானித்துப் பேசு.

சிவப்பு ராஜா :—தவறிச் சொல்லிவிட்டேன். மன்னித்துக் கொண்டு—'ருசித்துவிட்டு எறிந்த எச்சிலை' என்று திருத்திவிடு, எச்சில் இலையைத்தேடிக்கொண்டுவெமாறிக்கெட்ட மூதேவி நாய்தான் ஓடி வரவேணும்.

உனக்கு ஊர் கிராம முண்டோ? என, எனக்குக் கிராமம்—சாளிக் கிராமம், ஊர்—களூர், இடம்—இருப்பிடம், வேலி—திருநெல்வேலி, காணி—மாகாணி, நிலம்—நன்னிலம், கடை—சாக்கடை, பாய்—பீப்பாய், காடு—சுடுகாடு, திரம்—தரித்திரம், சேரி—தலைச்சேரி, விருத்தி—மலவிருத்தி என்று பதில் கூறினான்.

நண்பர் :—என்னைப் பற்றிப் பத்திரிகையில் அப்படி எழுதலாமா?

பத்திராசிரியர் :—நீங்களும் அதில் சேர்ந்த புள்ளியா? அடடா! இதுவரையில் எனக்கு அப்படித் தெரியாதே. உங்களை எவ்வளவோ மேன்மையாக வல்லவோ இதுவரை எண்ணினேன்.

சிறுமி :—எனக்கு இந்த வெள்ளைப் பாவாடையும் வெள்ளைத் தாவணியும் வெகு பிரியமாக இருக்கிறது.

பால்ய விதவை :—நீ இன்று வெள்ளை தரிக்கலாம், நாளை பச்சைப் பாவாடை போடலாம். அதைத் தடுப்பவரில்லை. நான் அப்படி மாற்றிக் கொள்ள முடியாதே. என்றைக்கும் வெள்ளைநிறமே கதியாய்ப்போச்சுதே.


அவன் :—மீசை யில்லாமல் முத்தம் கொடுப்பது உப்பில்லாமல் சாப்பிட்ட பதார்த்தத்தை யொக்கும். முத்தம் கொடுப்பதின் ருசி மீசையால் தான் பதின்மடங்கு அதிகரிக்கிறது.

அவள் :—அது என்னவோ எனக்குத் தெரியாது.

அவன் :—ஆனால், நீ உப்பில்லாத பதார்த்தம் உண்டதில்லையா?

அவள் :—எனக்கு அது சங்கதி தெரியவே தெரியாது.

அவன் :—அப்படியானால் உப்புடன் சமைத்த பதார்த்தத்தின் சுவையை உனக்கு இப்போதே அன்புடன் காண்பிக்கின்றேன் பார் கண்மணி!



I

அன்புள்ள ஐயா,

சரியான மொழிபெயர்ப்பு என்பது சற்று சிரம சாத்தியமான காரியமாகவே இருக்கிறது. அதுவும் பாஷாந்தரக் கவிகளுடையவும், கிரந்த கர்த்தாக்களுடையவும் அருமையான வாக்கியங்களைத் தமிழ்ப்படுத்தும்போது சற்றேறக்குறைய சமமான அழகும், காம்பீர்யமும் பொருந்த அவ்வாசிரியர்களுடைய உள்ளக் கிடக்கையை உள்ளபடி அனுபவித்து அமைக்க வேண்டியதா யிருக்கிறது. பலமுறையும் ஊன்றிப் படித்த பின்னரே அக் கவிகளின் உண்மையான கருத்து மெல்ல மெல்லப் புலப்படுவதாய் இருக்கிறது. சாமான்யமான கருத்துக்களை வெளியிட சாதாரண பேசும் தமிழ் நடையே போதும். ஆனல், உயர்ந்த கவிகளின்வாக்குகளைச் சிறிதும் மூலத்தில் உள்ள அழகும், காம்பீர்யமும் கெடாமல் வேறு பாஷையில் மொழி பெயர்த்து எழுதும்போது வெகுவாய் ஆராய்ந்து ஏற்ற சொற்களை அமைக்க வேண்டி நேரிடுகிறது. பேசும் தமிழில் பேசுவது புதிதாய் வெட்டியெடுத்துக் கடைசல் பிடிக்காத வைரம். ஆராய்ந்து அமைக்கும் சொற்களாலான நடையோ கடைசல் பிடித்துச் செப்பனிட்ட ஒளியுடன் கூடிய வைரம். கவியின் உட்கருத்தைச் செவ்வனே புலப்படுத்துவதாய் மூலத்திற்குச் சமமான நடையில் அமைந்திருப்பதுதான் மிக்க விசேஷம். பேசும் தமிழில் உயர்ந்த கவிகளின் கருத்துகளை அவ்வளவு ரஸமாய்ப் பேசமுடியாதென சொந்த அபிப்பிராயம்.

டி. ஆர். ஸ்ரீனிவாஸன், B.A.

[ஆரம்பத்திலேயே மொழி பெயர்ப்பின் நடையைக் கடினமாக்கி விடாமல் பேசுந்தமிழிலேயே அமைக்க முயன்று, கருத்துகளை விளக்க இயலாத இடத்தில் மட்டும் உயரிய பதங்களைச் சொற்பமாய்ச் சேர்த்துக் கொள்ளுதல் நலமாகும். அவ்விதமின்றித் துவக்கமே கடின நடையாகில் சாமான்யர்களுக்கு விளங்குவது கஷ்டம். எவ்வளவுக்குச் சுலப நடையிலுள்ளதோ அவ்வளவுக்கு அது அதிகமாகப் பரவிப் பயன்தரும். ப-ர்.]

II

ஐயா,

புஸ்தகங்களை யெல்லாம் ஒழுங்காக எடுத்து வைக்கிறதுதானே?—அதை நானு எடுத்து வைப்பது?—நான் உன் வேலைக்காரனு?—என்று என் குமாரனைக் கோபித்தேன். அதற்கு அருகிலிருந்த அவன் தாய் "நீங்கள் அவன் வேலைக்காரர்தான்" என்று அழுத்தமாகப் பேசினள். அது சரியா? மகாதேவ முதலியார்.

[பேசியது சரி. பிதா, கடவுளால் நியமிக்கப்பட்ட அன்பே உருவான வேலைக்காரனுவர். மக்களின் தரிசனமே அதற்குச் சம்பளம். ப-ர்.]

III

ஐயா, எனக்குத் தேக சுகமின்றி அதற்காகப் பிரதி இரவிலும் பால்

வைத்திய கேட்லாக்குகளை வெகு நன்றாகவும், சாமர்த்தியமாகவும் அச்சிட்டு வெளியாக்கிவிடுகிருர்கள். அந்த மயக்கு வார்த்தைகளை ரோயாளிகள் வேதமொழிகளாக நம்பி, பின் எவ்வித குணமும் காணுது ஏமாறுகிருர்கள்.

உண்டுவந்தேன். அந்தக் கடன் இரண்டு ரூபாயாக உயரவே, என் சக்திக்கு அது கூடாமல் பாலை நிறுத்தி விட்டேன். எனது உண்மையான கேவல நிலையிது. இந்த ஸ்திதியில் பாலை நிறுத்திவிட்ட மறுநாள் உறவினர் இருவர் என் இல்லத்திற்கு வந்தனர். இரண்டு மாதங்களாகியும் இன்னும் அவர்கள் அசைவதைக்காணேம்! இதை என் மனைவியிடம் தெரிவிப்பின் எவரையும் வேண்டாம், வேண்டாம் என்கிறீர்களே என்று ஆரம்பிப்பாள். "வேண்டாமென்று எவரையும் நான் ஒதுக்கவில்லை; எல்லோரும் வரவேண்டியதுதான். ஆனால், நீண்டநாள் தங்குவதானல் சம்சாரப் பளுவு அதிகரிக்கிறதல்லவா" என்று சொல்லப்போனல், இவ்வளவு சோறு தானே போடுகிறேம் என்றுதொடங்கிக்கொள்வாள். "எல்லாம் சோற்றுக்காகத்தானே இவ்வளவு பாடும்" என்று நான் கூறினல், அதற்கு அவள் "சரி போகச் சொல்லி விட்டால் போகிறர்கள்" என்று இன்னெரு பாதையில் திரும்பி விடுவாள்.' இன்னும் அவள் அவர்கள் பக்கமாகச் சேர்ந்து கொண்டு, "நீங்கள் இன்னும் போகாததற்கு என்ன சும்மா பிடுங்குகிறு ரம்மா!" என்று அவர்களிடம் முணுமுணுத்துத் தான் நல்லவளாகிக்கொண்டு என்னை அவர்களுக்கு விரோதியாக்குவாள். அதில் இத்தனை நாள் நான் செய்த செலவுகள் வீணுவதன்றி என்மீது அவர்களுக்குச் சலிப்பும் உண்டாகும். வந்தவர்கள் மரியாதை தெரிந்து தாங்களே புறப்பட்டுச் சென்றால் நலமாயிருக்கும். இவ்வளவுக்கும் அவர்கள் ஏழைகளல்ல. என்னைவிட நல்ல நிலைமையில் உள்ளவர்களே. அவர்கள் என் மனைவிக்கு வெகு துணையும் உதவியுமாயிருப்பதாகக் காண்பித்துக்கொண்டு, வீட்டின் சில்லரை வேலைகளைத் தாங்களே வலியச் செய்து, "உழைத்துத் தானே உண்ணுகிறேம்" என்கிற தன்மையில் தங்களைப் புலப்படுத்திக் கொள்கின்றனர். இதற்கு வழிஎன்ன?

A. K. R.

[வாய்திறந்தால் ஜன்மவிரோதம் வரும். இதில் மனைவியும் அவர்கள் பக்கம் இருப்பது பெரிய ஸஞ்சலம் தான். படித்தவர்களாயிருந்தால்மட்டும் விநயமாகக் கஷ்டங்களை எழுதிக் காட்டலாம். மனுஷ்யர்களின் உதவி ஒவ்வோர் சமயங்களில் எவ்வளவோ தேவைப்படுவதால் சற்று நிதானிக்கத்தான் வேண்டியிருக்கிறது. சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி வழியும் யோசனையும் தானே கிடைக்கும். அதிலும் ஒரு நிதானிப்பு தேவை. ப-ர்.]

ஒவ்வொருவருடைய வஞ்சகத்தையும் பொல்லாங்குகளையும் நெடுங்காலம் மனதில் வைத்துக்கொண்டு, அதற்குத் தகுந்த பலனை, நாசத்தை அவர்கள் அனுபவிக்கிறர்களா வென்று எதிர்பார்த்துக் காத்திருந்து, அவ்விதமே அவர்கள் சோதனைக்குழியில் வீழ்ந்து நாசமாவதை நேருக்கு நேராகவே கண்டு, கடவுள் பழிக்குப் பழி வாங்கினர் என்று சாந்தி பெறுகிற—எதிர்க்காத சகிப்பின் தன்மையைச் சில—ர் கொண்டுள்ளார்.

ஆணும் பெண்ணும்.

II

சில அதமர்களின் செய்கையை என்னென்பது? இவர்கள் தன்னுடைய மனைவி காலால் இடும் வேலையைத் தலையால் செய்து, அவளை எஜமாட்டியாக்கி, "கண்ணுட்டி! நீ சும்மா இரு; வேலை செய்ய வேண்டாம். அந்தக் கிழட்டு நாய்கள் வேலை செய்யட்டும்"— என்று சொல்லி, பெற்றோர்களை வேலை வாங்கி அவர்கள் சமைக்கத் தானும் தன் மனைவியுமாக உண்பதும் உண்டு. இவர்களின் வாழ்வு இவர்களது மக்கள் நாளில் விருத்தியின்றி மண்ணாவதும் அநுபவம்.

ஃ

இனி விவாகம் ஆகிக் கணவன் வீடுசெல்லும் பெண்ணின் கதையைப் பார்த்தாலோ அது பெரிய வேடிக்கை. கணவன் வீடு சென்றதும், தாய் வீட்டையும், பெற்றோரின் எளிய நிலைமையையும் மறந்துவிடுகிறார்கள். அதுமுதற்கொண்டு தனக்குத் தக்க சீர் மரியாதைகள் செய்யவில்லை என்றும், கொடுத்தே தீரவேண்டுமென்றும் பிடிவாதம்செய்யப் பெற்றோர்கள் தமக்கு ஒரே பெண்ணாயிற்றே என்ற வாஞ்சையால் கடன்பட்டு பலபல செய்து கடனில் மூழ்கிக் கடன்காரர்களாகிக் கஷ்டமடைகிறார்கள். இதைப் பற்றி மாப்பிள்ளை வீட்டாரும் தொந்தரவு செய்வதும் உண்டு. அதனினும் இது கொடியது.

ஃ

பெண்ணைப் பார்க்கச் சென்ற பெற்றோர்களை கணவன்வீட்டில் விட மாட்டேன் என்றுதடுக்க, பெண்ணை உள்ளே சென்று பார்க்க முடியாமல் ரகசியமாக ஜன்னலண்டை வரச் சொல்லித் தெருவிலிருந்தே பார்த்து பேசிவிட்டுச் செல்பவரும் உண்டு.

ஃ

வேறு சிலர் படித்த அறிவாளிகளாக இருக்கிறார்கள். குடும்பத்தை நடத்தும் விதம், மனைவியை வைத்திருக்கும் ஒழுங்கு முதலியவை தேனொழுக மற்றவருக்குச் சொல்லுகிறார்கள்; பத்திரிகையிலும் எழுதுகிறார்கள், பிரஸங்கிக்கிறார்கள். ஆனால், அவர்கள் மாத்திரம் அநுஸரிப்பதில்லை. உள்ளே சென்றாலோ சிறிய குற்றத்திற்கெல்லாம் பெரிதாகச் சண்டை விளைத்து விட்டும், அன்பைச் சிறிதும் காட்டாமலும் வீட்டிலுள்ளவைகளை உருட்டித் தள்ளித் தாம்தூம் செய்து அமர்க்களம் பண்ணுகிறார்கள். எனக்கே தெரிந்த ஒரு வித்தியாபிமானி தன் மனைவியை ஓங்கி அறைய; அதனால் மூக்கில் இரத்தம் வடிந்து அப்பெண் மூர்ச்சையாய் விழுந்ததையும் கண்டிருக்கிறேன். மற்றொருவர் முதல் மனைவியை அன்னத்திற்கு ஏங்கவிட்டு, மறுமணம் புரிந்து சில வருஷங்களில் தாமும் முடிந்தார்.

ஃ

சில பெண்கள் வீட்டை நடத்தும் விதமும் தெரியாமல், சமையல்

தன் கணவன் அடித்ததைக் கள்ளப் புருஷனிடம் சொல்லுகிறது, அந்தக் கள்ளப்புருஷன் அடித்ததைச் சொந்தக் கணவனிடம் சொல்வதில்லை.

செய்யும் விதமும் அறியாமல், அரிசியைக் கொட்டி அளவுக்குமேல் வடித்துவிட, இருவரும் உண்டபிறகு பாதி மீந்துவிடுகிறது. அதை மற்றவருக்கும் கொடுக்க மனம் வருவதில்லை. அப்படி மீந்தது கிடக்கும்போது மறுவேளைக்கு தனியாக வேறே வடித்து, குழம்பையும் சாதத்தையும் அப்படி அப்படியே பாத்திரங்களில், 'இது நேற்றுகாலையது'—'இது மத்தியானத்தது'—'இது இரவு செய்தது' என்று சொல்லும்படி வைத்துவிடுகிறார்கள். கணவன் இதைப்பற்றிக் கேட்டால் மிக்க கோபங்கொண்டு, 'எனக்கென்ன! வேண்டுமென்றால் நீங்களே சமயல் செய்துகொள்ளுங்கள்' என்று சொல்லும் புண்ணிய குணவதிகளும் உண்டு. அந்தத் தாராளச் செலவில் குடும்பம் அழிவதும் உண்டு.

ஃ

கணவன் சொற்படி நடக்கவேண்டியது பெண் கடமை. ஆனால், கணவன் ஆறுத்தறித்தனமாக மட்டுமிதமில்லாது பொருளைக் கண்டபடி செலவழித்தால், அவனுடன் கூடிக் கூத்தாடி அவனுடைய பொருளைக் கரைக்க முற்படக்கூடாது. தக்க காலத்தில், சமயத்தில் அவனுடைய வீண் செலவுகளை எடுத்துக்காட்டி அந்த விபரீதவழியில் செலவு செய்யாது தடுக்கவேண்டும்.

ஃ

சில பெண்கள் தம் கணவன் கண்டபடி செய்யும் தாராளக்கையன் என்று கண்டதும், தம்மால் எவ்வளவு பொருள்கள்—மூட்டை முடிச்சுகள்—தாய் வீட்டுக்குக் கப்பல் ஏற்ற முடியுமோ அவ்வளவையும் ஏற்றிக் கரைசேர்த்து விடுகிறார்கள். போதாக்குறைக்கு கடிதமும் ரகசியமாக எழுதி தன்னுடைய தம்பி, அண்ணன் பெற்றோர் முதலியவர்களை வரவழைத்து வருஷமுழுவதும் விருந்தினர்களாகவே வைத்து, பலகாரத்தின்மேல் பலகாரமாகச் செய்து நன்றாக உண்டு மகிழ்ந்து புருடன் பணத்தைக் கரைக்கும் காரிகைகளும் உண்டு.

ஃ

கணவன் தாராளமாகச் செலவு செய்பவன் என்று கண்ட வேறு சில பெண்கள், தங்களால் எவ்வளவு பொருள் சேர்க்கமுடியுமோ அவ்வளவையும் சேர்த்து, கணவனுக்குத் தெரியாமல் அண்டை வீட்டு அலமேலு, பக்கத்துவீட்டு பார்வதி முதலியவர்களிடம் கொடுத்து வைக்க, அவர்கள் சமயம்பார்த்து எடுத்துக் கொண்டு கம்பி நீட்டுவதும் உண்டு. சில பெண்கள் அரிசி முதலியவற்றை அவ்வீட்டில் வாடகைக்கு இருப்பவரிடம் விற்று, அவர்கள் தாமதப்போக, எங்கு கணவனுக்கு எட்டிவிடுமோவென்று மவுனமாய் விடுவதுமுண்டு.

ஃ

இனி, படித்த மங்கையர்களாவது சீராக நடக்கிறார்களா என்று பார்த்தாலும் அதுவும் கிடையாது. தாம் இரண்டு எழுத்துத் தெரிந்துகொண்டதினாலே, தன்னைப்போல் யாரும் படித்ததில்லையென்று செருக்குற்று, கணவனைச் சற்றுமே மதியாது, கையில் ஒரு கைத்துண்டுடன் ஏக ராஜாதிபத்யம் கொண்டு தனி அரசு புரிந்து, கணவன் மனதைக் கலக்கும் புண்ணியவதிகளாக இருக்கிறார்கள்.

ஃ

சிலருக்குத் தம் குடும்பச் செலவிற்கு வேண்டிய நிலங்கள் இருந்தும் அதைச் சாகுபடி செய்யாமல் சோம்பல் அதிகம்கொண்டு, கடன்பட்டே குடும்பத்தை நடத்தி, நிலத்திற்குக் கூட வாய்த்தா கடன்பட்டே கொடுத்து

கடன்காரர்களாகி, சொத்தனைத்தும் தோற்று தெருவில் நிற்பதும் உண்டு.

ஃ

மற்றும் சிலர் அன்றன்றைக்கு வரும் வரும்படியை அன்றன்றைக்கே செலவுசெய்து, மிச்சம் மீதி பிற்காலத்திற்கு வேண்டுமேயென்று சேர்த்து வைக்காமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரிபவர்களும் இருக்கிறார்கள்.

ஃ

வேறு சிலர் தாம் மணந்த மங்கையை விட்டுவிட்டு, மற்றொருவளை நேசித்து, அவளுக்கே எல்லா போஷணைகளும் செய்பவராகி, தொட்டுத் தாலிகட்டிய காரிகையையும், அவளுடைய புதல்வர்களையும் தவிக்கவிட்டு 'அவள்' வீடே கதி என்று இருந்து குடும்பத்தைக் கெடுப்பவர்களாகிறார்கள். ஃ

இதில் கொஞ்சம் முற்றிய புள்ளிகள் அந்த ஆசைக்கண்ணாட்டியின் மேல் வைத்த மோகத்தால் அவள் சொற்படியே நடந்து, சொத்தனைத்தும் அவளுக்கே எழுதிவைக்க, தன் சொந்த மனைவியையும் பலவித இம்சைகள் செய்ய, பின் சமயம் பார்த்து அந்த ஆசைக் கண்ணாட்டி, மற்றொருவனை நேசிக்க, இவன் அப்போதுதான் மோசம் போய்விட்டதாக நினைத்து அதுமுதல் திருந்துவதும் உண்டு. ஃ

மற்றும் சிலர் தாம் மணந்த மங்கையை வெகுவாக நேசித்தும், அன்புடன் நடத்தியும், பொருள் திரட்டும் பொருட்டுத் தூரதேசமே சஞ்சாரமாகி, மனைவி முகத்தையே பார்ப்பதற்கு முடியாமல், கடிதத்திலே கண்டு இன்பமுற்று, எதோ வருடத்தில் இரண்டு மூன்றுநாள் ஓடிவந்து மனைவியுடன் இருந்து சுகித்து இன்பம் பெற்று, திரும்பியும் ஓடிவிடுவதும் உண்டு. இவ்விதமே இவர்களின் காலம் முழுதும் கழிந்துவிடுகின்றது.

ஃ

ஆகையினாலே, ஆணும் பெண்ணும்—மனைவியும் புருடனும்—நேசித்து ஒருவர்க்கொருவர் மனசஞ்சலம் ஏற்படாது ஒத்து உழைத்துக் குடும்பத்தை நடத்தினால் எவ்வளவோ இன்பமுடன் வாழலாம்! குடும்பமும் ஈடேறும்!! ஊரும் நலம் பெறும். நாமும் இன்புறலாம்.

P. G. குலசேகர ராஜா.

படித்த மனைவியை விரும்புகிறவனுக்கோ கல்லாத நாரி; தக்க கணவனை வேண்டுகிற பெண்ணுக்கோ வீட்டில் உட்கார்ந்து தின்னும் சோம்பேரி; அல்லது கொடிய கோபகுண வேங்கை. ரம்பை ஊர்வசி கோரினோனுக்கு புளு பிளாக் அம்மையார்! எதுவும் கோராதவனுக்கோ கட்டழகியான நல்ல பெண்டாட்டி. இந்த அமைப்பு வெகு விசித்திரமன்றோ?

அவன் தன் பெற்றோர்கட்கு உட்பட்டு எவ்வளவு ஒழுங்காய் நடக்கிறான் என்றால், அவன் பெற்றோர்கள் அவனை எவ்வளவு கௌரவத்தில் வைத்துப் பெருமைப்படுத்தி வருகிறார்கள் என்பதையும்—தமது குமாரனைப் பிறரிடம் தூற்றித் தாழ்த்தும் பெற்றோர் கவனிக்கக்கடவர். தமது குமாரனைத் தாழ்த்துவது தம்மையே தாழ்த்துவது போலாம். அது பாவம்.

சிறுமணித்திரள்

(முன் பக்கம் 210-லிருந்து)

693. "பெரிய மனிதன்" என்றால் அவர் வீட்டு வாயிற்படி வரையில்தான். வெளியிடத்திலும் பெரியவராவதற்கு அன்பின் ஆட்சி வேண்டும். அன்பின் அதிகாரம் எங்கும் செல்லும். அன்பால் பெரியவராகலாம்.

694. பழய பத்திராசிரியரின் காலம் கழிந்துபோக, புதிதாக வந்த பத்திராசிரியர் முன்னவர் ஏற்படுத்தியிருந்த அமைப்பைப்போல் பத்திரிகையை நடத்தத் திறனின்றி, என்னென்னவோ புது குழப்பங்களும் மாறுதலும் செய்கிறார். பழய பத்திரிகையைப் படித்தவர்கள் வேறு வழியின்றி இதைப் படிப்பதே தவிர பழய விருப்பத்தோடல்ல.

695. ஒவ்வொருவருக்கும் ஏதாவதொன்றில் விசேஷமான அபிப்பிராயமோ, பிடிப்போ இருக்கிறது. அவ்வழியிலேயே அவர்கள் மனம் சென்று சிலவற்றின்மீது வெறுப்பும் கொள்கிறது. இந்த வெறுப்புக்குக் காரணத்தை—மனதின் வேலையைப் பரிசோதிக்கத்தக்கவர் யாராவது ஒருவர் வந்தால் அவரால்மட்டும் கண்டு கொள்ளக்கூடும்.

696. நாற்பது ரூபாய் வெள்ளிக் கடியாரம் செய்ய நாலு ரூபாய்தானாகிறது. நூற்றைம்பது ரூபாய் விலையுள்ள சிங்கர் தையல் மிஷின் செய்ய பன்னிரண்டு ரூபாய்தானாகிறது. மற்ற தொகையோ அதைச் செய்பவர்களுக்கும் இடையிலுள்ளவர்களுக்கும் பங்கிடப்படுகிறது.

697. ஒரு தாதுபுஷ்டி லேகியம் செய்ய இருபது ரூபாயானால், அதைச் செய்தவர் அதை நூறு ரூபாய்க்கு விற்றுத் தீர்க்கிறார். "அயம் காந்தம் வெள்ளி தங்கம் முத்து முதலியவற்றின் 'சத்துவம்' மிகுதியாகச் சேர்க்கப்பட்டுத் திருப்திகரமாக முடிவு பெற்ற சிறந்த லேகியம்" என்கிறார். உண்மையில் எந்த சத்துவமும், வெள்ளியும், தங்கமும் சேர்க்கக் காணோம்.

698. இயற்கையிலேயே ஜாதி உண்டு. ஆணும் பெண்ணும்—இட்டார் இடாதார் என்ற இரு ஜாதிகளை ஔவையார் படைத்தார். குணத்தினாலும் கருமத்தினாலும் நான்கு ஜாதிகளைத் தான் உண்டாக்கினதாகக் கண்ணன் கூறியிருக்கிறார்.

699. தங்களது சொந்த வாழ்க்கையை எழுத்தளவில் எழுதும் சக்தியைக் காட்டக்கூடியவர்கள் மிகச் சிலரே இருக்கிறார்கள். அவர்களிலும் சிலரே தங்களுடைய வாழ்க்கை யநுபவங்களை நம்பத்தகுந்த முறையில் எடுத்துரைக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். இவ்விதத் திறன் வாய்ந்த ஒருவர் தமது சுயசரிதையை எழுதி அச்சிட, அதில் சம்பந்தப்பட்டவர்கள் அவர்மீது அவதூறு கேசுக்குப் புறப்பட்டதுமுண்டு. அதனால் அவரது அநுபவ ஞான நூலும் பிறகு வெளிவரவில்லை.

மனைவி எதிர்த்தால் அது மிக்க ஆத்திர முண்டுபண்ணும். தாசி வீட்டில் தன்னை "வாடா! போடா!" என்றால் அது திரட்டுப்பால்போல் இனிக்கும்,

700. "மற்றவர் தாம் ஜீவிப்பதற்குத் தமது முயற்சியையே பெரிதும் மதிக்கின்றனராக! யானோ முயற்சியுடன் இறைவனின் அருட்படியே நிகழ்கின்றனவென்று நம்புந்தன்மையேன்" என்கிறார் ஒருவர்.

701. நாம் அன்றாடம் கூலிபெற்றுப் பிழைப்பவர்களாகவே இருக்கிறோம். சிலர் தினக்கூலி பெற, சிலர் 30-நாட்களும் சேர்த்து மாதத்தில் கூலி பெறுகிறார்கள். இவ்வளவே பேதம்.

702. பிடிஆகாரத்தை உட்கொள்ளும்பொழுதும், அந்த ஆகாரத்தை உண்டுபண்ணிய பகவானை நாம் நினைக்கவேண்டும். நாம் அணிந்திருக்கும் துணியைக் கவனியுங்கள். இந்தத் துணியும் நீங்கள் உபயோகிக்கும் மற்றச் சாமான்களும் பகவானின் சிருஷ்டிக் குட்பட்ட உங்கள் ஸகோதரர்களே தயாரித்த தென்பதையும் நீங்கள் உணரவேண்டும்.

703. இறந்து போனவர்களுடைய செய்கைகளைப் பார்த்து, உயிரோடு இருப்பவர்களுடைய மேன்மைகளைப் பாராட்டுவதற்கு நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

704. ஆறுகளில் நீந்தத் தெரிந்தவர்கள்கூட கடல் ஸ்நானம் செய்யும்போது ஏமாந்துபோவதற்குக் காரணம் இருந்துவருகிறது. கடலில் நீர்மட்டத்தின்கீழ் ஆற்று ஓட்டம் போல் தண்ணீர் இழுத்துக்கொண்டு வேத வேகமாய்ப் போகிறது. இது எவருக்கும் தெரியா தானபடியால், திடீரென்று இழுக்கப்பட்டவுடன் விழுந்துவிடுகிறார்கள். எதிர்பாராமல் தள்ளப்பட்டவுடன் நீந்தித் தப்பித்துக்கொள்ள எண்ணம் வாதபடி அதைரியம் மேலிட்டுப்போகிறதோ என்று நினைக்கும்படியாகிறது.

705. பால்யத்தில் அலக்ஷியமாய் இருந்ததால் ஏற்படக்கூடிய கெடுதல்களைப் பிற்கால ஜீவியத்தில் நிவர்த்தி செய்துகொள்ள ஒருபோதும் முடிவதில்லை. அலக்ஷியத்தினால் இழந்தது இழந்ததே. திரும்பப் பெற இயலா.

706. காலத்தின் விளைவுகள் கொடியவை என்பதை அகம்பாவிகள் அறியவேண்டும். பிறரைப் பகிரங்கமாய் இழிவுசெய்ய முயற்சிப்போன் எத்துணைப் பெரியவனாயினும் அற்பனேயாவன். கடவுள் தரும் கூலியும் வேறேயுண்டு. பிறர் மனத்தை நோகவைத்த அகம்பாவத்திற்கும் சிக்ஷை தவறாது.

707. ஒரு மூட்டை அரிசியில் ஒரு படி கல்லிருந்தால் கீழேகொட்டி, அதிலுள்ள ஒருபடி கல்லைப்பொறுக்கி எறிவது சுலபமா? அல்லது, கல்லை விட்டுவிட்டு ஒரு மூட்டை அரிசியையும் பொறுக்கிக் கொண்டிருப்பது சுலபமா?

708. வாழ்க்கை மிகமிகக் கசந்தாலும், குழந்தைகளின் முகதரிசனம் கித்தகித்தமும் புதிய ஜீவனைச் சோர்ந்தவனின் உடலில் கொண்டுவந்து சேர்க்கவல்லது.

709 மனம்பிடிக்காத இடத்தில் வீட்டுக்காரன் பேசமாட்டான். அங்கு வந்தவனும் தங்கமாட்டான்.

உன்னுடையது என்ற விஷயத்தில் இப்பொழுது எவ்வளவு சிரத்தை காட்டுகிறாய்? எனனுடையது என்ற விஷயத்தில் முன்னம் நீ எத்தனை அலக்ஷிய சிந்தையும் தாமதமும் ஒதுக்கித் தள்ளுதலுமாயினாய்? நம்பி எவ்வளவு மோசம்போனேன். அதை மறக்க நினைக்கினும் முடியவில்லையே!

லைப் இன்ஷூரன்ஸ்

(அதன் அவசியமும், பிற்கால குடும்ப ரக்ஷணையும்)



இந்தச் சிறிய வியாசத்தைப்படிக்கத் துவக்கும் வாசகர்களுக்கு முதற்கண் ஓர் விக்ஞாபனம். 'லைப் இன்ஷூரன்ஸ்' என்பது சாதாரணமாக அர்த்தமாகாததும் சம்மந்தமற்றதுமான ஓர் விஷயமென நினைத்து விலக்கிவிடாமல், உமக்கு முக்கியமான ஓர் யோசனை கூறவந்திருக்கும் உண்மைச் சிநேகனாகக் கருதி ஆழ்ந்த கவனத்துடன் முழுவதும் ஆராய்ச்சி செய்வதுடன், அதன்படியும் நடப்பீராகில் அது உமக்கும் உமது குடும்பத்திற்கும் பெரு நன்மையாக முடியுமென்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை.

நாம் உழைப்பதேன்?

நீங்கள் சதா கவலையுடன் வருந்தி வாடுவதும், ஓயாமல் உழைத்து வருவதும் எதன்பொருட்டு? நீங்கள் அன்புடன் நேசிக்கும் மனைவி மக்கள் உங்களுடைய ஜீவிய காலத்திற்குப் பிறகு வறுமையின் கொடுமையால் வருந்தி அன்ன வஸ்திரங்களுக்குப் பிறர் கையை எதிர்பார்த்து ஏங்காமல், அவர்கள் கௌரவமாக வாழ்க்கை நடத்தப் போதியதோர் மூலதனத்தைச் சேகரித்து வைத்துவிட வேண்டுமென்பதுதானே உங்களது முயற்சிகளின் நோக்கம்? வேலை செய்ய இயலாத வயது காலத்திற்கு உபயோகப்படவோ, அன்றி நாம் திடீரென்று தவறிவிட்டால் நமது குடும்பம் துன்பத்திற் குள்ளாகாதபடி தடுக்கவோ ஓர் தொகையை சேகரித்து வைப்பது புத்திசாலியான ஒவ்வொரு மனிதனும் அவசியம் செய்யவேண்டிய இன்றியமையாத ஏற்பாடாகும். பணத்தைச் சேர்த்துவைக்க எத்தனையோ முறைகள் இருக்கின்றன. ஆனால், நிச்சயமாய்த் தவறாமல் நாம் இருக்கும்போதும் இறந்தபோதும் நாம் சேமித்து வைக்கவேண்டுமென்று உத்தேசித்த மூலதனத்தை ஏற்படுத்தி வைக்க ஒரேவழிதான் உண்டு. அதுதான் 'லைப் இன்ஷூரன்ஸ்' என்பது. மரணத்தினால் நம் குடும்பத்திற்கு ஓர் ஆஸ்தியைச் சேர்த்து வைக்கும் ஒருமுறை. மனிதனாய் ஜனித்த ஒவ்வொருவனும் மரித்தே தீரவேண்டும். வேறு முறைகளில் திரவியம் சேகரிக்க முயலும் நாம் இடையில் எமன் வாய்ப்படின் நமது குடும்பத்தின் கதி என்னாகும்? ஆகவே இருப்பினும், இறப்பினும் உதவவல்ல முறையைக் கைப்பற்றுவது சிறந்த அறிவுடைமையாகும்.

கோருந்தொகை பெற எளிய வழி.

'லைப் இன்ஷூரன்ஸ்' என்பது மிகவும் சுலபமான முறை. நாம் கடைசியாகப் பெற விரும்பும் பெருந்தொகைக்குப் பதிலாக வருஷா வருஷம் ஓர் சிறிய தொகையைச் செலுத்தி வா

பிணியாளியின் பாடு வைத்தியருக்குத் தெரிவதில்லை. பாதி வைத்தியத்தில் முழுப்பணமும் பறித்துவிட்டு எங்கேயோ ஊருக்குப் பறந்துவிடுகிறார். திரும்பி வரும்வரையில் ரோகஸ்தனின் பாடு பெரிய தத்தளிப்பே.

வேண்டும். நாம் உயிருடன் இருந்தால் குறிப்பிட்ட வருஷங்களுக்குப் பிறகு உத்தேசித்த பெருந்தொகை நமக்கே கிடைக்கிறது. அகாலமரணம் சம்பவித்தாலும் நம்மால் செலுத்தப் பட்டிருக்கும் தொகை எவ்வளவு அல்பமாக இருந்தபோதிலும், நம்மால் முதலில் கோரப்பட்ட தொகை வார்சுதாரர்களுக்கு சொந்தமாகிறது.

லைப் இன்ஷூரன்ஸின் அவசியம்.

உயிருடன் இருக்கையில் மனைவி மக்களின் சௌகர்யத்திற்காகவும் திருப்திக்காகவும் மிகவும் தாராளமாக செலவு செய்யப் பின்வாங்காத நாம், நமக்குப் பிறகு—அவர்கள் ஆதரவிழந்து தவிக்கும் நிலைமையில்—அவர்களது கதியைக் குறித்துக் கவனிக்காமலிருப்பது ஆச்சர்யமாகவேயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன் குழந்தைகள் தனக்குப் பிற்காலத்தில் சௌகர்யமாகவும் கௌரவமாகவும் வாழவேண்டுமென்று விரும்புகிறான். தன் குடும்பத்திற்கு வேண்டிய மூலதனத்தை இவன் சேர்த்து வைக்க விரும்பும்போது, தான் வெகு காலம் ஜீவித்திருக்கப்போவதாகவும், அதற்குள் உத்தேசிக்கப்பட்ட தொகை சேமித்து விடப்படும் என்றும் எண்ணி ஏமாறுகிறானேயொழிய, மரணம் எந்த நிமிஷத்திலும் தன்னை அணுகக்கூடுமென்பதை அவன் முழுதும் மறந்துவிடுகிறான். மனிதன் தன் வாழ்க்கை நிலையற்றதென உய்த்துணர்வானாயின், இருப்பினும்—இறப்பினும் திண்ணமாய்த் தன் வார்சுதாரர்களை வறுமையின் கொடுமையினின்றும் காப்பாற்றி உதவ வல்ல 'லைப் இன்ஷூரன்ஸை'க் கைக்கொள்ளாமலிருக்கமாட்டான். 'லைப் இன்ஷூரன்ஸ்' எத்தனையோ திக்கற்ற குடும்பங்களைக் காப்பாற்றியிருக்கிறது.

மேல்நாடுகளிலே 'லைப் இன்ஷூரன்ஸ்' ஏராளமாகப் பரவி இருக்கிறது. எல்லோரும் தம் ஆயுளை இன்ஷூர் செய்துகொள்வது அங்கே சர்வ சாதாரணம். ஆனால், இந்தியாவில் 'லைப் இன்ஷூரன்ஸ்' போதிய அளவுக்கு இன்னும் விசேஷமாகப் பரவவில்லை. இப்பொழுது தான் நம்நாட்டு ஜனங்கள் 'லைப் இன்ஷூரன்ஸினால்' ஏற்படக்கூடிய ஏராளமான நன்மையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கூறலாம். இந்தியர்களாகிய நமக்குத்தான் 'லைப் இன்ஷூரன்ஸ்' மிகவும் அத்தியாவசியம். இந்தத் தேசத்தில் தான் விதவைகள்—இவர்களின் கதி—மிகவும் பரிதாபகரமானதாக இருக்கிறது. இந்தத் தேசத்திலே வேலைசெய்ய இயலாதவர்களை அன்னமிட்டு ரக்ஷிக்கவேண்டுமென்ற ராஜாங்க விதி கிடையாது. நமது பெண்டுகள் வேலை செய்து ஜீவிக்கக் கூடிய மரியாதையான மார்க்கங்களும் மிகச் சில. அப்படி இருப்பினும் நமது பெண்களில் பெரும்பாலோருக்கு வேலை செய்து சம்பாதிக்கும் பழக்கம் கிடையாது. ஆகவே, இதர நாடுகளை விட நமது தேச ஜனங்கள் 'லைப் இன்ஷூரன்ஸ்' செய்துகொள்ள விசேஷ காரணங்கள் இருக்கின்றன.

'லைப் இன்ஷூரன்ஸ்' செய்து வைத்திருக்கும் ஒரு மனிதன் மரணகாலத்தில் மனதில் தன் குடும்பத்தைக் குறித்த எவ்வித சஞ்சலமுமின்றி மன நிம்மதியுடன் சந்தோஷமாக இருக்கவும் வழி உண்டு.

ஏ. ஆர். இராஜகோபாலன்.

இதைப்பற்றிய ஸகல விவரங்களுக்கும், நூல் புஸ்தகத்திற்கும் திரிச்சினுப்பள்ளி, தெப்பகுளம் போஸ்ட் ஓரியண்டல் லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனிக்கு நேரில் எழுதிக்கொள்க,

நிலம் வாங்குவதின் அநுபவம்

(164-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோயம்புத்தாருக்குச் சமீபத்தில் "உள்ள பூளைமேடு" என்னும் ஊரில் சுமார் 150 ஏகருக்கு மேற்பட்ட நிலமுள்ள பிரபல மிராசுதாரராவார் ஸ்ரீமான் A. அப்பாய்நாயுடுகாரு என்பவர். அவ்வளவு பெரிய பண்ணைக்குக் காரியஸ்தர் (வேலை வாங்குபவர்) அவரே. தானே இருந்து கூலியாட்களிடத்தில் வேலை வாங்குகிறார். எவ்வளவு கொடிய வெயிலிலும் ஒரு சிறிய துணியைத் தலையிற் போட்டுக்கொண்டு ஆட்களிடத்தில் நிற்கிறார். வெயிலிற்குக்குடைபிடிப்பதென்பதை அவரிடம் நான் கண்டதில்லை. ஆட்களிடத்தில் வேலை வாங்குவதோ மிக அதிசயிக்கத்தக்கது. அவர்களைக் கடிந்து பேசுவதென்பது மிக அருமை. ஆனால், அன்பான பேச்சுகளைக் கொண்டே அதிகவேலை வாங்கிவிடுகிறார். வாழ்க்கையின் சிக்கனத்தையும், விவசாயத்தின் சீர்மையையும் அறிய விரும்புவோர் அவரிடம் ஒருநாள் பழகின் போதுமானது.

ஃ

நிலம் உழைப்பிற்குத்தகுந்த பலன் கொடுக்குமென்பது உறுதி. பிற தொழில்களுக்கு இவ்வுறுதி யில்லை. இன்று குபேரனாக விளங்குகிறவன் நாளை கோவணாண்டியாக நேரினும் நேரும். எனினும், மழையில்லாத் துன்பம், கூலியாட்கள் கிராக்கி, வரிப்பளுவு, இந்நிலையில் ஆடம்பர வாழ்க்கை!—இவைகளே கெடுக்கின்றன. மிராசுதாரர்கள் ஒற்றுமையென்பதைச் சொல்லிலும் அறியார். அழுக்காறும் அவநம்பிக்கையுமே மிகுந்தவர்கள். இப்பொழுது எந்தக் கிராமங்களைப்பார்த்தாலும் கட்சிப் பிரிவுகள் மலிந்து தோன்றுவதற்கு அதுவே காரணம். "கோர்ட்டு"களில் நடைபெறும் வழக்குகளில் பெரும்பாலானவை விவசாயிகளைச் சேர்ந்தவையே. இத்தகைய மோசமான நிலைமை அநேகமாக வியாபாரிகளிடத்தில் இல்லை. ஒற்றுமையென்பதை அவர்களிடத்தில்தான் கற்க வேண்டும். ஒரு வியாபாரியினிடத்தில் ஒரு பொருளின் விலை கேட்டுவிட்டு, அதே ஊரில் மற்றெத்தனை வியாபாரியிடத்தில் சென்று அப்பொருளின் விலை கேட்பினும் முதல் வியாபாரி சொன்ன விலையைத்தான் சொல்வார்கள். விவசாயிகளின் வியாபாரமோ "தோசைக்கடை போட்டி" தான். ஒருவன் கத்தரிக்காய் தூக்கு 2 அணா என்றால், மற்றொருவன் "ஓடிவா 1½ அணா" என்பான். இத்தகைய குறைகளால் விவசாயிகள் வறியராகவும், பலஹீனராகவும் வாழ நேர்கின்றது. ஆயினும், "எருது இளைத்தாலும் கொம்பு இளைக்கவில்லை" என்னும் பழமொழியை உண்மையாக்கி விடுகின்றனர். ஃ

இன்னும் வருடத்திற்கு வருடம் வரவு சுருங்கினும் செலவு சுருங்குவதில்லை. இதனால் வியாபாரிகளிடத்தில் சென்று 100-க்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 1, 2, 3-ம்; அதற்கு மேலுமாக வட்டிபேசித் தங்கட்கு வேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டு, வட்டித்தொகையை அவ்வப்பொழுது கொடுக்கவியலாது வட்டியும் முத

றும் பெருகியபின்பு, தங்கள் நிலத்தையே அந்த வியாபாரிக்கு ஒப்புவித்துவிடுகின்றனர். வேறு சிலர் தங்கட்குப் பணத்தட்டு நேரும்பொழுதெல்லாம் வட்டியின் கொடுமைக்கஞ்சி, கடன்வாங்க மனமின்றி, தம்மிடமுள்ள தானியத்தை வியாபாரிகளிடத்தில் விற்றுப் பணம் பெற்றுக்கொள்கின்றனர். அவர்கள் அப்பொழுது விற்ற ரூபாய் 500-ஆனால், அடுத்த மாதத்தில் அதே வியாபாரி 700-க்கு விற்கிறான். தகுந்த விலை வரும் சமயம்வரைப் பொறுத்திருக்க முடியாமல் விற்க நேரிட, இடையில் நேரும் இலாபத்தை மற்றொருவன் அடித்துக்கொண்டு போய்விடுகிறான். இந்தத் தொல்லைகளெல்லாம் நீங்க விவசாயிகள் அனைவரும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் உண்மை மொழியைக்கடைப்பிடித்து ஒழுகினாலன்றி உய்யும் வழி யில்லை. ஒவ்வொரு கிராமத்திலும், அல்லது சில கிராமங்கட்குப் பொதுவாக ஓரிடத்திலுமாக அங்கங்கே "விவசாயிகள் சங்கம்" ஏற்படுத்தி விவசாயிகள் அனைவரும் அங்கத்தினராகப் பதிவுசெய்துகொண்டு, மூலதனமாகச் சிறிது பொருளைப் பொதுவில் சேகரித்து, செலவுக்கு வேண்டியவர்கள் எளிய வட்டியில் பெற்றுக்கொண்டும்; தங்கள் தங்கள் விளைபொருள்களை அச்சங்கத்தில் சேர்ப்பித்து, தகுந்த விலை வரும்பொழுது விற்றும்; அந்த இலாபத்திற் பெரும்பகுதியை அவரவர்கள் சேர்ப்பித்த பொருளிற்கேற்பப் பகிர்ந்துகொண்டும்; மிகுந்த சிறிதைச் சங்கத்தின் மூலதனமாகச் சேர்த்தும் நடத்திவந்தால் ஒருவாறு வறுமைப் பிணியினின்றும் தப்பலாம். எங்கோ மூலைக்கொன்று விவசாயிகள் சங்கம் நடைபெறுவதாகப் பத்திரிகைகளால் அறிய நேர்கின்றது. அவற்றில் கொஞ்சம் "மிதப்புள்ள" மிராசுதார்களே கூடி அதையும் இதையும் பேசிவிட்டுக் கலைகின்றனர். பணக்காரர்களே முன்வந்து ஏழைமக்களின் துயரைப் பரிகரிக்க முயல்வர் என்று நினைப்பது என்றைக்கும் நடவாத காரியம். "தன் கையே தனக்குதவி" என்பதை ஏழை மக்கள் சிந்தித்து ஒழுகல் வேண்டும். இச் சொற்களால் யாதேனும் பயன் உண்டாகுமா என்பது வினா? (முற்றிற்று.)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

தான் மரித்தபின் பகைவர் உறவாதல்!

இப்பொழுது ஒருவனைப் பகைத்தும், எதிர்த்தும், மனஸ்தாபப்பட்டுப் பேசாது தூரவிலகியும் உள்ளோர், அவன் மரணமுற்று நடக்கிற கருமகிரியைக்கும் திதிக்கும் வெகு முக்கியஸ்தர்கள்போலும், மகா உறவு நேசம் பாராட்டியவர்கள்போலும் வந்து கூடிக்கொள்கின்றனர். இறந்தவனுக்குச் சற்றும் பிரியமில்லாத இவர்களையும் உபசரிக்கும்படியாகிறது. இவர்களும் அவனுக்கு மஹா வேண்டியவர்கள்போல் காண்பித்து வடை பாயசத்துடன் சாப்பிட்டுக் கொள்கிறார்கள். இது இறந்தபின் நடக்கும் திருவிழா! மரித்தவன் பார்த்துச் சிரிப்பதற்கில்லாத திருவிழா!!



1. பெரிய வேலை பெறின், சிலரது கண்களின் ஒளி மங்கலடைகின்றது. நெருங்கிப் பழகினவர் அவரிடம் போனாலும் 'தாங்கள் யார்?' என்று வினவுகிறார்கள்.

2. சம்பளத் தேதியை எதிர்பார்த்து மகிழ்ச்சியுடன் சம்பளம் பெற, அது மறுநாளே அந்நியரை நாடிவிட நாட்டிய மாடுகின்றது.

3. சில பாடல்களை நெட்டுருவு செய்துகொண்டு கவிகளைக் கரை கண்டதாகக் கூறி வெறும் வார்த்தைகளால் கோட்டை கட்டும் காலி சித்தர்கள் பலர். இவ்வகுப்பில் சில வைத்தியர்களையும், ஆகாசப்புளுகு ஜோஷியர்களையும் சேர்க்கலாம்.

4. சிலர் அறியும்படி தெரிவிக்கும் பெரிய விளம்பரங்கள் பரவுவதில்லை. பலர் அறியக்கூடாதென்ற ரகஸ்யமே விரைவில் எங்கும் கொடி கட்டிப் பறக்கின்றது.

5. கடன் வாங்கும் அநுபவத்தில் கரை கண்ட ஒருவர்: தன் உறவினர்—எதிர்பக்க வீட்டார்—தான் குடி புகுந்த இடத்திலுள்ளோர்—தன் மனைவி முதலியவர்களிடம் கடன் படலாகாது என்கிறார். கடனைத் தீர்க்கு முன்பே நச்சுநச்சென்று பலமுறை அவர்கள் கேட்டுவிடுவார்களாம்!

6. உழைப்பவன் பாயிற் படுத்தாலும் உட்கார்ந்து தின்பவர்கள் விலகுகிறார்களா? அவன் பிணம் வெளியேறுகிறவரை வாயிற்படி தாண்டார்கள். இக்கொடுமையை என் சொல்ல?

7. பகைவராயிருப்பினும் விருந்தினர் வீட்டுக்கு வந்தால் அவரையன்புடன் மரியாதை செய்வது அவசியமாகும். பூமி தன்னைக் குடைந்து துன்புறுத்துபவனுக்கும் ஜலம்கொடுக்கின்றதேயன்றி துன்புறுத்துவதில்லை.

8. உலக காரியங்களை மனிதன் தன் அறிவிற்கேற்பத் தீர்மானிக்கிறான். ஒன்றில் அனுபவப்பட்டிராதவனுக்கு அந்த ஒன்றை நூல்களின் வழியே கண்டாலும், அனுபவப்பட்டவனுக்கு விளங்குவதுபோல் அவனுக்கு விவரமாவதில்லை. [நீதி ரூபமான போதனைகள் சுலபமாய் விளங்கும். அநுபவ போதனைகளோ பட்டிருந்தால் தான் விளங்கும்.—ப-ர்.]

A. G. இலக்ஷ்மணன்.

நீர் அன்னியரல்ல, கடவுளுக்கு முன்னால் நாம் எல்லோரும் சகோதரர்களல்லவா? துன்பம் வந்தகாலத்தில் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வதைப் பகவான் பிரியத்துடன் கவனிக்கிறானன்றோ? உம்மை என் பாவம் விடுமா?

தங்களைப் பூர்ணமாய் நம்பிக்காத்துள்ள மனிதனின் தவிப்பு சிலருக்குத் தெரிவதேயில்லை. இதோ என்றால் இரண்டுமாதம் செல்லுகிறது. ஆகா! அப்படியே என்றால் ஆறுமாதம் செல்லுகிறது. எப்போதும் வாக்குத்தவறுதலே; தாமதம் செய்தலே வழக்கமாகிவிடுகிறது. இதுவும் ஒரு பெருமையா?

பதங்களின் சேர்க்கை

(208-ம் பக்கத் தொடர்ச்சி.)

48. உபசாரம், (உப — நன்மை) + (சா — அநுஷ்டிப்பது) மரியாதை.

49. உபாயம், (உப — நன்மை) + (அயம் — வழி) தந்திரம்.

50. உயிர்ப்பாங்கி, (உயிர் + பாங்கு) (from பங்கு) உயிர்த்தோழி.

51. உருமர்த்தனன், (உரு — மிகவும்) + (மர்த்தனம் or மத்தனம் — இடிக்கை) மிகவும் இடிப்பவன்.

52. எசமானன், (யஜ — யாகஞ்செய்) தலைவன்.

53. கம்புக்கிரீவன், (கம்பு — சங்கு) + (கிரீவம் or கிரீபம் - கழுத்து) சங்குபோன்ற கழுத்தையுடையவன்.

54. கர்ப்பூர கௌரம், (கர்ப்பூரம் + கௌரம்) கௌரம்-வெண்மை. கர்ப்பூரம் போன்ற வெண்மை.

55. காமதேவன், (காமம் + தேவன்) காமம் — ஆசை. மன்மதன்.

56. காராள கேசரி, (காராளம் — துன்மார்க்கம்) + (கேசரி — சிங்கம்) பயங்கரமான சிங்கம்.

57. குணநிதி, (குணம் — நிதி) (நிதி — நிறைவு.) நற்குணம் நிறைந்தோன்.

58. குரூபி, (கு — கெட்ட) + (ரூபம் — உரு) அவலட்சணமுடையவன்.

59. கூர்மவிர்த்தி, (கூர்மம் — ஆமை) + (விர்த்தி — செய்கை) ஆமையின் தொழில்.

60. கோரப்பல், (கோரம் — பயங்கரம்) + பல். பயங்கரமான பல்.

61. சகவாசம், (சக — உற) + (வாசம் — வசி) உற்ற சிநேகம்.

62. சகோதரன், (சக — கூட) + (உதரம் — கர்ப்பம்) உடன் பிறந்தவன்.

63. சசேல ஸ்நானம், (ச + சேல — வஸ்திரம்) + (ஸ்நானம் — முழுக்கு) புடவையோடே முழுகுதல்.

64. சஞ்சலம், (சம் — மிகவும் + (சலம் — அசைவு) மனக்கவலை.

65. சஞ்சீவகன், (சம் — நிறைவு) + (சீவகன் — உயிருள்ளவன் பூரணாயுசுள்ளவன்.

66. சண்ட கருமன், (சண்டம் — கொடுமை) + (கருமன் — செய்கை) கொடுஞ் செய்கையுடையோன்.

67. சதுரதந்தன், (சதுரம் — சாமர்த்தியம்) + (தந்தம் — பல்) திறமான பல்லை யுடையோன்.

68. சத்திய வசனன், (சத்தியம் — உண்மை) + (வசனம் — பேச்சு) உண்மை பேசுவோன்.

69. சந்தி விக்கிரகம், (சந்தி — சேர்) + விக்கிரகம் — நாசம்) அடுத்துக் கெடுத்தல்.

70. சந்தோஷம், (சம் — மிகவும்) + (தோஷம் — களிப்பு) மகிழ்ச்சி.

71. சந்நியாசி, (சம் — முற்றிலும்) + (நியாசி — துறந்தவன்) துறவி.

72. சப்தம், (சப் — பேச்ச) ஒலி,

(தொடரும்.)

விபசாரியும் பிழைக்கிறாள்; பதிவிரதையும் பிழைக்கிறாள்; கள்ளும் விலையாகி விடுகிறது. கற்பூரமும் விற்பனையாகிறது. உயர்வு தாழ்வு அறிபவர் சிலரே.

அடிக்கும் கையே அணைக்கும்

அடிக்க ஒரு கையும், அணைக்க ஒரு கையும் இருக்கவேண்டும். சிறுவர்களை நல்வழிக்குக் கொண்டு வரவேண்டி அவர்களைத் தண்டிப்பதும் கண்டிப்பதும் அவசியம்தான். அத்துடன் தங்களுடைய பிரீதியைக் காட்டுவது அதியவசியம். பெரியோர்கள் கொஞ்சம் கோபித்துக் கொள்வதில், அந்தக் கோபம் குணத்தையே விளைவிக்கும். வெயிலுக்குப் பின் மழையும், சஞ்சலத்திற்குப் பின் சந்தோஷமும் உண்டாகின்றன. பொன்னை யுருக்கி யடியாவிட்டால் அது சிறந்த நகையாமோ? கரும்பை ஆலையிற் கொடுத்து நெருக்கா விட்டால் வெல்லமாமோ? அந்த வெல்லத்தைத் தேய்க்காவிட்டால் சக்கரை யாமோ? அதுபோல் பெரியோர்களின் கண்டிப்பான வார்த்தைகள் இல்லாவிடில் வித்தையிலோ கிரமமார்க்கத்திலோ தேருவ தெப்படி? கற்றூழை வழுவழுப்பா யிருக்கிறதென்று அதைக் கொள்வீர்களா? அல்லது நவரத்நம் கரடுமுரடா யிருக்கிறதென்று அதைத் தள்ளுவீர்களா?—சொல்லுங்கள். அதுபோல் பெரியோர்களுடையவும், உபாத்தியாயர்களுடையவும் கண்டித வார்த்தைகள் அந்த சமயத்துக்கு இன்பமாயில்லையென்று தள்ளாதீர்கள். அது நவரத்நமென்று மதியுங்கள். தாய் மகளைக் கோபிக்கும்போதும், தந்தை தநயனைத் திட்டும்போதும், உபாத்தியாயர் சிஷ்யனைக் கண்டிக்கும்போதும், புருஷன் மனைவியை வையும் போதும் உபயோகப்படுத்துகிற ஒவ்வொரு வார்த்தையிலுமுள்ள ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு ரத்நமென்று நினைக்க வேண்டும்.

வீட்டுக்குள் கலகம் எப்படி வருகிறது?

வீட்டின் அரசி வெடுவெடு என்று காலைமுதல் படுகிறாள். இடையே அந்த சிடுசிடுப்பில் குழந்தையை அடிக்கிறாள். அது, அம்மாள் அடித்தாளென்று அலறியபடி தந்தையிடம் வந்து கதறுகிறது. அவன் தன் மனைவியை கண்டிக்கப் புறப்படுகிறான். அவள் மீறிப் பேசுகிறாள். இவனுக்கும் ஆத்திரம் பொங்குகிறது. இச்சமயம் அவள் தன் குழந்தையைப் பார்த்து, 'இரு உன்னைக் கொல்லுகிறேன்' என்கிறாள். கணவனுக்குக் கோபம் வருகிறது. அவன் ஓங்கி அவளை அறைகிறான். அவள் துள்ளிக் குதிக்கிறாள். உடனே வீடு கலகமாகிறது. கல்யாண சுகம் நன்றாய்த் தெரிகிறது!

நடுவு நிலைமை

எப்பொழுதும் தீர்க்காலோசனை செய்து ஒரு காரியத்திற் பிரவேசிப்பது நன்மை. விவேகிகள் மட்டும் இதை வழக்கத்தில் கொண்டுவருவர். மனிதர்கள் தங்களின் காரியாகாரியங்களையும், நியாயாநியாயத்தையும், தர்மாதர்மத்தையும், குணாகுணங்களையும் தெரிந்துகொண்டு இது நலம், அது கெடுதியென்றறிந்து ஸத் விஷயத்தில் மனதைச் செலுத்தித் தங்கள் நடத்தையைக் கிரமப்படுத்திக்கொள்வது நன்மை. உண்மையாகப் பத்து ஜனங்கள் ஒரு மனிதனைக் கொண்டாடுவார்களேயானால், அவன் யோக்கியனென்றும், உத்தம புருஷனென்றும் அழைக்கப்படுவான். அவனுடைய காரியம் எல்லோருக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கும். அதன்படி அனுஸரிக்க சத்துருக்கள்கூட ஸம்மதப்படுவர். இதுதான் புருஷலக்ஷணமென்போம். எவன் பிறர் சொல்லைக் கேட்டு ஸ்வபுத்தியை யிழந்து தன்னைக்கூட மறந்து அன்னியரைத் தூஷிக்கவும் எதிர்க்கவும் மனமிசைகிறானோ அவனை ஒருவராவது மதியார்; கொண்டாடி யழையார். அதமனுடைய கொள்கையானது ஸத்புருஷர்களுக்கு முற்றிலும் விரோதம்.

உத்தமகுல புருஷ சிகாமணிகள் எப்பொழுதும் தங்களின் புத்திசாதுர்யங்களைப் பலதடவைகளிலும் தங்களுக்குள்ளேயே நடத்திக் காட்டிப் பிறகு மற்றவர்களுக்குப் போதிக்க வருவது நன்மையாகும். இரு கக்ஷிகளின் அபிப்பிராயத்தையும் தன் மனதில் வாங்கிக்கொண்டு, அவற்றிலுள்ள குணதோஷங்களைக் கிரகித்து முடிவுசெய்வதே நடுவு நிலைமைக்கு அழகு. அப்படியின்றி, ஒரு கக்ஷியாரோடு சேர்ந்து மற்றொரு கக்ஷியாரின் நியாயா நியாயங்களைக் கவனியாமலிருப்பது அவிவேகமாம்.

ஈசுவரா! நீயே கர்த்தா. எல்லாம் செய்வதும் நீயே; செய்விப்பதும் நீயே. நான் ஒரு யந்திரம்மாத்திரமே. நீ ஏவினபடியே நான் செய்கிறேன். இவை யாவும் நின் மகிமையே! இவ்வீடும், இக்குடும்பமும் உன்னுடைய அருளே. என்னுடையதென நீ தந்ததே. நீயே அதை நடத்தி ஸம்ரக்ஷிக்கிறாய். நாளை வருவது இன்னதென அறியேன். உமது ஆக்ஞையின்படி நடப்பதற்கே நான் அருகன்.

தன் கணவனின் ஒவ்வொரு வேலையிலும் எந்தப் பெண் 'பங்கு பெறுகிறாளோ அவளே மகராசி. அவளே கணவனை நன்கு அனுபவிக்கப் பிறந்தவள்

"அமிர்த குணபோதினி"

பிரமோதூத வருஷத்திய ஆவணி மாத பஞ்சாங்கம்.

யோகம்	ஆங்கில தேதி	தமிழ் தேதி	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
சி	16	1	ச	ஸப் 57-21, அசு 4-7, ஸிம்மரவி, 18-7, சூன்யதிதி, கொல்லமாண்டு, ரப்யூலவல்மீ 20உ ஸப்தமி அசுபம், மகா கார்த்திகை, அஹஸ் 31-6.
பி-சி	17	2	ஞா	அஷ் 56-44, பா 6·48, சூன்யதிதி, கோகுலாஷ்டமி, கிருத்திகா விரதம், கரிநாள்.
ம-அ	18	3	தி	நவ 54-7, கிரு 7-37, நவமிதிதி, ராமநாதபுரம் உறியடி.
அ-சி	19	4	செ	தச 49-38, ரோ 6-29, ஸ்ரீ ஜயந்தி.
சி	20	5	பு	ஏகா 43-26, மிரு 3-26, உப 55-19, அஹஸ் 30-59.
அ	21	6	வி	துவா 35-46, புந 52-41. [யோதசி திதி.
உ-ம	22	7	வெ	திர 26-58, பூச 45-43, பிரதோஷம், சிவாத்திரி, திர
ம-அ	23	8	ச	சசி 17-25, ஆபி 38-10, கன்யாயனம் 52-21, திதிதுவயம்
ம-சி	24	9	ஞா	● 7-46, உப 50-38, மக 30-34, பிரதமதிதி, கரிநாள்.
சி	25	10	தி	துவி 49-40, பூர 23-25, அஹஸ் 30-56, பாத்திரபதம்.
அ-சி	26	11	செ	திரி 42-0, உத் 17-15, ரப்யூஸாணியீ 1உ ஸ்ரீ பலராம ஜயந்தி, மறைஞான சம்பந்தர், தாமஸ மன்வாதி.
ம-சி	27	12	பு	சது 35-44, ஹஸ் 12-26, விநாயக சதுர்த்தி, ஸாமோ
சி-அ	28	13	வி	பஞ் 31-15, சித் 9-10, ருஷிபஞ்சமி. [பாகர்மம்
சி	29	14	வெ	ஷஷ் 28-41, ஸ்வா 7-47, சம்பா ஷஷ்டி.
சி	30	15	ச	ஸப் 28-5, விசா 8-14, அஹஸ் 30-44, புப்பகார்த்திகை, ஸப்தமி அசுபம்.
ம	31	16	ஞா	அஷ் 29-27, அநு 10-35, ஜ்யேஷ்டாஷ்டமி.
சி	1	17	தி	நவ 32-26, கேட் 14-37,
அ-சி	2	18	செ	தச 36-44, மூல 20-3, ஆவணி மூலம், தசமி அசுபம், மதுரை புட்டுத் திரு நாள், திருவையார் தெப்பம்.
அ	3	19	பு	ஏகா 41-58, பூரா 26-24, ஸர்வைகாதசி. [ஜயந்தி.
சி	4	20	வி	துவா 47-47, உரா 33-31, அஹஸ் 30-35, ஸ்ரீ வாமன
ம-சி	5	21	வெ	திர 53-49, ஶ்ரவ 40-54, ஸிம்ம ஶ்ரவணம் பிரதோஷம்.
சி-அ	6	22	ச	சசி 59-49, அவி 48-18, அனந்த பத்மவிரதம், நடராஜ ரபிஷேகம். [ஸவ மாரம்பம்,
சி	7	23	ஞா	○ 60-0, சத 55-30, கஞ்சி, திருவள்ளூர் - பவத்ரோத்
சி	8	24	தி	○ 5-39, பூட் 60-0. [பம்.
ம-அ	9	25	செ	பிர 10-59, பூட் 2-17, அஹஸ் 30-26, மஹாலயமாரம்
சி-உ	10	26	பு	துவி 15-45, உட் 8-33. [திதி
சி-அ	11	27	வி	திரி 19-37, ரே 13-58, உத்தா கார்த்திகை, சதுர்த்தி
அ-சி	12	28	வெ	சது 22-30 அசு 18-27, அதிதி, கரிநாள்.
சி-அ	13	29	ச	பஞ் 24-12, பா 21-43, கிருத்திகா விரதம், பஞ்சமிதிதி.
சி	14	30	ஞா	ஷஷ் 24-22, கிரு 23-30, அஹஸ் 30-19, ஷஷ்டி திதி.
அ	15	31	தி	ஸப் 22-56, ரோ 23-59, திதிதுவயம், மத்தியாஷ்டமி.

(ஆகஸ்டு (5—8)) (1930௵ செப்டம்பர்)

	ரா		செ,கு
	15உக்கு ராசி.		
			ஜ
ச		கே	பு,சு

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.—1930.